# வரலாற்றில் புதுவை



மூலம் :
ழுவோ. துய்ப்ராய்

தமிழில் :
ரா. தேசிகம்பிள்ளை



இஃது ஒரு புதுவை வரலாற்றுச்சங்க வெளியீடு.

# வரலாற்றில் புதுவை





மூலம்: ழூவோ தூய்ப்ராய்

தமிழில்: ரா. தேசிகம் பிள்ளை

புதுவை வரலாற்றுச் சங்க வெளியீடு

முதற் பதிப்பு: மார்ச் 1975

# பதிப்புரை

புதுவையின் புகழ்மிக்க பாரம்பரியத்தை முதன் முதல் உலகுக்கு அறிவித்தவர் அறிஞர் மூவோ துய்ப்ராய். பிரஞ்சு மொழியிலான அவரது ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் புதுவை வரலாற்றுச் சங்கத்தின் ஆராய்ச்சி ஏட்டில் பல ஆண்டுகளுக்கு முன்பே வெளியாகியுள்ளன. எனினும், அவற்றைத் தமிழறிந்த நல்லுலகமெங்கும் அறிமுகம் செய்விக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன், சங்க உறுப்பினர் திரு. **ரா. தேசிகம் பிள்ளை** அவர்கள் அக் கட்டுரைகளைத் தெளிந்த நற்றமிழில் நமக்கு மொழி பெயர்த்துத் தந்துள்ளார்கள். அன்னாருக்கு இச்சங்கம் என்றும் கடமைப்பட்டுள்ளது. அத்தோடு இந்நூல் வெளியிடுவதன் மூலம் புதுவை வரலாற்றுச் சங்கம் மற்றுமொரு நற்பணியை நிறைவேற்றி வைத்துள்ளது

இத்தொகுதியில் புதுவை நகர் மட்டுமல்லாமல் காரைக்கால், மைலாப்பூர் ஆகிய நகரங்களின் வரலாற்றுப் பின்னணியினை ஆராயும் கட்டுரைகளும் அடங்கியிருப்பினும், பெரும்பாலானவை புதுவை நகர் பற்றியிருத்தலின் இந்நூலுக்கு 'வரலாற்றில் புதுவை' என்ற பொதுவான தலைப்பினை வழங்கியிருக்கின்றோம்.

புதுவை வரலாற்றுச் சங்கத்தின் ஏனைய நூல்களைப் போன்று, இதுவும் வெற்றி நடைபோடும் என்ற நம்பிக்கையோடு தமிழுலகுக்கு இதனை அளிக்கின்றோம்.

இவண்,
**ந. சேதுராமன்**
தலைவர்
புதுவை வரலாற்றுச் சங்கம்.

2 மார்ச் 1975
புதுவை.

# PRÉFACE

A l'aube du XXe siècle, Pierre Loti ne découvre en Pondichéry qu'une "vieille petite ville qui dure par tradition, qui vit parce qu'elle a vécu"; il achève de l'ensevelir sous ses épithètes débilitantes, et Maurice Maindron n'y contredit pas, même si tout l'oppose au voyageur qui le précédait. Bref, dans cette petite colonie, languissant au rythme de ses pendules d'autrefois "dont le tic tac révélait la petite vie persistante, la petite âme vieillotte et anémiée", tout ce qui n'est pas petit est désert, il n'est de grandeur que passée, végétale ou minérale, et d'animation que purement indigène. D'ailleurs, constate Loti, "on ne passe pas par Pondichéry, et qui donc y vient pour y venir?".*

La meilleure réponse, et le plus éclatant démenti à la torpeur coloniale, est sans doute l'arrivée à Pondichéry en 1909 de G. Jouveau-Dubreuil, et l'oeuvre qu'il y accomplit en 27 ans de présence effective. Il rétorquera lui-même, en 1935, "Non! Pondichéry n'est pas une ville morte; c'est une ville calme. Depuis plus de mille ans, elle est vouée aux travaux de l'esprit... Pondichéry, c'est Vedapuri, la ville de l'étude et du recueillement." Paroles plus pompeuses qu'excessives, d'un vrai chercheur un peu visionnaire qui perçoit à travers la société qui l'entoure l'histoire qui la transcende.

Flattée de le savoir érudit et plus prompte à sourire des faiblesses qu'elle lui prêtait qu'à s'offusquer qu'il la dépassât, la société pondichérienne recherchait Jouveau-Dubreuil mais elle ne l'emprisonnait pas. Alors qu'hier comme aujourd'hui elle tendait à réduire le monde à ses dimensions pondichériennes, il sut, lui, faire éclater Pondichéry aux dimensions du monde. Son chauvinisme - car il fut parfois chauvin - est affaire de langage, mais son savoir est sans frontière.

---

* *L'Inde (sans les Anglais)*, Ch. XI et XIII, *passim.*

A peine débarqué, il visite le Sud de l'Inde et le Deccan, et en une dizaine d'années achève la fresque qui va de *l'Archéologie du Sud de l'Inde* à *l'Histoire Ancienne du Deccan* et constitue le meilleur de son oeuvre en même temps qu'elle assure sa notoriété. La liste de ses premiers correspondants indiens est flatteuse: T.A. Gopinatha Rao, S. Krishnaswami Aiyengar, T. G. Aravamuthan, et K. A. Nilakanta Sastri qui lui écrira en juillet 1940 "You have always represented France to me and all that is best in that great land."

Sa synthèse de l'art dravidien a posé des cadres et défini des modèles auxquels les études ultérieures demeurent étroitement asservies, comme en témoignent encore aujourd'hui les publications de S. R. Balasubrahmanyam sur l'art Chola aussi bien que la pratique de certains sthapati du Sud de l'Inde. Sans doute l'inventaire des antiquités Pallavas s'est-il enrichi et précisé, et de nouvelles recherches sur la grammaire des formes ou les techniques de taille et de construction nous orientent-elles vers une histoire différente et d'autres définitions stylistiques, mais l'oeuvre du découvreur garde sa fraîcheur, ses intuitions leur profondeur, et la synthèse esquissée son ampleur. De plus cet homme qui n'était pas philologue scrutait les inscriptions avec une minutie de paléographe qui reste une leçon pour tous les aventuriers de l'épigraphie. Enthousiaste mais méthodique, passionné mais rigoureux, il démontrait avec éclat qu'à Pondichéry, selon ses propres termes, "la France ne possède qu'un pied à terre, mais [que] de là elle peut étudier l'Inde." Et, prophète en son pays d'adoption, il ajoutait: "On devrait y créer un centre de recherches attaché à l'Ecole Française d'Extrême-Orient." C'était en 1935; aujourd'hui, c'est l'institution même qu'il appelait de ses voeux qui continue ses travaux, parfois sur les sites qu'il fut le premier à signaler, tel Panamalai, ou, après

son disciple immédiat P. Z. Pattabiramin, Françoise l'Hernault et Jacques Dumarçay étudient l'art Pallava.

S'il n'a pu explorer directement que la province dravidienne de l'Inde, ses curiosités l'ont vite porté jusqu'aux frontières, sur les traces du bouddhisme ou de Kanishka, et bientôt, au delà des frontières; il se laissera fasciner par les rapports entre l'Inde et le monde occidental depuis les débuts du commerce romain jusqu'à l'époque qui constitue pour lui l'épopée coloniale, bref - le raccourci est le sien - "d'Auguste à Dupleix". Cette nouvelle exploration dans le temps et les archives devait souvent ramener Jouveau-Dubreuil à Pondichéry dont il entreprend de fouiller le sol, d'interroger les pierres et de raconter l'histoire. De plus, affaibli, après 1932, par une fièvre typhoïde, il doit limiter ses tournées, accumuler les lectures plutôt que les kilomètres de mauvaises routes. Enfin la sociabilité pondichérienne l'encourage, avide de ses propos, complice de ses mythes, sous le drapeau de Dupleix redécouvert par Mme Gaebelé.

Ce sont quelques uns des résultats de ce dernier aspect de son activité que la Société Historique de Pondichéry a choisi de publier, dans l'élégante et fidèle traduction tamoule de M. R. Desigan Pillai. Une première moisson de ces articles écrits entre 1931 et 1939 dans *Le Semeur* et republiés dans le tome VIII de la *Revue Historique de l'Inde Française*, illustrait avec plus de force ce qui est à nos yeux le thème le plus riche des enquêtes pondichériennes de Jouveau-Dubreuil: l'histoire de la ville s'étend sur deux mille ans! Cela se traduit pour lui par de magnifiques images; Pondichéry ce fut d'abord l'emporium romain de Virampatnam, la Podoukè de Ptolémée et du *Périple de la Mer Erythrée*, puis la Vedapuri tamoule médiévale voisine de Bahour et de la patrie de Karaikkal Ammaiyar, avant que les documents danois, hollandais,

portugais, anglais et français ne viennent attester son caractère cosmopolite dans les temps modernes: "Il y a donc deux mille ans que les Européens et les habitants de Pondichéry collaborent pour la prospérité de ce port", conclut-il. Seule cette large perspective humaniste dégage l'histoire locale de l'anecdote et lui donne son sens plein. Il faut remercier Jouveau-Dubreuil moins d'avoir écrit sur l'histoire de Pondichéry, que de nous avoir appris à lire le récit des événements pondichériens dans leur contexte culturel indien ou international, et force est de reconnaître qu'il n'a lui-même jamais mieux parlé de Pondichéry que lorsqu'il savait s'en abstraire.

En d'autres occasions, son imagination fut trop généreuse, sa plume trop éloquente; le récit rejoint le mythe et l'imagerie d'Epinal: Jouveau-Dubreuil n'est plus l'historien mais l'hagiographe de Dupleix ou de Pondichéry. Il lui arrive même d'oublier qu'il est plein d'humour. L'accident est trop commun à Pondichéry surtout parmi les notables, pour qu'on lui en fasse grief et l'enflure des personnages y est trop chronique pour qu'on lui reproche celle, occasionnelle et bénigne, de ses propos. Sachons lui gré, au contraire, d'avoir piqué notre curiosité et de nous avoir laissé quelques énigmes à résoudre.

Par exemple, à propos des colonnes du pier, il nous égare sur la piste d'un Naik de Gingi alors qu'il apparaît probable que c'est Dupleix lui-même qui fit sculpter ces colonnes à Pondichéry... C'est du moins ce que suggère l'article de Mireille Lobligeois sur *Un projet de Fontaine à Pondichéry en 1820* (R.H.P. tome X 1972).

Mais si elle nous a tout dit sur le projet de 1820, la fontaine actuelle garde son secret. Sur la façade sud, Jouveau-Dubreuil a remarqué un jour une inscription qu'il attribue à Dupleix. Il a peut-être bien raison. Mais

en quelles circonstances, sous Napoléon III, avait-on exhumé cette inscription? Qui prit la décision d'en faire graver une autre, réplique de la première, pour célébrer en termes voisins l'érection de la fontaine publique de 1862 par le Gouverneur Alexandre Durand D'Ubraye? Les deux plaques sont si semblables que seul un examen attentif révèle que la gravure de celle de Dupleix est d'une technique supérieure, cependant que l'autre est peut-être gravée, comme les deux larges inscriptions de la façade ouest, par l'asari Ougramourti ou un de ses collègues anonyme. Il serait intéressant d'arracher aux documents d'archives sur la construction de cette fontaine une information précise sur la provenance exacte de cette inscription de Dupleix qui paraît être à l'origine des trois autres et que seule la paléographie en distingue. Le texte latin ne parle en effet qu'en termes solennels mais vagues de "ces bastions et remparts marins" c'est-à-dire du fort de Pondichéry en général, tandis que Jouveau-Dubreuil, au prix d'une traduction tendancieuse y voyait une référence précise à la Porte Marine achevée en 1745, lisant entre les lignes toute l'histoire des premiers travaux de Dupleix pour renforcer la défense du port.

Sourcier bien souvent, mais parfois visionnaire, Jouveau-Dubreuil à propos du tombeau de Bussy nous laisse encore aux prises avec un mystère non éclairci. La rigoureuse étude d'Alfred Martineau (R.H.I.F.t.II) s'achevait sur des considérations pessimistes, un tombeau vide, des cendres perdues... Encore avait-il omis dans le récit par Thiriot de la première inhumation en 1785 le détail le plus sordide: les entrailles et le foie du vaillant marquis dérobés après l'autopsie et proposés "au quartier" c'est-à-dire à la troupe "comme provenant d'un porc frais"! Le marché échoua de justesse... Le patriotisme de Jouveau-Dubreuil se refuse à ces évidences triviales et fonde sur l'hypothèse (consolante

mais sans l'ombre d'une preuve écrite) que se permet Martineau d'une "cérémonie expiatoire", sous les Anglais en 1793, une certitude qui rejoint la croyance populaire: le tombeau de Bussy repose toujours dans l'ancienne église des Capucins! Pourquoi personne n'a-t-il encore entrepris la fouille assez simple que suggérait Dubreuil pour vérifier son hypothèse ou la ruiner définitivement?

Peut-être la réponse à cette question tient-elle dans le fait que les articles d'histoire locale de Jouveau-Dubreuil n'ont pas trouvé le même public que ses études archéologiques sur le Sud de l'Inde. Le très remarquable portrait qu'a tracé Jean Renault en 1953 de *Jouveau-Dubreuil à Pondichéry* n'a pas davantage secoué l'indifférence. On mesure à relire son petit livre à quel point le souvenir de l'homme s'est déjà estompé dans l'apathie générale. Il faisait état, par exemple, de nombreux textes inédits sur la ville elle-même, un guide, une histoire sommaire écrite en 1936, un plan de musée en 8 salles... Ces documents importants sont probablement perdus aujourd'hui. C'est pourquoi il était nécessaire de traduire en tamoul les pages que Jouveau-Dubreuil a consacrées à Pondichéry, pour leur contenu et pour leur exemple. C'est pourquoi il faudrait traduire aussi cette belle évocation, par Jean Renault, de l'homme et du savant, pour qu'à travers sa biographie on apprécie son oeuvre pour imiter son action. Sa vie comme ses livres enseignent en effet qu'avec le savoir, l'enthousiasme, la curiosité et le désir de comprendre, il reste beaucoup à découvrir, même à Pondichéry. Le meilleur hommage que puissent rendre à G. Jouveau-Dubreuil ceux qui font son éloge ou se recommandent de lui n'est plus de le répéter mais de poursuivre après lui, comme lui, une enquête minutieuse et passionnée.

**François GROS**

Pondichéry, 1er Avril 1975

# மதிப்புரை
## (பிரெஞ்சு மதிப்புரையின் தமிழ் வடிவம்)

"புதுவை அதன் பாரம்பரியத்தினால் மட்டுமே நிலை-பேறுடைய ஒரு தொன்மைச் சிற்றூர்." இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புதுவையைக் கண்ட பியேர் லொத்தி என்பவரின் கருத்து இது. பெருமையற்ற இவ்வடைமொழிகளால் இவர் புதுவையின் சிறப்பைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டார். அவரையடுத்து வந்த மோரிஸ் மேந்திரோன் என்பவர் பியேர் லொத்திக்கு முற்றிலும் மாறுபட்டவராக இருந்தபோதிலும் அவர் இக்கருத்தினை மறுக்கவில்லை. கால ஓட்டம் எழுப்பும் நாதத்தில் இச்சிறு குடியிருப்பு அயர்ந்து உறங்கிக்கிடந்தது. அதன் நாடித் துடிப்பு இச்சிற்றூரின் நிலையான உயிரோட்டத்தையும் புராதனப் பெருமையெனும் மெல்லிய ஆன்ம சக்தியையும் எடுத்துக் காட்டியது. பழமைப் பெருமையும் இயற்கை வளமும் விரிந்து கிடக்கும் நிலமும் ஈங்குச் சிறப்புப் பெற்றிருந்தன. ஆனால் இச்சிறப்புகளனைத்தும் வெறிச்சோடிய பாலையாகவே தோற்றமளித்தது. இங்கு வாழ்ந்துவந்த மக்கள் மட்டுமே இச்சிற்றூரின் உயிர்நாடியாக விளங்கினார்கள். "புதுவை வழியாக யாரும் வருவதில்லை, யார்தான் இங்கு வர விரும்புவார்?" என்று பியேர் லொத்தி வினவுகிறார்.

ழுவோ துப்ரேய் 1909-ஆம் ஆண்டில் புதுவைக்கு வந்து இருபத்தேழு ஆண்டுகள் இங்குத் தங்கியிருந்து ஆற்றிய அருந்தொண்டு இவ்வினாவிற்கு ஏற்ற விடையளித்ததோடு, இக்குடியிருப்புப் பகுதி உறக்கத்தில் ஆழ்ந்திருக்கவில்லை என்னும் உண்மையைத் தெள்ளென விளக்கியது. "புதுவை உயிரோட்டமற்றதொரு நகரமன்று. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஆன்மீக நெறியில் ஆழ்ந்து, அமைதி கொஞ்சும் வேதபுரி, கல்வியும் தவநெறியும் இணைந்து துலங்கும் மூதூர்" என்று 1935-ஆம் ஆண்டில் ழுவோ துய்ப்ரேய் இதனைச் சிறப்பித்துக் கூறுகிறார். இவரது இக்கூற்று சற்று மிகையாகத் தோன்றினாலும் புதுவைக்குப் பெருமை தரக்கூடிய அடைமொழி இது. தன்னைச் சூழ்ந்துள்ள சமூகத்தைக் கருத்தில் கொண்டு அதன் அடிப்படை வரலாற்றைக் கண்ணுற்ற தீர்க்க தரிசனமுள்ள ஓர் ஆராய்ச்சியாளரின் கூற்று இது.

புதுவைப் பெருங்குடியினர் ழூவோ துய்ப்ரேயின் அறிவாற்றலை உணர்ந்து இறும்பூதெய்தினர். அவரிடமுள்ள குறைகளைப் பொருட்படுத்தவில்லை. அவரது பெருமையினைக்கண்டு அழுக்காறு கொள்ளவில்லை. அவரைப் பெரிதும் விரும்பி நாடினர். ஆனால், அவரோ இத்தளைகளில் சிக்கிக்கொள்ளவில்லை. இவர்கள் உலகத்தைப் புதுவையின் எல்லைக்குள் கொண்டுவர முயன்றதற்கு மாருக, அவர் புதுவையை உலக அளவிற்கு உயரச் செய்தார். அவரது நாட்டுப் பற்று சொல்லளவில் மட்டுமே நின்றது: அறிவாற்றலோ எல்லையற்று விரிந்தது.

ழூவோ துய்ப்ரேய் புதுவைக்கு வந்தவுடன் தக்கணத்தையும் பாரதத்தின் தென பகுதிகளையும் சென்று பார்வையிட்டார். பத்து ஆண்டுகளுக்குள்ளேயே, தென்னிந்தியாவின் புதைபொருள் ஆய்வு முதல் தக்கணத்தின் புராதன வரலாறு வரை சித்தரித்து முடித்தார். இச்சாதனை அவரது உழைப்புக்கோர் சிகரமாகவும் புகழுக்கோர் வித்தாகவும் அமைந்தது. "பிரான்சு மற்றும் அதன் தனிச் சிறப்பியல்புகளின் பிரதிநிதியாக நீங்கள் எனக்கு என்றும் தோன்றுகிறீர்" என்று ஜூலை 1940-இல் ழூவோ துய்ப்ரேயைப் பற்றி குறிப்பிட்ட திரு. நீலகண்ட சாஸ்திரி மற்றும் திருவாளர்கள் டி. ஏ. கோபிநாத் ராவ், எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், டி. ஜி. ஆராவமுதன் ஆகியோர் ஆரம்ப காலத்தில் அவருடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தவர்களின் பட்டியலில் சிறப்பிடம் பெற்றிருப்பது மிகவும் பெருமைக்குரிய செய்தியாகும்.

அவர் வகைப்படுத்தி அமைத்த திராவிடக்கலை ஆய்வுத் திரட்டு பிற்கால ஆராய்ச்சியாளர்கள் பின்பற்றிச் செல்வதற்கு ஒரு முன்மாதிரியாக அமைந்தது. திரு. எச். ஆர். பாலசுப்ரமணியன் அவர்களின் சோழர் காலக் கலைப் பணிகள் பற்றிய வெளியீடுகளும் தென்னிந்தியச் சிற்பிகள் கையாண்ட சிற்ப முறையும் இதற்குச் சான்ருக அமைகின்றன. இவர் அமைத்த பண்டைப் பல்லவர்களின் கால வரிசை முறை தற்போது திருத்தியமைக்கப் பட்டுத் தெளிவுபெற்றுள்ளது. உருவ அமைப்பு முறைகளில் செய்யப்பட்ட புதிய ஆய்வுகள் தற்போது வரலாற்றிற்கும் கலை விளக்கங்களுக்கும் வேறு திருப்பத்தைத் தந்திருக்கின்றன. ஆனலும், அவர் படைப்பில் புதுமை நிலைப்பெற்றுள்ளது. உள்ளுணர்வில் தோன்றிய கருத்துக்

கள் ஆழமுடையதாக உள்ளன. ஆய்வுகளின் வரிசை முறைவைப்பு விரிவாயமைந்துள்ளது. இவர் மொழியியல் வல்லுநரில்லையெனினும் எழுத்தியல் வல்லுநர்களைப் போல் கல்வெட்டுக்களை நுட்பமாக ஆராய்ந்தார். கல்வெட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு இது சிறந்த எடுத்துக்காட்டாயமைந்தது. இவர் ஆர்வத்தோடு செயல்படக்கூடியவர்; ஆனால் எதையும் எண்ணித் துணிபவர். அன்புக்கு எளியவர்; ஆனால் கடமையில் கண்டிப்பானவர். "பிரான்ஸ் நாட்டிற்குப் புதுவை ஒரு கலைப்பாறும் விடுதியாக உள்ளது. ஆயினும் இப்புதுவையின் வாயிலாகப் பாரதத்தின் முழுமையையும் காணலாம்" என்று இவர் கூறியுள்ளார். மேலும், தன்னைத் தத்தெடுத்த நாடாகிய புதுவையைப்பற்றிக் குறிப்பிடும்போது "கீழ்த்திசை நாடுகளின் பிரெஞ்சு ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து இயங்கும் ஒரு நிறுவனத்தை இங்கு ஏற்படுத்தவேண்டும்" என்று தீர்க்க தரிசனத்துடன் 1935-ஆம் ஆண்டிலேயே இவர் கூறினார். அவருடைய விருப்பத்தை இங்குள்ள இந்நிறுவனம் இன்று நிறைவேற்றிவருகிறது. இவர் முதன்முதலில் கண்டுபிடித்த பனமலை போன்ற சில வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்களை இந்நிறுவனம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளது. அவரது மாணவர் திரு. பி. இசட். பட்டாபிராமனும், இவருக்குப்பின் செல்வி பிரான்சுவாஸ் லெர்னே, திரு. மாக் துமார்சே ஆகியோரும் பல்லவரின் கலையாராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

திராவிடத்தின் உட்பகுதிகளை நேரிற் சென்று ஆய்வு செய்தபின், மேலும் ஆர்வம் கொண்டு அதன் எல்லைவரை சென்று பௌத்தம் கனிஷ்கம் ஆகிய மத ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். திராவிடப் பகுதி முழுவதையும் முடித்த பிறகு, அவ்வெல்லைக்கப்பாலும் தம் ஆய்வினை மேற்கொண்டார். பாரதத்திற்கும் மேற்கத்திய நாடுகளுக்குமிடையே உள்ள தொடர்பு அவரை வெகுவாகக் கவர்ந்திழுத்தது. யவன வாணிகம் ஏற்பட்ட காலம் முதல் இங்கு மேற்கத்திய ஆதிக்கத்தின் இதிகாச காலம் வரை ஆராய முற்பட்டார். இதற்கு "ஒகிஸ்திலிருந்து துய்ப்ளேக்ஸ் வரை" என்று பெயர்கொடுத்தார். இவர் மேற்கொண்ட புதிய கால ஆராய்ச்சியும் ஆவணக் கருவூல ஆராய்ச்சியும் இவரை அடிக்கடி புதுவையைப் பற்றி சிந்திக்கச்செய்து, புதைப் பொருள் ஆய்வில் ஆழ்ந்து ஈடுபடச் செய்தன. இவர் கற்களோடு உரையாடினார். வரலாற்றினைக்கண்டு தெளிந்தார்.

1932-ஆம் ஆண்டில் டைபாய்டு நோயால் பாதிக்கப்பட் டார். உடற்சோர்வினல் பயணங்கள் குறைந்தன. கரடு முரடான பாதைகளில் நீள் பயணம் செய்வதைக் குறைத் துக்கொண்டு பலவற்றைப் படித்தறிவதில் கவனம் செலுத்தினர். திருமதி கெப்ளே கண்டுபிடித்த துய்ப்ளே க்ஸ் கொடியின் அதிகாரத்தின் கீழ் கூடிய பெருங்குடி மக்கள் இவரது ஆய்வுப் பணிக்கு ஊக்கம் அளித்தனர். அவரது பேச்சுக்களையும் கதைகளையும் ஆவலுடன் கேட்டனர்.

திரு. எம். ஆர். தேசிகன்பிள்ளை தமிழில் செம்மையாக மொழிபெயர்த்தருளிய மூவோ துய்ப்ரேயினுடைய ஆய்வு களின் இறுதிப் பகுதியைப் புதுவை வரலாற்றுச் சங்கம் வெளியிட முன்வந்துள்ளது. 1931–1939 ஆகிய ஆண்டு களுக்கிடைக்கப்பட்ட காலத்தில் "செமேர்" என்ற பத்திரிகையில் வெளிவந்துள்ள கட்டுரைகளின் தொகுப்பு புதுவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைக் கோப்பின் எட்டா வது பாகத்தில் மறுபடியும் வெளியிடப்பட்டுள்ளது. மூவோ துய்ப்ரேயின் புதுவை பற்றிய ஆய்வுவளம் எவ் வளவு சிறப்புடைத்து என்பது இதன்மூலம் நமக்குப் புலப்படுகிறது. ஈராயிரம் ஆண்டுகால வரலாற்றுச் சிறப் புடையது புதுவை! அவ்வரலாறு மூவோ துய்ப்ரேயின் கருத்துக்கு அற்புத ஓவியங்களாகத் தோன்றின. புதுவை முதன்முதலில் யவனர்களின் வணிகத்தளமான வீராம்பட்டி னமாகவும், தாலமிக்கும் எரித்திரேயக் கடல் பெரிப்பிளசுக் கும் பொதுக்கேயாகவும், பின்னர் இடைக்காலத் தில் பாகூரை அடுத்து விளங்கிய செந்தமிழ் வேதபுரியாக வும், காரைக்கால் அம்மையாரின் தாய்நாடாகவும் இருந்து பிற்காலத்தில் ஹாலந்து. போர்ச்சுகீஸ், இங்கிலாந்து. பிரான்சு ஆகிய நாடுகளின் ஆவணக் குறிப்புகளால் பன்னாட்டவர் வாழும் ஊராகவும் காட்சியளித்தது. "இருபது நூற்றாண்டுகளாக மேனாட்டவரும் புதுவை மக்களும் இத்துறைமுகத்தின் வளர்ச்சிக்காக இணைந்து பாடுபட்டிருக்கின்றனர்" என்று அவர் கூறி முடிக் கிறார். பரந்த நோக்கமுள்ள இக்குறிப்பின் மூலம் உள் நாட்டு வரலாற்றுச் சிறப்புக்களையெல்லாம் அவர் எடுத் துக் காட்டுகிறார். மூவோ துய்ப்ரேய்க்கு நாம் நன்றி செலுத்துவது அவர் புதுவை வரலாற்றை எழுதியதற்காக மட்டுமல்ல. இங்கு நடந்த நிகழ்ச்சிகளை இந்தியக் கலாச் சாரத்தோடும் சர்வதேசக் கலாச்சாரத்தோடும் இணைத்து

நோக்க நமக்குக் கற்றுக்கொடுத்ததற்காக நாம் அவருக்குப் பெரிதும் நன்றி செலுத்தவேண்டும். அவர் புதுவை பற்றிய குறிப்புக்களை மிகுதியாக விவரிக்காமல் சுருங்கச் சொல்லும்போதுதான் மிகச் சிறப்பாக அதைப்பற்றிச் சித்தரிக்கிறார் என்பதையும் நாம் உணரவேண்டும்.

சில சமயங்களில் அவரது கற்பனை மிகையாகத் தோன்றும். நடையோ எழில்பெற்றுச்சிறக்கும். அவரது குறிப்புக்கள் புராணக் கதை போன்றும் எபினலின் சித்திரக்கூடம் போன்றும் விளங்கும். மூவோ துய்ப்ரேய் வரலாற்றாசிரியராக விளங்கியதைவிடத் துய்ப்ளேக்சுக்கும் புதுவைக்கும் தெய்வத்தன்மை கொடுத்து எழுதிய ஒரு தெய்வப் புலவராக விளங்கினர். எப்பொழுதுமே மற்றவர்களுடன் நகைச்சுவையோடு பழகும் இயல்புடைய இவர், துய்ப்ளேக்ஸ் பற்றிய வரலாற்றினைக் கூறும்போது மட்டும் தன்னை மறந்துவிடுகிறார். இத்தகைய நிகழ்ச்சிகள் புதுவைவாழ்பெரும் புள்ளிகளிடம் தற்செயலாக நடப்பது வழக்கமாக இருந்துவந்தது. இவை அவரது எழுத்துக்களில் மிக அரிதாக வருவதால் நாம் அவற்றைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. குறிப்பாக மக்களைப் பற்றிப் பேசும்பொழுது காணப்படும் மிகைக் கூற்றுகளை நாம் கருத்தில் கொள்ளத் தேவையில்லை. அவர் விட்டுச் சென்ற சில தெளிவில்லாச் செய்திகளை நாமே விளைவித்துக் கொள்ளும் ஆர்வத்தை நமக்கு அவர் ஊட்டிச் சென்றுள்ளார்.

எடுத்துக்காட்டாக, பழைய கடற்பாலம் இருந்த இடத்தில் உள்ள கற்றூன்களைப்பற்றிக் கூறும்போது அதைச் செஞ்சி நாயக்கர்களுடன் தொடர்புபடுத்தி நம்மைத் திசை திருப்புகிறார். ஆனால் இக்கற்றூண்களைத் துய்ப்ளேக்சே செதுக்கச் செய்திருக்கலாம் என்பதாகத் தோன்றுகிறது..... 1820-ஆம் ஆண்டில் புதுவையில் நீர்க்குழாய் அமைக்கும் திட்டத்திற்கான விபரங்களைச் செல்வி மிரேய் லொபிலிழுவா எனபவர் 1972-இல் புதுவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைக் கோப்பின் பத்தாவது பாகத்தில் வெளியிடப்பட்ட குறிப்பில் கூறியுள்ளார்.

மேற்கூறிய 1820-ஆம் ஆண்டின் திட்டத்தைப்பற்றி முழு விவரமும் தரப்பட்டிருந்தும், நீர்க்குழாய் தன்னுடைய பதிரை விடுவிக்கவில்லை. இதன் தென்பாகத்துக் கல்வெட்டுக்குறிப்பை ஆராய்ந்த மூவோ துய்ப்ரேய் அது

துய்ப்ளேக்சால் ஆக்கப்பட்டிருக்கும் எனக் கருதினர், அது உண்மையாக இருக்கலாம். ஆனால், எக்காரணத்தினால் மூன்றும் நெப்போலியன் காலத்தில் இக்குறிப்பை வெளிக்கொணர்ந்தார்கள்? 1862-இல் கவர்னராயிருந்த அலெக்சாந்தர் துய்ரான் துய்ப்ராய் என்பவர் பொது நீர்க்குழாயை அமைத்தபோது முதலுக்கு நகலாக அதே சொற்களைக் கொண்ட மற்றொரு கல்வெட்டை அமைக்க முடிவுக்கு வந்தது யார்? என்ற கேள்விகள் எழுகின்றன. இரண்டு கல்வெட்டுக்களுக்குமுள்ள வேற்றுமைகளைக் கண்டறிய வேண்டுமாயின் அது நுண்ணிய ஆராய்ச்சியால் மட்டுமே இயலும். துய்ப்ளேக்ஸ அமைத்த கல்வெட்டு உயர்ந்த தொழில் நுட்பத்தைக் கொண்டது. மற்றொரு கல்வெட்டு மேற்குப் பக்கத்தில் காணப்படும் இரண்டு பெரிய கல்வெட்டுக்களைச் செதுக்கிய உக்ரமூர்த்தி ஆசாரியாலோ அல்லது பெயர் தெரியாத அவரது நண்பர் ஒருவராலோ அமைக்கப்பட்டிருக்கலாம். இந்நீர்க்குழாய் கட்டப்பட்டதன் முழுத் தகவல்களையும் ஆவனக் கருவூலத்தில் இருக்கும் குறிப்புகளிலிருந்து ஆராய்ந்து தெளிவோமானால் துய்ப்ளேக்சால் அமைக்கப்பட்ட கல்வெட்டின் மூலத்தை அறிந்துகொள்ள இயலும். இதுவே மற்ற மூன்று கல்வெட்டுக்களின் தோற்றத்திற்கும் ஆதாரமாயிருக்கும். எழுத்தியல் வல்லுநர் மட்டுமே இவற்றின் வேறுபாடுகளை உணர முடியும். லத்தீன் மொழிக் குறிப்பொன்றில்" தூண்களைப்பற்றிய செய்தியும் கடல் அரணைப் பற்றிய செய்தியும்" அதாவது, புதுவை கோட்டையைப் பற்றிய செய்தி பிடுக்கான நடையில் ஆனால் தெளிவில்லாது கூறப்பட்டுள்ளது; புதுவைத் துறைமுகத்தினைத் துய்ப்ளெக்ஸ் பலப்படுத்த எடுத்துக்கொண்ட முதல் முயற்சிகளை பற்றிய வரலாற்றினைக் கூறும் இவ்வரிகளை மூவோ ஆய்ப்ரேய் படித்து மொழி பெயர்த்தபோது 1745-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பெற்ற கடற்புற வாயிலைப் பற்றிய குறிப்புகளைத் தம் சொந்தக் கருத்துக்களுடன் இணைத்துக் குறிப்பிடுகிறார்:

பெரும்பாலும் ஆழ்ந்த நோக்கும், சில நேரங்களில் தொலை நோக்குத்திறமும் பெற்ற இவர், புய்சியின் கல்லறையைப் பற்றிய ஓர் இரகசியத்தை விளக்காமல் விட்டுச் சென்றார். புய்சியின் கல்லறை வெற்றிடமென்றும் அவரது அஸ்திகள் மறைந்துவிட்டனவென்றும் ஆல்பிரட் மர்த்தினே என்பவர் பிரஞ்சிந்திய வரலாற்று ஆய்வுக்

கோப்பின் இரண்டாவது பாகத்தில் தமது ஆழ்ந்த ஆராய்ச்சியின் மூலம் குறிப்பிடுகிறார். 1785-இல் நடைபெற்ற முதல் சவ அடக்கத்தைப் பற்றித் திரியோ என்பவர் எழுதிய அருவருப்பான செய்தியை இவர் விட்டுவிட்டார். "வீரமர்க்கியின் குடலும் ஈரலும் பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு திருடப்பட்டு, சிப்பாய்களிடம் பன்றி இறைச்சி என விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டன. ஆனால் சரியான நேரத்தில் உண்மை கண்டு பிடிக்கப்பட்டது, ழுவோ துய்ப்ரேயின் நாட்டுப் பற்று இந்த அருவருப்பான உண்மையை ஏற்க மறுத்தது. 1793-இல் ஆங்கிலேயரின் ஆட்சியில் ஓர் ஈமச்சடங்கு நடந்ததாக மர்த்தினோ குறிப்பிடுகிறார். மக்கள் நம்பிய இந்தச் செய்தியை ழுவோ துய்ப்ரேயும் எந்தவித எழுத்து ஆதாரமுமின்றி ஆறுதலுக்காக ஏற்றுக்கொண்டார். அவரது நம்பிக்கையின்படி புய்சியின் கல்லறை பழைய கப்புய்சின் கோவிலில் இருக்கிறது. புய்சியின் கல்லறையைத் தோண்டிப் பார்த்து ழுவோ துய்ப்ரேயின் அனுமானத்தைச் சரி என்று ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது அதைத் தவறென்று மறுப்பதற்கோ ஏன் யாரும் முன்வரவில்லை?

ழுவோ துய்ப்ரேயின் புதைபொருள் ஆராய்ச்சிகளுக்குத் தென்னிந்தியாவில் வாசகர்கள் கிடைத்தது போன்று உள்நாட்டு வரலாறுகளைக் கூறும் அவருடைய குறிப்புக்களைப் படிப்பதற்கு வாசகர்கள் இல்லாமற் போனதால் மேலே எழுப்பப்பட்ட வினாவிற்கு விடை கிடைக்காமல் போய்விட்டது, ழான் ரெனே என்பவர் 1952-இல் தாம் எழுதிய "புதுவையின் ழுவோ துய்ப்ரேய்" என்ற நூலில் துய்ப்ரேயைச் சிறப்பான முறையில் படம்பிடித்துக் காட்டியிருந்தும் வாசர்களின் பாராமுகத்தின் காரணமாக இவர்களது கவனத்தை இந்நூல் ஈர்க்க முடியவில்லை ழுவோ துய்ப்ரேயின் நினைவு அழிந்துவிட்டதென்பது இதனால் விளங்குகிறது. 1936-ஆம் ஆண்டில் ழுவோ துய்ப்ரேய் எழுதிய வரலாற்றுச் சுருக்கத்தாலும் புதுவையைப் பற்றி வெளியிடப்படாத பல குறிப்புகளின் வாயிலாகவும் எட்டு அறைகள் கொண்ட பொருட்காட்சியொன்றை அமைப்பதற்காக உருவாக்கிய திட்டத்தாலும் பிறவற்றாலும் அவர் நம்மிடையே ஒரு வழிகாட்டியாக இருக்கிறார். இத்தகைய முக்கியமான ஆவணங்கள் இன்று காணாமற் போயிருக்கக்கூடும். எனவே, புதுவை

யில் ழூவோ துய்ப்ரேய் ஆற்றியுள்ள பணிகளைப் பற்றிய கருத்துச் செறிவான, சான்று பகரக்கூடிய ஏடுகளைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்குவது இன்று அவசிய மாகின்றது. அதோடு, சாதாரண மனிதராகவும் அதே நேரத்தில் அறிஞராகவும் தோன்றும் ழூவோ துய்ப்ரே யைப் பற்றிய ழான் ரெனுவின் சிறப்பான கருத்துக் களையும் மொழிபெயர்ப்பது அவசியமாகின்றது. ஏனெனில் வாழ்க்கைக் குறிப்பைப் படிப்பதன் வாயிலாக அவரது உழைப்பைப் பின்பற்றுவதற்கும் அவரது தலையாய படைப்புகளைப் பாராட்டுவதற்கும் வழி ஏற்படுகிறது. அறிவாற்றலோடு ஆர்வமும் புரிந்துகொள்ளும் திறனும் வாய்க்கப்பெற்றால், ஆய்ந்து கண்டுபிடிப்பதற்கென புதுவையில் இன்னுங்கூடப் பல இருக்கின்றன என்னும் உண்மையினை அவருடைய வாழ்க்கை வரலாறும் நூல்களும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அவரது புகழ் பாடுபவர்களும் அவரைப் பின்பற்றுபவர்களும் நடந்ததையே கூறிக்கொண்டிராமல், நுண்ணிய ஆய்வில் தங்களது மனதைப் பதித்து, அவர் விட்டுச் சென்ற பணியினைத் தொடர்ந்து நிறைவேற்றுவதே அவருக்குச் செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்.

இவண்,

புதுவை, 1-4-1975 } **பிரான்சுவா குரோ**

தமிழ் மொழி பெயர்ப்பு:

**திருமதி மதனகல்யாணி சண்முகானந்தன், M.A,**



(1 ஜனவரி 1885 — 14 ஜூலை 1945)

புதுவையின் வரலாற்றுச்
சிறப்பினை உலகினுக்கறிவித்த
**வரலாற்றறிஞர் மூவோ துய்ப்ராய்**
அவர்களின் நினைவுக்கு
**அஞ்சலி**

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | புதுச்சேரியின் பெயர் வரலாறு. | 1 |
| 2. | பிரான்சுவா மர்த்தேன் காலத்தில், பாரிஸ் மாநகரத்தின் அந்நியநாட்டு மத அலுவலர்கள். | 7 |
| 3. | 'பீர்' என வழங்கும் புதுவைக்கடற்பாலத்தின். முகப்புத் தூண்கள் | 19 |
| 4. | புதுச்சேரியின் துறைமுகம். | 24 |
| 5. | 1699-ஆம் ஆண்டுக்காலத்திய புதுச்சேரியின் அமைப்பினைக்காட்டும் வரைபடம். | 30 |
| 6. | புதுச்சேரியும் இந்திய வணிகக் கழக ஸ்தாபிதமும். | 40 |
| 7. | பண்டைய வரலாறும் நவீன வரலாறும்–செஞ்சியில் பிரஞ்சு நாட்டுப் போர்வீரர்கள். | 48 |
| 8. | 'தூய்ப்ளேக்ஸ்' என்பாரின் கொடி. | 54 |
| 9. | 1635-ஆம் ஆண்டில் குறிக்கப்பெற்ற புதுச்சேரி. | 62 |
| 10. | மைலாப்பூரில் செயின்ட் தாமஸ். | 64 |
| 11. | 11-ம் நூற்றுண்டில் காரைக்கால். | 70 |
| 12. | காரைக்காலில் ஹாலண்டுக்காரர்களின் வணிக நிறுவனம். | 73 |
| 13. | காரையில் பிரஞ்சு நாட்டவர்களின் முதற்குடியேற்றம் | 76 |
| 14. | புஸ்ஸி அவர்களின் கல்லறை. | 81 |
| 15. | புதுச்சேரி கடற்பிரதேசத்தில் நிகழ்ந்த புதுமை. | 86 |
| 16. | புதுச்சேரியின் புதுமையான உடன்படிக்கை. | 92 |
| 17. | டூப்ளேயினுடைய ஒரு கல்வெட்டு. | 97 |
| 18. | பிரஞ்சிந்திய ஸ்தலங்கள்-1935-ஆம் ஆண்டில் புதுச்சேரி. | 103 |

Errata of Page No. 101

OMNIPOTENTIS SUB TUTELA

Frustra laborabunt qui oppugnabunt ea aed. [ificia]
Pondicheraeos supplices colonos
benigne exaudiens,
Millesimi Septingentesimi quadragesimi quinti
anni salutis spatio
ad securitatem nec non ad decorem
Maritimas has-ce arces moeniaque
fundavit, curavit, perfecit:
pro francorum rege LUDOVICO XV
et ejusdem regni pro indiarum societate
Gubernator vigilantissimus
Josephus Franciscus DUPLEIX.

# புதுச்சேரியின் பெயர் வரலாறு

17 ஆவது நூற்றுண்டில் ஊர்களின் பெயர்கள் பல மாறியும் சிதைந்தும் காணப்படுகின்றன. இந்த மாற்றங்களும் சிதைவுகளும் சில ஒழுங்கு முறைகளைத் தழுவியேயுள்ளன.

சில பெயர்களில் சிற்சில எழுத்துக்கள் உச்சரிப்பு வகையில் மாறுபட்டுக் குறிக்கப்பெற்றுள்ளன, பழைய பெயர்களில் சில உயிர் எழுத்துக்கள் இம்மாற்றத்திற்குட் பட்டுள்ளன.

வான்-தென்-ப்ரோக் என்பவரின் யாத்திரை என்ற நூலில் 7ஆம் பகுதியில் 491ஆவது பக்கத்தில் ஓர் உதாரணம் காணப்படுகின்றது. தி-ரு-பா-பு-லி-ஊர் இந்த எழுத்துக்கள் பின்வருமாறு மாறுபட்டு தி-ரெ-பொ-பெ-லி-யோர் என்று காணப்படுகின்றன.

இதே சொல்லில் ''உ'' என்பது மூன்று முறை ''ஏ'' என்பதாய் மாற்றப் பெற்றுள்ளது.

இந்த முறையை அனுசரித்து நம்மூர் ''புதுச்சேரி' என்னும் பெயர் தனது இரண்டாவது அசை மாற்றத்திற் குட்பட்டதால். புதே-சேரி என்று எழுதப் பெற்றிருக்கின்றது.

இங்கு ஒரு முக்கியமான் முறையை நாம் கவனிக்க வேண்டும். அதாவது இத்தகைய மாறுபட்ட வடிவம், பிரஞ்சு நூல்களில் மிகப் பழங்காலந்தொட்டே காணப் படுகின்றது என்பதேயாகும். ''சாம்சோன்-தப்வில்'' என்பார் வரைந்த தேச படத்தில் ''புதேஷேயீரா'' என்று நம்மூர் குறிக்கப்பெற்றுக் காண்கின்றது. பிரஞ்சு நாட்டரசரின் நிலநூல் வல்லார் ஆகிய அன்னவர் 1654ஆம் ஆண்டில் வரைந்த அப்படம் ''இந்தியாவின் தென்பாகம்'' என்ற நூலில் பக்கம் 195 இல் உள்ளதாம். (தேசிய நூலகம்-பாரீஸ்)

17ஆம் நூற்றுண்டின் இடைக்காலத்தில் பிரஞ்சுக் காரர்கள் புதுச்சேரியைப் 'புதேஷேரி' என்று வழங்கினர். 1673ஆம் ஆண்டில் இதைப் ''புதுஷேரி'' என்று குறிப்

பிட்டனர். "ஏ" "இ" ஆக மாறுவது ஒலி முறையில் சாதாரணமாக நிகழக்கூடியதே. இப்படித்தான் பிரஞ்சுக் காரர்கள் "காரைக்கால்" என்னும் ஊர்ப் பெயரை முதலில் 'காரேக்கால்" என்று எழுதி வழங்கிப் பின்னர் மாற்றி "காரிக்கால்" என வழங்கினர்

இந்த வரலாற்றுமுறை ஆராய்ச்சினுல் 'புதுஷேரி' 'புதேஷேரி' - 'புதிஷேரி' என்று முறையே திரிந்த தென்று தெரிகின்றது.

பிரஞ்சுக்காரர்கள் இங்குக் குடிபுகுதற்கு முன்னதாக நடைபெற்றுக்கொண்டிருந்த கடிதப் போக்கு வரவுகளின் சார்பினுல், (புதிஷேரி-பொந்திஷேரி) 'பு' என்பது 'பொந்' என்று மாற்றம் பெற்றதென நிச்சயமாகக் கொள்ளலாம். ஆனுல் இந்த முறையானது ஒரு தனி வழக்கு என்று சொல்வதற்கில்லை. கூடலூர் என்பது கூடேலூர் என்று எழுதப் பெற்றுள்ளது. 'புது' 'பொந்தி' என்று மாறியது ஒலியியல் நோக்கப்படி விளக்க இயலாத தாகும். 17ஆவது நூற்ருண்டில் சில பெயர்கள் மாற்றம் பெற்று வழங்கப்பெற்றன விதிகளை யனுசரித்தே என்னுங் கருத்துக்குப் பொருந்துவதாகும். இதைக்கொண்டு, நோக்க, நம்மூரின் பெயர் "பொந்திஷேரி" என்று குறிக்கப் பெற்றது என்பதில் புதிர் ஒன்றுமில்லை.

## 16ஆவது நூற்ருண்டில் போர்த்துகீசியர் வழங்கிய 'புதுஷெயிரா'.

'நன்னம்பிக்கை 'முனை' வழியாகப் போர்த்துகீசியர் இந்தியாவிற்கு வழியைக் கண்டுபிடித்தபோது, மலையாளக் கரையை அடைந்தனர். இன்று மன்னர்கள் அவர்களைப் பொதுவாக நன்கு வரவேற்றனர். இந்த மலையாளக் கரையில் அதுவரை அராபியர்களே வர்த்தகம் செய்து வந்தனர். போர்த்துகீசியர் வந்தபோது, அவர்கள் அராபியர்களுக்குப் போட்டியாக இருப்பார்கள் என்றும், இந்துக்களாகிய உற்பத்தியாளர்கட்கு இந்நிலை பெரிதும் பயனுள்ளதாக அமையுமென்றும் அம்மன்னர்கள் அறிந்திருந்தனர்.

மலையாளக்கரையில் இருந்த முக்கியமான துறை முகங்கள் ஒவ்வொன்றிலும் இந்து மன்னர்கள் போர்த்து

கீசியர் தங்குவதற்கு வசதிசெய்து தந்தனர். அவ்வாறு வழங்கப்பெற்ற இடங்களைப் பிரஞ்சு மொழியில் 'Comptoir' அதாவது 'வாணிப நிலையம்' என்று பொருள் தரும் சொல்லாற் குறித்தனர்.

பிரஞ்சு மொழியில் 'loge' (லோழ்) என்று குறிப்பிடுவதைப் 'போர்த்துகீசியர்கள்', 'பெய்த்தோரியா' என்றழைத்தனர். அதன் தலைவன் 'பெய்த்தோர்' என்றழைக்கப்பெற்ருன்.

16ஆவது நூற்ருண்டின் தொடக்கத்திலேயே மூன்று 'பெய்த்தோரியாக்கள்' கள்ளிக்கோட்டை, கண்ணனூர். கொச்சி ஆகிய ஊர்களில் அமைந்திருந்தன. 1505ஆம் ஆண்டில் போர்த்துகீசியர், இலங்கை மன்னன் 7ஆவது 'விஜயபாஹு' என்பவரிடமிருந்து தற்போது கொழும்பு (கொலொம்போ) என்று வழங்கப்பெறும் 'கோலொன் தொத்தா'வில் பெய்த்தோரியா ஒன்றமைத்துத் தங்குவதற்காக அனுமதி பெற்றுக்கொண்டனர்.

அந்நூற்ருண்டின் தொடக்கத்திலேயே 'இலங்கையில் ஒரு 'comptoir' அமைத்திருந்த அவர்கள் சோழமண்டலக் கரையினையும் அறிந்திருந்தனர்.

1521ஆம் ஆண்டின்போது 'பலிகாத்' என்னும் ஊரிலிருந்து பதினைந்து போர்த்துகீசியர் 'கஸ்பார் கொரெயர்' என்பவரால் அழைத்துவரப்பெற்று 'சாந்தோம்' கோயிலைப் பார்வையிட்டுள்ளனர். 1524ஆம் ஆண்டில், சோழமண்டலக் கரையிலிருந்த மெய்த்தோரியாக்களின் பொதுபிரதிநிதியாகிய 'மனுயேல் தெபிரியாஸ்' என்பவர், போர்த்துகீசியரின் நிறுவனம் ஒன்றைச் சாந்தோமில் நிறுவினுர்.

நாகப்பட்டினத்திலிருந்த 'பெய்த்தோரியா' முதன் முதலில் நிறுவப்பெற்றிருக்கலாம் என்று உறுதியாகக் கூறலாம். காரணம் அது இலங்கைக்கு அண்மையிலும், மலாக்கா தீபகற்பத்துடன் வாணிபத் தொடர்பும் கொண்டு விளங்கியதனுல் எனலாம்.

1545ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் போது அர்ச்சியசிஷ்ட பிரான்சுவா - க்சவியே (சேவியர்)

நாகப்பட்டினத்திலிருந்தபோது அங்கு எண்ணற்ற போர்த்துகீசியர்கள் வதிந்துள்ளனர். அக்காலை ஒருமுக்கிய நகராக விளங்கியிருந்த 'சாந்தோமுக்கு' அப்பெரியார் அடுத்த 'மே' மாதத்தின்போது சென்று வதிந்துள்ளனர்.

பர்ரோஸ் என்பவர் தமது தா-ஆசிய (Da Asia Decada I. I. 9. cap. I) என்னு தமது நூலில், இந்தியா எவ்வாறு அறிந்துகொள்ளப் பெற்றிருந்தது, அர்சியசிஷ்ட பிரான்சுவா-க்சவியே (சேவியர்) அங்குவதிந்திருந்தகாலை, என்பதற்குரிய அந்நாட்டு நிலவிவரணங்களைக் குறித்துள்ளனர். 1553ஆம் ஆண்டு போர்ச்சுகல் நாட்டில் அவர் எழுதியுள்ள அதன்கண், சோழமண்டலக்கரையின்கண் போர்த்துகீசியர்கள் வசமிருந்த பெய்த்தோரியாக்களின் அமைப்பு நாகப்பட்டினம், நாகூர், திருமலைராயன் பட்டினம், தரங்கம்பாடி, திருமுல்லைவாசல், கொள்ளிடம் பொந்திஷேரி (புதுச்சேரி) காலாப்பேட்டை கூனிமேடு சதுரங்கப்பட்டினம், மயிலாப்பூர் ஆகிய நகரங்களில் நிறுவப்பெற்றிருந்ததென்பதைக் குறிக்குமிடத்தில், அந்நகரங்களின், பெயர்களைப் பின்வருமாறு முறையே நெகப்பத்தம், அஹோரா. திரிமினுப்பத்தம், திராகம்பார், திரிமிஞ்ஜை, கொலொரான், புதுஷேயிரா, காலாப்பத் கோனிமேரா, சாத்ராப்பத்தம், மெலியாபோர் என்று வழங்கியுள்ளனர்.

இப்பட்டியலில் காலாப்பேட்டை போர்த்து கிசியர்கட்கு ஒரு பெரிய நடுநாயகமான வணிக ஸ்தலமாக இருந்துள்ளதாகக் காண்கின்றது ஏனெனில் புதுச்சேரி, காலாப்பேட்டை, கூனிமேடு ஒரே பிரதேசத்தைச் சார்ந்து அமைந்து, வர்த்தகம் மிகவும் சிறப்புற்றோங்க வெகுவாய் உதவியுள்ளன. உயர்ந்த வகைத்துணிகள் கூனிமேட்டில் உற்பத்தி செய்யப்பெற்றுள்ளன. ஐக்கிய நாட்டு வர்த்தக நிலையத்தினரின் யாத்திரைச் செய்திகளடங்கிய நூலின் நான்காவது பாகத்தில் 364ஆம்பக்கத்தில் இச்செய்தியைக் காணலாம். மற்றும் புதுச்சேரியிலிருந்து காலாப்பேட்டைக்கு ஐந்துமைல் தொலைவும், காலாப்பேட்டையிலிருந்து கூனிமேட்டிற்கு ஐந்து மைல் தொலைவும் குறிக்கப்பெறுதலையும் கொண்டு நாம் இதனை உய்த்துரணலாம். போர்த்துகிசியத் தொழிற்சாலைகள் மேற்குறித்த துறைமுகங்கள் ஒவ்வொன்றிலும் அமைக்கப்பெற்றிருந்தன.

போர்த்துகீசியரின் மரக்கலங்கள் நாகப்பட்டினத்திற்கும் சாந்தோமிற்குமிடையே தொடர்ந்து போக்குவரவுடையனவாகஇருந்தமையால்,போர்த்துகீசியர் புதுச்சேரி துறைமுகத்தை நன்கு அறிந்திருந்தனர் என்று தெரிகின்றது.

சோழமண்டலக்கரையோரமாகவே கால்நடையாகக் கிராமம் கிராமமாகச் சென்றுகொண்டிருந்த குருமார்களால். அக்கரைப்பகுதியில் கிறிஸ்துவக் கோட்பாடுகள் பரவியிருந்தன. ( Anvers Joachim Trognese, MDCI ) ஆன்வேர் ழொஆஷிம் த்ரோஞ்ஞேஜ் எம். தெ. செ, இ. என்ற பதிப்பகத்தாரின் "பெ. நிக்கோலாஸ் பிமாந்த் என்பாரின் கடிதங்கள்" என்ற நூல்ஒன்றை அன்பார்ந்த குரு சகோதரர் பொஷ்ஏவ் என்பார் எனக்குக் காட்டியருளினர். அந்நூலின் 122-ம் பக்கத்தில் "தந்தை சிமோன் லெயா" என்ற குருவின் கடிதம் ஒன்று பிரசுரமாகியிருந்தது. 1598-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் தேதியிட்ட அக்கடிதத்தில், "கான்மீரா" (கூனிமேடு) விலும் அங்கிருந்து "தேவனும்பட்டினம்" வரையிலும் வசித்திருந்த ஆன்மாக்களை வளர்த்துவரவேண்டிய கடமை "ழெசுய்த்" (Jesuites) பிரிவின் குருமார்களுக்கிருந்தது என்று கூறியுள்ளதை நோக்க, 16ஆம் நூற்றுண்டின் இறுதியில், நம்மூர் "ழெசுய்த்" குருமார்களல அறியப்பெற்றிருந்தமையும், மற்றும் "கோன்ஹொமேரா (கூனிமேடு)வுக்கும், தேழேனும் பட்டினத்திற்கும் (கூடலூர்) இடையில், அதாவது பாதிவழியில் அது அமைந்திருந்தனல், அவர்கள் அதனைப்பார்வையிட்டுள்ளனர் என்றும் புலப்படுகின்றது.

இவ்வாருகக் கடல் மார்க்கமாய்ப் போர்த்துகீசிய வணிகர்களும் தரை வழியாய் மதப்பிரசாரம் செய்வோருமாக வெளிநாட்டினர் புதுவைக்கு வந்து கொண்டிருந்தனர். 16ஆம் நூற்றுண்டில் போர்த்துகீசியர்கள், புதுச்சேரியைத் தங்கள் வசம் வைத்திருந்தனர், என்பதைக் காட்டக்கூடிய அதன் நிலப்படம் ஒன்று நம்வசமிருப்பின், நாம் எத்துணைமகிழ்ச்சி கொள்ளலாம்.

முன்னேயே குறிப்பிட்டிருந்த பிரஞ்சுநாட்டரசரின் நிலநூல் வல்லாராகிய "சாம்சோன் தப்வீல்" என்பவர் இந்திய தீபகற்பத்தின் நிலப்படம் ஒன்றினை வடித்துள்ளார். அப்படம் "இந்தியாவில் போர்த்கீசியர்" தான்வேர், (Danver's Portuguese in India) "அறவீடு", ஹிராஸ், (Heras "Aravidu") முதலான பல நூல்களில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அந்நிலப்படத்தில் 1652 என்று ஆண்டும் குறிக்கப்பெற்றுள்ளது. 17ஆம் நூற்றுண்டின் இடைக்கால இந்தியாவைக் குறிக்கின்றது என்பது தெளிவான ஒன்று

கும். ஆனால், இந்திய வரலாற்றறிவு சிறிதளவேயுடைய ஒருவர், அந்நிலப்படத்தினைக் கண்ணுற்றவுடனேயே, அஃது "அக்பர்" சக்ரவர்த்தி (1605)யின் மரணத்திற்கு முற்பட்ட இந்தியாவின் படம்என்று அறிந்துகொள்வர். கவனமாக அதை ஆராய்ந்து பார்ப்பவர்க்கு அப்படம் 16ஆம் நூற்றாண்டின் கடைக்காலத்தியது என்பது தெளிவாகும்; அப்படத்தில் மொகலாயப் பேரரசிற்கு அப்பாற்பட்டதாக "அமெத்நகர்" (Amednagar) குறிக்கப்பெற்றுள்ளது; அக்பரால் அந்நகர் கைக்கொள்ளப்பெற்றது 1600ஆம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவம் என்பதை எல்லோரும் அறிவர் அன்றோ? இதைப்போன்றே "பலாஸ்ஸோர்" என்ற நகரமும் அதில் அமைந்துள்ளது; 1592ஆம் ஆண்டில்தான் "ஒரிஸ்ஸா" கரைப்பிரதேசம் அக்பரால் தன் சாம்ராஜ்யத்தோடு இணைத்துக் கொள்ளப்பெற்றதாகும்.

இவ்வாறாக அப்பிரஞ்சு நிலநூல்வல்லார், மனச்சான்று தடையினைக் கருதாமல், ஐம்பதாண்டுகட்கதிகமாகவே பழமையான அப்போர்த்துகீசியப் படத்தை, 1652ஆம் ஆண்டில் பிரதி செய்துள்ளார் என்பதை அறிகிறோம்.

எனினும் அந்த ஆதாரம் நமக்கு விலைமதிப்பற்ற ஒன்றாகும். ஏனெனில் அதில், புதுச்சேரி, 16ஆம் நூற்றாண்டின் போர்த்துகீசிய வரிவடிவத்தோடு "புதுஷேயிரா" என்று நாம் வாசித்தறியுமளவில், குறிக்கப் பெற்றுக்காண்கின்றதல்லவா!

போர்த்துகீசியர்க்குப் "புதேஷேயிரா" வில் ஒரு பெயித்தோரியா (வணிக நிலையம்) இருந்துள்ளதென்பது நிச்சயமான ஒன்றாகும். இக்காரணம் பற்றியே, அந்நிலப்படம், கரைப்பிரதேசத்தில், தெற்கு வடக்காகப் போர்த்துகீசியர்கட்கிருந்த வணிக நிலைய நகரங்களைக் குறிக்கின்றது: நாகப்பட்டினம், தரங்கன்பாடி, திருமுல்லைவாசல், பரங்கிப்பேட்டை (சிஸ்தாபதமா), புதுச்சேரி, கூனிமேடு, சதுரங்கபட்டினம், பறங்கிமலை, புலிகட் அதிற்காணப்படுகின்றன.

1614ஆம் ஆண்டில் ஹாலந்துக்காரர்கள் புலிகட்டிலும், தேவனாம்பட்டினத்திலும் போர்த்துகீசியர் வணிக இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். அதே காலத்தில் தான், செஞ்சி அரசராகிய முத்து கிருஷ்ணப்பநாயகர் கூனிமேடு, காலாப்பேட்டை, புதுச்சேரி ஆகிய ஊர்களிலிருந்து போர்த்துகீசியரை வெளியேற்றியுள்ளார்.

16ஆவது நூற்றாண்டின் இறுதிக்காலப் புதுச்சேரியைச் சார்ந்த போர்த்துகீசிய ஆதாரம் ஒன்று நமக்குக் கிடைத்திருப்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

# பிரான்சுவாமர்தேன் காலத்தில், பாரீஸ்மாநகரத்தின் அந்நியநாட்டு மத அலுவலர்கள்.

"பிரான்சுவாமர்த்தேன் நினைவுக் குறிப்புக்கள்" என்ற நூலில், "பாரீஸ் மாநகரத்தின் அந்நிய நாட்டு மத அலுவலர்கள் மன்றம்" என்ற நிறுவனத்தைப்பற்றிய செய்திக் கட்டுரைகள் இருத்தலைக்காணலாம். வாசகர்கள் பார்வைக்கென அவற்றை அவர்களின் முன் வைத்தல் பெரிதும் ஆர்வம்தரவல்லதெனக் கருதுகின்றோம்.

## I. அந்நிய நாட்டு மத அலுவல்களின் ஸ்தாபிதம்.

மதப்பிரசாரத் தலைவர்களாகிற "கார்டினல்"கள்; மதத்தின் பெருமளவான நன்மைக்கும், பிரமாணமற்றவர்களைத் தாம் தழுவிக் கொள்ளவுமாகத் தக்கசமயத்தில் ஒரு தீர்மானத்தை மேற்கொண்டனர். மிகப்பெரும் பரப்பினவாக விளங்கிய நாடுகளில் அம்மக்களின் போதனைக்கெனப்போதிய மத அலுவலர்களைப் "போர்ச்சுகல்" நாடு வழங்க இயலாது போயிற்று. எனவே "அந்நிய நாட்டு மத அலுவலர்கள் நிறுவனம்" என்ற பெயரில் மத அலுவலர்கள் அடங்கிய ஒரு திருக்கூட்டத்தினரை உருவாக்க மூன்று பிரஞ்சு நாட்டு ஆண்டவர்களை நியமித்தனர். அவர்கள் பாரிஸ்மாநகரில் மதகுருமார்களின் மன்றத்தை அமைத்து, மதப்பிரசாரத் தலைவர்களாகிற "கார்டினல்"களின் பாதுகாப்பின்பேரில், சியம், காம்போஜம், கொச்சின் சீனு, டோங்கின், சீனு முதலான அரசுகளில் அங்குள்ள பிரமாணிக்க மற்றோர்க்கு சேசு கிறிஸ்து நாதரின் மதக்கொள்கைகளை அறிமுகப்படுத்தவும், போர்ச்சுகிசிய மத அலுவலர்களின் குறைவை நிறைவுசெய்யவும் வழி வகுத்தனர். மிகப்பெருமளவில் நேரிட்ட செலவுகளைப் பிரஞ்சு நாட்டரசரின் உதவிகொண்டும், பாரிஸ் மாநகரப் பக்திச் செல்வர்களின் காணிக்கைகளைக் கொண்டும் ஈடு செய்து, அவர்கள் தம்புனித மதத்தினைத் திறம்பட நாட்டிற்கும் புகழ்சேரும் வகையில் வளர்ப்பதில் ஒரு பெரும் வெற்றியே கண்டனர் எனலாம்.

## 2. பெரித்நகரின் ஆண்டவர் எம். லாம்பேர்

1680 ஆண்டு ஜனவரி மாதம் சியநாட்டில் பெரித்நகர் ஆண்டவர் மரணமடைந்த செய்தியைக் கொண்ட சில கடிதங்கள் மசூலிப்பட்டினத்திலிருந்து எனக்கு வந்தன. சங்கைக்குரிய தந்தை அலெக்சாந்தர் தெ ரோத் என்ற பிரஞ்சு ஜெசூட் குருவின் தெளிவுரையின் பேரில், டோங்கின், கொச்சின் சீன நாடுகளிலிருந்த மத அலுவலாளர்கள் மன்றங்களுக்குப் பொருளுதவி செய்தலை மேற்கொண்ட முதல் மூன்று பெரியார்களில் அவரும குறிப்பிடத்தக்க ஒருவராவார். அம்மூவரும் தம் சொந்த நிதியிலிருந்தும், பாரிஸ்மாநகரப் பக்திமான்களின் பெருதவிகொண்டும், அது முகற்கொண்டு பெருந்தொண்டு புரிந்துவந்த அந்நிய நாடுகளில் மதப்பணியாற்றும் மன்றத்தைத் தொடங்குவித்தனர். மேற்குறித்த இருநாடுகளுக்கும் வேண்டியிருந்த பேருதவியும் புரிந்து வந்தனர். இம்மாபெரும் மதத்தொண்டிற்கு முதற்கண் பெருந்தடைகள் உரோம நாட்டு அரசவையிலிருந்தும்கூட எழுவதை அவர்கள் கண்டனர். கிறிஸ்துவ மதத்தின் நன்மைகளையே அவர்கள் தங்களது நோக்கமாகக்கொண்டிருந்தும் இத்தடைகள் எழுவதைக்கண்ட ஆண்டவர் பெரித் அவர்கள் மிகப்பெருமளவில் முயற்சி செய்து, தனது பக்திநோக்கத்திற்கு உண்டாகும் குறுக்கீடுகளையும், பிறவனைத்து இடர்களையும் அகற்ற முன்னின்றார். அன்னருடைய ஆலோசனைகளினால் தாம் இப்பெருநிறுவனத்திற்கான தொடக்க அமைப்பு முறைகள் வகுக்கப்பெற்றன.

பெரித்நகர் ஆண்டவர் தமது குடும்பப் பெயரான லாம்பேர் என்ற திருநாமத்தாலேயே அழைக்கப் பெற்றனர், அவர் "ருஆன்" நகரத்தினர் மக்கள் மன்றத்திலோ, நிதிக்கணக்கு மன்றத்திலோ பொறுப்பாளராக அலுவல் புரிந்துகொண்டிருந்தவர். ஓர் ஆச்சியசிஷ்டவருக்குரிய ஆச்சரியப்படத்தக்க பொறுமையுடன், நீண்டகாலம் கல்லடைப்பு நோயினால் துன்புற்று இறுதியில் மரணமடைந்தார். நான் குறித்தபடி அம்மூன்று ஆண்டவர்களில் இவரை முதல்வராகக் கொள்ளினும், அவர்கள் மூவருக்கு மிடையில் யாதொருவிதமான முதன்மைப்பாடும் நிலவியதில்லை என்றேகொள்ளலாம். அதனை அம்மூவரில் ஒருவர்க்கே அளிக்க வேண்டி நேர்ந்தால், அவர்களில் இவ்வுலகின் நான்கு திசைப் பகுதிகளிலும் பக்தியோடு

வணங்கப்பெற்று வந்த "ஹெலியோ போலீஸ்" நகர ஆண்டவராக விளங்கிய ஒருவருக்கே உரியதாக்குவது மிகவும் பொருந்தும்.

அம்மூன்று பெரியார்களில் இரண்டாமவர் "தூர்" நகர் தேவாலயத்தில் அம்மதசித்தாந்தியாக விளங்கியிருந்த ஆண்டவர் "பல்லுய்" என்னும் பெயரினர், "ஹெலியோ போலீஸ்" நகர் ஆண்டவர் என்ற பெயரால் வழங்கப்பெற்றவராவர். மூன்றுமவர் "கொதெர் கொலாந்தி" என்ற பெயருடைய ஆண்டவராவார். "ப்ரோவான்ஸ்" மாகாணத்தவராகிய அன்னூர் "ஏக்ஸ்-ஆன்-ப்ரோவான்ஸ்" நகரத்தில் வருமானமுடைய மத குருவாக விளங்கியிருந்து, "மேதெல் லோபோலீஸ்" நகர் ஆண்டவர் என்ற பட்டம் பெற்றவர்.

## 3. ஹெலியோ போலிஸ் நகர் ஆண்டவர் "பல்லுய்"

1678ஆம் ஆண்டு ஜனவரி மாதம், ஆகிய அக்கால எல்லையில் 'ஹெலியோ போலீஸ் நகர் ஆண்டவர்" என்ற பிரசித்தமான பெரியாராக விளங்கியிருந்த அன்னூர் தமது உலக சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு "ஸ்பெயின்" நாட்டிற்கு வந்து சேர்ந்தனர். அன்னூரின் தகுதிக்கும், அர்ச்சிய்சிஷ்டத்துவத்திற்கும் ஏற்ப அளிக்கப்பட வேண்டியிருந்த மரியாதைகளுக்கு மேலாகவே, அந்நாட்டரசவை அவருக்கு வெகு சிறப்பான எல்லா மேன்மைகளையும் வழங்கிற்று. இச்செய்திகள் "மணிலாத் தீவுகளிலும்" "புது ஸ்பெயின் பிரதேசத்திலும் நன்கு வழங்கப்பெற்றுப் பரவி யிருந்தன ஸ்பெயின் நாட்டுச் சான்றோர்கள் பலர் வாயிலாகவும் நான் அவற்றை அறிய நேர்ந்தது. மணிலாத்தீவுகளிலிருந்து அக்குவா புய்ல்கோ என்ற இடத்திற்குச் செல்லுங்காலை தண்ணீர்த்தட்டுப்பாடு நேர்ந்ததாம். கடல் நீர் நிரப்பிய பல ஜாடிகளை அவ்வாண்டவர் தமது பிரார்த்தனைகளின் மூலம் உண்ணிர் நிறைந்தவைகளாக மாற்றிய புதுமையை அறிய நேர்ந்தது.

"சூரத்" நகரத்துறைமுகத்திற்கு 1681ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம தேதி "ப்ளான் பிஞ்ஞோன்" என்ற நாவாய் வந்து சேர்ந்தது. எங்கட்குக் கிடைத்த செய்திகளின் பேரில், நாங்கள் கை கால்களில் ஏற்பட்ட தசைப்பிடிப்புக்களின் காரணத்தினால், "சூலே" துறை

முகத்திலிருந்து புறப்பட்டோம். இரவு பத்துமணியளவில் நாங்கள் மேற்சொன்ன துறைமுகத்திலிறங்கிக் கரையை யடைந்தோம். அங்கு ஆண்டவரைத் தரிசிக்கும் பேறு பெற்றோம். எங்கள் தலைமையாளர் சார்பிலும் அப்பெரியார்க்கு நாங்கள் வழங்க வேண்டியிருந்த பாராட்டுரைகளை வழங்கினோம். அந்நியநாட்டில் மதத்தொண்டிலீடுபட்டிருந்த குருமார்களுக்கும், லியோன் என்ற பெயருடைய மதகுரு அவர்கட்டும் நாங்கள் செய்ய வேண்டியிருந்த பணிகளைமுடித்துக் கொண்டோம்.

1682 ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் தேதி, பொழுது புலரும் வேளையில், "ப்ளான் பிஞ்ஞோன்" நாவாய் பாய் விரித்துப் புறப்படுவதைக்கண்டோம். காற்றும் வரித்துக் கொள்ளத்தக்கதாகவே அமைந்திருந்தமையால், ஒருமணி நேரத்திற்குப் பின்னர் அந்நாவாய் பார்வைக்குப்புலப்படாது மறைந்தது நாவாய் அதிகாரிகளின் அசட்டையினாலும் அறியாமையினாலும், அது கடல்நீர் மட்டத்திற்குள்ளிருந்த பாறையின் மீது மோதும்படி நேர்ந்தது கடலின் ஏற்றவற்றம் நடுத்தரமாக இருந்த அச்சமயத்தில், அசாதாரணமான நற்காலவசத்தினால். அது மூழ்கநேர்ந்த நீரிலிருந்து காப்பாற்றப் பெற்றது. தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொண்டு பிரஞ்சு நாட்டையும் சென்று சேர்ந்தது. ஆண்டவனுடைய இரகசியங்களில் புகாது, கூறுமளவில். ஹெலியோ போலிஸ் ஆண்டவரும். ஏனைய அந்நிய நாடுகளின் மதப்பிரசாரகர்களும் அக்காலைசெய்த மனமுருகிய பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பெற்றன என்றே மிகப்பலரோடு யானும் கருதுகின்றேன். இப்பெரிய ஆண்டவர் அவர்களும். அவருடைய கூட்டத்தினரும், கப்பலுக்கு நேர்ந்த இடுக்கணைக் கண்டவுடனேயே முழந்தாளிட்டு அஃது அபாய நிலையினின்றும் மீட்கப்பட்டதென்ற செய்தி கிடைக்கும் வரையில் பிரார்த்தனை செய்து கொண்டேயிருந்தனர்.

செப்பனிடும் வேலைகட்குள்ளாகிய அந்நாவாய் மீண்டும் பிரயாணத்தைத் தொடங்கக் கூடிய நிலையினை யடைந்தமையால். அதன் கண் ஹெலியோ போலீஸ் ஆண்டவர் அவர்களும், ஏனைய குருமார்களும் சூரத் நகரி விருத்து தமது பயணத்தைத் தொடங்கினர். 1682ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி பாய் விரித்து அது சீய நாட்டிற்குச் சென்றது. பின்னர்த் தொடர்ந்து "டோங்கின்" நாட்டைச் சென்றடைந்தது.

1683ஆம் ஆண்டிறுதியில் ஹெலியோ போலீஸ் ஆண்டவர் அவர்களும் ஏனைய பிரசாரக குருமார்களும் சீனநாட்டிற்குச் செல்லவேண்டி நாவாயொன்றில் புறப்பட்டனர். மதத்தில் நம்பிக்கை கொள்ளுமாறு செய்து அதனை மக்கள் தழுவுமாறு தொண்டு செய்வதில் சிறிதளவேனும் மனச்சோர்வடையாத அப்பெரியார், பேராபத்துக்கள் நிறைந்த மார்க்கங்களையெல்லாம் தேடிக் கண்டறிந்து, இன்றியமையாமையால் தாம் செல்லவேண்டியிருந்த அவ்விடங்களுக்கெல்லாம் தாம் சென்று தொண்டு புரிந்துள்ளனர். இதனால் "டோங்கின்" நாட்டிலும், கொச்சின் சீன நாட்டிலும் அயல் நாடுகளில் மதப்பணி புரிவோர் மன்றத்தினுடைய வளர்ச்சி உயர்ந்து கொண்டே சென்றதோடு ஒவ்வோராண்டிலும் மதந்தழுவுபவர்களாகிய ஏனைய மதமக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது.

1685ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தின் போது சீன நாட்டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த ஆங்கில நாட்டு நாவாய் ஒன்றின் மூலமாக மடாதிபதியாகிய ஆண்டவர் சீசே, ஆண்டவர் பேன் கெம்னோர் நகரத்து ஆண்டவர் ஆகிய சிறப்புடைய மூன்று பெரியார்களிடமிருந்து சில கடிதங்கள் கிடைத்தன. அப்பெரியார்கள் ஹெலியோ போலீஸ் நகர் ஆண்டவரின் நல் மரணத்தைப் பற்றிய செய்திகளை அக்கடிதங்களில் குறித்திருந்தனர். அப்பெரிய "கார்டினலாக" விளங்கியிருந்த ஆண்டவர், சீன நாட்டிற்குச் சென்று சேர்ந்தபின்னர், பலவகைச் சித்தாந்தத்தினைச் சார்ந்து அந்நிய நாடுகளில் மதத்தொண்டு புரியும் நிறுவனங்களைச் சார்ந்த அனைவரையும் ஒன்று திரட்டி, அவர்களுக்கிடை ஒற்றுமையை வலுப்படுத்தி, அதனை இன்றியமையாத ஒன்றாக ஆக்கி, இவ்வாறு அப்பெரு நாட்டில் பரவியிருந்த அவர்களைச் சிறப்பித்து ஒன்றுபடுத்தியுள்ளனர். பரிசுத்தத் தந்தையாகிய பாப்பாண்டவரின் குறிப்புக்களின் வழியொழுகி, அவர்களனைவரையும் ஒரே தலைமையதிகாரத்திற்குட்படுத்தி, ஒருசேர பணியாற்ற வழி வகை செய்தனர். கடுமையான உழைப்புக்களின் மிகைப்பாட்டினால் பெரிதும் தளர்வுற்று உடல் நலிவுற்ற சின்னாட்களுக்குப் பின்னர், உடல் வலிமை அறவே நீங்கிய காரணத்தினால் ஆண்டவனிடம் சென்று சேர்ந்தனர். இவ்வுலகின் நாலாபக்கங்களிலும் தம்

பெயரையும், புகழையும் புலப்படுத்தியிருந்த இப்பெரியார் தம்முடைய மதத்தின் புகழைப் பெருக்குவதிலேயே தம் வாழுநாட்களைப் பயன்படுத்தி, மதப்பிரசாரத்தை நன்முறையில் வளர்த்துப் பெருக்கமுறச் செய்துள்ளனர்.

## 4. மெத்தெல்லோ போலிஸ் நகர் ஆண்டவர் கொத்தோ கொலாந்தி

1689ஆம் ஆண்டு ஜூன் மாதம்.

அந்நிய நாடுகளில் மதத்தொண்டுபுரிபவர்களின் மன்றத்தினுடைய சார்பில் பணியாற்றும் அதிகாரம் பெற்ற பொது ஆண்டவர் தெலாவிஞ் என்பார் அம்மன்றத்தின் காரியங்களுக்கெனப் புதுச்சேரியில் தங்கியிருந்தகாலை, சீயநாட்டிலிருந்து மெத்தெல்லோ போலீஸ் ஆண்டவர் எழுதியிருந்த சில கடிதங்களைப்பெற்றார். பிரக்யாதி பெற்றிருந்த அவ்வாண்டவர் பெருமானும், ஏனைய மதத்தொண்டர்களும், வந்தித்தற்குரியதந்தையாகிய லாப்ரேய் அவர்களும், இன்னும் அப்பகுதிகளிலிருந்துகொண்டிருந்த பிரஞ்சு நாட்டவர்கள் அனைவரும் ஆண்டவர் தேபார்ழ் அவர்களின் புறப்பாட்டிற்குப் பின்னர் தத்தம் நிலையினின்று பெரிதும் தாழ்வடைந்துள்ளனர் என்ற செய்தி உள்ளத்தைத் தொடுமாறு அவற்றில் காணப்பெற்றது. தகுதியும், சிறப்பும்உடைய பெரியோர்களின்பால் மிகமிக அநாகரிகமான மக்கள் கடைப்பிடிக்கும் தீய நடைமுறைகள்யாவும் அவர்களுக்கு விதிக்கப் பெற்றுள்ளன. மூங்கிற்கட்டுக்கோப்புடன், வைக்கோலும் தழைகளும் வேயப்பெற்ற குடிசையொன்றில் ஆண்டவர் அடைக்கப் பெற்றதாகவும், மேற்குறித்த அனைவரும், பல்வேறு சிறைச் சாலைகளில், ஏனைய தீய குற்றவாளிகளுடனும், கொலைஞர்களுடனும், கழுத்தில் சுமக்கும் தளைப்பலகையுடனும், கைகால்களில் இரும்புத் தளைகளுடனும். இரவுக்காலங்களிலும் அதே நிலையில் தம்மவர்களோடு தொடர்புகொள்ளாத வகையில் அடைக்கப்பெற்றிருந்தனரென்றும் அவற்றில் எழுதப்பெற்றிருந்தன.

## 5. புதுச்சேரியில் ஆண்டவர் 'தெ லா விஞ்'.

வந்தித்தற்குரிய கப்புய்ஸேன் வகுப்பைச் சார்ந்த தந்தை "மாக்" என்பாரும், வந்தித்தற்குரிய ஜெசுத்வகுப்

யைச்சார்ந்த தந்தை ''தலுய்'' என்பாரும், ஏனையோரும், மேற்குறிப்பிட்ட தெலாவீஞ் ஆண்டவர் அவர்களும் ''சாந்தோமுக்குச்'' சென்று சேர்ந்தனர் இக்கடைசி செய்திகள் யாவும், புதுச்சேரியைச் சார்ந்த நிலையில், சிறப்பானவைகளாகும்.

ஆண்டவர் தெலாவீஞ் அவர்கள், சாந்தோமைச் சென்று சேரும்படியாக நேர்ந்தது 1693-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் போதாகும். ஆலந்துக்காரர்கள் புதுச்சேரியை முற்றுகை செய்ய அக்காலை ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆண்டவர் தெல்காவீஞ் தொடர்ந்து நான்காண்டு வரையில் புதுச்சேரியில் வதிந்துள்ளனர்.

பிரான்சுவா மர்த்தேன் கூறிய வாக்கியமொன்றை இங்குக் குறிப்பிட்டு இதனை முடிப்போமாக. 'அந்தக் கப்பலில் அயல் நாடுகளில் மதத்தைப் பரப்பும் சங்கத்தைச் சேர்ந்த நல்லொழுக்கமும், உதாரணமாகக் கொள்ளத்தக்க பக்தியும் நிரம்பியிருந்த குருமார்கள் அநேகர் இருந்தனர்''.

## " கப்புய்சேன் " குருமார்களின் மடம்.

புதுச்சேரித் துறைமுகத்தில் கப்பலில் வந்திறங்கும் அயல் நாட்டவர்கள் ''புதுவையில் காணத்தக்க பழமையானது என்ன இருக்கின்றது?'' என்று கேட்பது வழக்கம் '1761-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால். நகர் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது. அரசினர்த்திடலில் அகழ்வாராய்ச்சி செய்ததன் பயனாகக் கோட்டையின் சில சுவர்கள் கண்டுபிடிக்கப்பெற்றுக் கண்களுக்குப் புலப்படுமாறு இருந்துகொண்டிருக்கின்றன. நிலமட்டத்தில். பிரான்சுவா மர்த்தேன் தூய்ப்ளேக்ஸ் ஆகியவர்களின் காலத்தைச் சேர்ந்த மாளிகைகள் ஒன்றேனும் இக்காலை இல்லை.'' புகழ்க்கொடி நாட்டிய தூய்ப்ளேக்ஸ் காலத்தை நினைவு கூர்தற்பொருட்டுப் புதுச்சேரியைப் பார்வையிட வரும் பிரயாணி ஏமாற்றமடைந்து திரும்பிச்செல்வதற்கான மேற்குறித்த விடையே எவரும் இறுக்க இயலும்.

''புதுவையில் தற்போதுள்ளவை ஒன்றேனும் தூய்ப்ளேக்ஸ் காலத்தைச் சார்ந்ததல்ல'' என்ற இக்கருத்திற்கு ஆதாரம் பின் குறிப்பிடும் இருகாரணங்களால் மெய்ப்பிக்கப்பெறுகின்றது.

1· 1761ஆம் ஆண்டில் இந்நகர் அடியோடு தரைமட்டமாக்கப்பெற்றது. 2· 1761ஆம் ஆண்டிற்கு முற்பட்டதெனக் கருதத்தகும் மாளிகை யாதொன்றைப்பற்றியும் நாம் அறிந்துகொள்ளற்கியலவில்லை. இவ்விரு உடன்பாடுகளும் தவருனவை என்பதைப்பற்றி நாம்காண்போமாக.

லார்ட் பிகோட் நகரைத் தரைமட்டமாக்கிவிடும் என்று ஆணையிட்டனர் என்பதில் ஐயப்பாடில்லை. ஆயின், சொல்வது செய்வதைக் காட்டிலும் மிகவும் எளிதான காரியம். வீடுகள் அனைத்துமே நல்ல நேர்த்தியான செங்கற்களைக்கொண்டும் நல்ல உறுதியான சுண்ணக்கலவையைக்கொண்டும் கட்டப்பெற்றிருந்தன. பீரங்கிக் குண்டுகளின் வீச்சுக்களை எதிர்நோக்கியே பலமாளிகைகள் அமைக்கப்பெற்றிருந்தன. ஆகவே புதுச்சேரி நகரை அழிக்கும்வேலை, அன்றைய காலநிலையில் ஒரு பிரம்மாண்டமான பணியாகவே விளங்கிற்று எனலாம். 1761ஆம் ஆண்டில் நகர் இடிபாடுகளின் நிலைக்களனாகியது என்பது நிகழப்பெற்றிலாத ஒரு கூற்றாகவே கொள்ளத்தக்கது; ஏனெனில் அதனைத்தரைமட்டமாக இடித்துத்தள்ளுதற்கு ஒருபோதும் இயலாது.

கோள்களின் ஆய்வாளர் லெழாந்தில் என்பார் 1769ஆம் ஆண்டில், புதுச்சேரி நகரின் இடிபாடுகளைக் காட்டும் படம் ஒன்றை நல்கியுள்ளனர். அதில், முதல் மட்டத்தில் துய்ப்ளேக்ஸின் மாளிகையினுடைய இரு பக்கங்களும் காணப்பெறுகின்றன கோட்டையை மீண்டும் கட்டிமுடிக்க வேண்டாமென்று தீர்மானித்தபோது, அப்பகுதியை ஒரு விசாலமான திடலாக மாற்றியமைக்க ஏற்பாடு செய்தபோதுதான் 1769ஆம் ஆண்டிற்குப் பின்னரே அம்மாளிகைகள் இடித்துத்தள்ளப்பெற்றன.

லெழாந்தில் என்பாரே மீண்டும் பின்வருமாறு கூறியுள்ளனர். குடிமக்கள் நகர்க்குத் திரும்பிவந்தபோது, அழிவுவேலை மிகவும் கையிகந்த நிலையிலேயே நிறைவேற்றப்பெற்றிருத்தலைக் கண்டு பெரிதும் மகிழ்வுற்றனர். தரைமட்டமாக நகர் ஆக்கப்பெற்றில்லை என்பதையும், மற்றும் முற்றிலுமாக அஃது இடிக்கப்பெறவில்லை என்பதையும், கண்டனர். அன்றியும், இன்றுவரை புதுவையில் பழைய மாளிகைகளில் ஒன்றையேனும் அக்காலத்தியதெனக் கண்டுபிடித்ததாகவும் தெரியவில்லை.

உண்மையில், ஒரு மாளிகை "பழைய புதுச்சேரி" அல்லது "1761ஆம் ஆண்டிற்கு முற்பட்ட புதுச்சேரி" நகரத்திற்குறியதென நிறுவுவதற்கு இரண்டு தனிப்பட்ட நிபந்தனைகள் இன்றியமையாதனவாகின்றன.

1. 1761 ஆம் ஆண்டில் புதுவையிலிருந்த மாளிகைகள் அழிக்கப்பெறவில்லை என்பதை நிச்சயமாகக்கொள்ளுதல்.

2. கண்டுபிடித்தற்குக்கூடுமான அளவில் பழைய மாளிகைகளின் படங்களை உடைத்தாயிருத்தல்.

பெரிதும் தனிப்பட்ட இவ்விரு நிபந்தனைகளும், தற்போது புதுவையில் காணக்கூடுமான மாளிகை யொன்றிற்கு, எடுத்துக்காட்டாகக் கூறுமளவில் "அர்ச்சிய சிஷ்ட பிரான்சுவா வர்க்கத்தினராகிய "கப்புய் சேன்மார் களின் மடம்" என்ற மாளிகைக்கு, இணைந்து பொருந்து வதாயுள்ளன என்பதையான் மெய்ப்பித்துக் காட்டப் புகுகின்றேன்,

லெமூரந்தில் என்பார்தம் நூலிலும்; முதன் முதலாகப் பின்னர் "புரட்சியும் இந்தியப் பிரஞ்சுக் குடியேற்ற மாநிலங்களும்" என்னும் தலைப்பினையுடைய 'லபெர்ளுதி' அம்மையார் தம் அழகிய சிறந்த நூலிலும், அதன்பின்னர் "செம்ஏர்" என்னுந் திங்களிதழின் ஜனவரி மாதத்திய வெளியீட்டிலும் "புதுச்சேரி அழிக்கப்பெற்ற இடிபாடு களின் காட்சி" என்னும் பெயருடைய படத்தைக் காண்கின்றோம்.

அப்படம் சித்திரிக்கும் பரந்தகாட்சியினையான் மிகவும் கவனித்து நோக்கி ஆராய்தலுற்றேன்.

"செம்ஏர்" திங்களிதழின் மேலட்டையில் இம்மாதம் "கப்புய்சேன்மார்களின் மடமும் கோயிலும்" கொண்ட பெரிதுபடுத்திய படத்தினை வெளியிடுகின்றோம். அத்தேவா லயம் முற்றிலுமாக அழிந்துபட்டுக் காண்கின்றது. 'கப்புய் சேன் மார்களின் மடமும்' அழிநிலையிலேயே புலப்படு கின்றது; அதன் வலப்புறப் பகுதி முற்றிலுமாக விழுந்து விட்டது.

தலையான முக்யத்வம் கொண்டனவாகிய மூன்று முடிவுகளை இவற்றினின்று நாம் மேற்கொள்ளலாம்.

1. "கப்புய்சேன் குருமார்களின் விடுதி" அழிநிலையில் இங்குப் புலனாகின்றமையால், 1761 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட பழைய கட்டிடம் ஒன்று இதில் காணக்கிடக்கின்றது.

2. அழிநிலைக்குள்ளாகாது எஞ்சி நிற்கும் பகுதி பெரிதும் முக்யத்வமுடையதாகும், அம்மாளிகையின் கலை அமைப்பினை வகுத்துக் கோடற்கு அது இன்றியமையாது உதவுகின்றதல்லவா? தாழ்வாரம் ஒன்றும் அதன் மேல் மெத்தையும் இன்னும் கட்டிட அமைப்பின் வளைவுகளும் அங்குக் காணப்பெற்றன. தூண் சதுர வடிவினதாய் அமையப்பெற்றுத் தோற்றமளித்தது. இத்தகைய பல தூண்களின் கலை அமைப்பு, 1765 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட கட்டிட அமைப்பிற்கும், நகரின் தற்காலத்தோற்றப்பாட்டிற்கும் முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். தற்போது தாழ்வாரங்களில் வளைவுகளிரா; மேலும் அவற்றில் உருட்டுவடிவத்தூண்கள் அமையப்பெற்றிருக்கும்.

3. 'லெஹாந்தில்' என்பார் 1769 ஆண்டில் 'கப்புய்சேன் குருமார்களின் மடத்தைச் சித்திரமாகத் தீட்டிய காலை, அதன் ஒரு மிகப்பெரும்பகுதி அழிவுறாத நிலையிலேயே அமைந்திருந்தது எனலாம். மூன்று வளைவுகள் கொண்ட மேல்மெத்தைப் பகுதியானது. தற்போதும் பயன்படுத்திக் கொள்ளத்தக்க நிலையிலேயே அமைந்துள்ளது. இவற்றினின்று பெறப்படும் முடிவு யாதெனில், 1769 ஆம் ஆண்டின் தொடக்கத்தின் போதே விளங்கியிருந்த இம்மாளிகை இன்னும் தற்போதுவரை நிலைத்திருக்கின்றது, என்பதேயாகும். வளைவுகளும் சமசதுர வடிவத் தூண்களும் அம்மாளிகையினை அறிந்துகொள்ளத் துணை நிற்கின்றன.

படத்தைக்கொண்டு மட்டிலும் மேற்குறித்த மூன்று முடிபுகளை மேற்கொண்ட வுடனேயே, யான் அம்மாளிகையினிடத்திற்கே சென்று பார்வையிட்டேன். அங்குத் தற்போது "சிறுவர்களின் அனாதை யில்லம்" அமைந்துள்ளது. படத்திலுள்ளதைப்போன்று மெத்தையின் கண் இருவளைவுகள் அமைந்த கட்டிடமொன்றைக் காண வேண்டி யான் முயற்சி மேற்கொண்டபோது, "லெஹாந்தில்" என்பார் குறித்திருந்த அதே யிடத்தில் அத்தகு மாளிகை யொன்றைக்கண்டு கொண்டேன். அவ்விரு

வளைவுகளும் இரண்டு அறைகளின் கோளவடிவ மேல் மச்சுக்களாகத் தெரிந்தன. அவற்றைக் கண்டறிதற்கு எனக்குதவிய "எல்- பொஷ்ஏவ்" என்ற அன்பரே அக்காலே அவ்வறைகளில் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

"மெத்தையில் இருவளைவுகள் மட்டிலுமே யிருந்தனவா" எனில், அத்தளத்தின் கீழ்ப்புறம் முற்றிலும் விசாலமாக அமைந்திருந்தது. அங்கிருந்தவை மிகச் சாதாரணமான அழிந்த சின்னங்களென்பதைக் காட்டிலும், மிகப்பெரிய வடிவில் விசாலமாக அமைக்கப்பெற்றிருந்த ஓர் உன்னதமான மாளிகையும் அதனைச்சார்ந்த பகுதிகளும் என்றே கூறலாம்.

1774 ஆம் ஆண்டின் நிலத்திட்டத்தின்படி அமைந்த ஒன்ருக லெழாந்தில் என்பவரால் வரைந்து பிரதிபலிக்கச் செய்யப்பெற்ற இம்மாளிகை இருத்தற்இயலாது என்பதில் ஐய்யப்பாடொன்றுமில்லே. அம்மடத்தினைச் சார்ந்தப் பகுதியானது "லபர்ஞதி" அம்மையாரின் நூலில் 78 ஆம் பக்கத்தில் பிரதிசெய்யப்பெற்றுள்ளதைக்காணலாம். அதாவது .தற்போதுள்ள சமாதான நீதிமன்றச் சுற்றுச்சுவர்கட்கு உள்ளிட்டு அந்நீதிமன்றச் சபைக்குத் தென்பால் அக்கட்டிடப்பகுதி காணப்பெறுகின்றது.

லெழாந்தில் என்பார் குறித்த முறைப்படி, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கியவாறுள்ள தாழ்வாரத்தில் காணப்பெறும் இருகோள வடிவங்களையும் மெத்தையின்கண் அமைந்துள்ள நிலையில் நாம் அவற்றைக் கண்டுகொண்டோம். நாம் முற்கூறியவாறு, அவைகளே "எல்பொஷ்ஏவ்" குருவானவர் வதிந்திருக்கும் அறைகளாகும். நீதிமன்ற எழுத்தர் அலுவலகத்திற்கு நேர்மேலாக'அமைந்துள்ள அப்பகுதிகளில் தாம் அன்னவர் வசித்து வருகின்றனர், அவர் தம் அறைகளைச்சென்று யான் பார்வையிட்ட அடுத்த நாளே, அந்நீதிமன்ற எழுத்தர் அலுவலகத்தைச்சென்று பார்வையிட அவரும் கருத்துக்கொண்டு,எஞ்சிய அதன் முக்கியமானபகுதிகளைப் பற்றித்தாம் அடைந்த பெருவியப்பினை உடனே எனக்கு அறிவித்தனர்.

மேற்படி 'நீதிமன்றத்தின் எழுத்தர் அலுவலகத்தில், எல். பொஷ்ஏவ் குருவானவர் தம் அறைகட்கு நேராக

அவற்றின்கீழ் அமைந்திருக்கும் அறைகளைச் சென்று பார்வையிடும்படியாக, வாசக அன்பர்களையும் யான் கோருகின்றேன். மிகவும் உயர்ந்து, விசாலமானதாகவும் அமைந்துள்ள ஒரு பெரிய அறை தனது வளைவுகளைக் கொண்டிருக்கும் நிலையிலேயே அங்குள்ளது. அஃதொன்றே பேரழகுவாய்ந்த மாளிகையைப் போன்றுள்ளது.

லெமூரந்தில் என்பார்தம் படத்தினைக் கவனமாக ஆராய்ந்ததனால், பின்வரும் முக்கியமான பகுதிகளை நிறுவக்கூடுமாயிற்று;

1. 1761 ஆம் ஆண்டில் ''கப்புய்சேன் குருமார்களின் மடம்'' ஒருபகுநியளவிலேயே அழிவுற்றது; 2: 1769 ஆம் ஆண்டின்போது, மெத்தையுடன் அமைந்திருந்த ஒரு பெரிய மாளிகைப்பகுதி நிலைத்திருந்தது: 3: அம்மாளிகைப் பகுநியின் ஒருபாகம் இன்னும் நிலைத்திருக்கின்றது: அதன் வளைவுகளைக்கொண்டும், கோளவடிவ மச்சுக்களைக் கொண்டும் பெரிதும் சுலபமாக அதனை நாம் கண்டு கொள்ளலாம். கிழக்கு மேற்காக நோக்கியுள்ள தாழ்வாரமொன்றின் இருவளைவுகள் மெத்தையின் கண்ணுள்ளன. இவையே எல். பொஷ்ரவ் குரு அவர்களின் அறைகளாகும்; அவற்றின் நேர்கிழாகச் சமாதான நீதிமன்றத்தின் எழுத்தர் அலுவலகம் உள்ள இடம். வரலாற்றுத் தொடர்புடைய மிகவழகிய திருமாளிகையேயாகும்,

புதுச்சேரித் துறைமுகத்தில் கப்பலை விட்டிறங்கும் ஒரு வெளிநாட்டுப் பிரயாணியானவர் 'பழமையான புதுச்சேரியின் அமைப்புக்களாக விளங்கிய ஈரிடங்களை இனிப் பார்வையிட இயலும்;: என்பதாகக்கூறி இதனை முடிப் போமாக.

மேலும் அரசினர்த்திடலில் ''லூய்'.' கோட்டையின் சின்னங்களும் அவருடைய பிரயாண நோக்கத்திற்குக் குறிக்கோளாக அமையலாகும். பிரஞ்சு நாட்டுக் கட்டிடக்கலை நிபுணர் :'ஒபான்'' என்பார் தம் திட்டங்களின்படியும், மற்றும் ''துர்னே'' நகரில் அமைக்கப் பெற்றதற் கொப்பாகவும் கட்டப்பெற்ற அக்கோட்டையின் சின்னங்கள், இன்னும் பிரான்சுவாமர்த்தேன், துய்ப்ளேக்ஸ் ஆகியோரின் ஆட்சிக்காலக் கோட்டை நகராக

விளங்கியிருந்த அதன் இடிபாடுகள் காண்போர் தம் உள்ளத்தைத் தொடுவனவாக விளங்கும்.

துய்ப்ளேக்ஸ் ஆட்சிக்காலத்தில் புதுச்சேரி விளங்கி யிருந்த மகோந்நத நிலையைப்பற்றி ஒரு கருத்துக்கொள்ள வேண்டுமெனில், அயல்நாட்டுப் பிரயாணிகள் மேற்கூறிய சமாதான நீதிமன்றத்தின் அலுவலகக் கட்டிடத்தைப் பார்வையிட்டுப் பெரிதும் மனமகிழ்ச்சி யடையலாம். பேரழகிய அறையொன்றின் உயர்ந்த ஸ்தூபவடிவ மச்சுக் களைத்தாங்கி நிற்கும் உயர்ந்த சதுரவடிவத் தூண்களைக் கண்டு வியப்புற்று, புதுவையைவிட்டுச் செல்லுங்கால் மகத்தான 'மாளிகையொன்றின் புதிய நினைவுகள் மனத் தின்கண் நிரம்பியவர்களாய் அவர்கள் தங்கள் நாட்டை யடையலாம்.

## 'பீர்' (Pier) என வழங்கும் புதுவைக்கடற் பாலத்தின் முகப்புத் தூண்கள்

"'பீர்'' (Pier) என வழங்கும் புதுவைக் கடற்பாலத்தின் முகப்பிலும், 'தூய்ப்ளேக்ஸ்' சிலையின் சுற்றுப்புறங்களிலும் நிமிர்ந்து நிற்கும் தூண்கள் வெளியார் தம் வருகையின் போதே அவர்கள் தம் கவனத்தைப் பெரிதும் ஈர்க் கின்றன: மற்றும் அக்கற்றூண்கள் புதுச்சேரிக்குத் தனிப்பட்ட ஒரு முதற்றோற்றத்தினையும் அளித்து நிற் கின்றன.

கவனமானது பெரிதும் வலியதாய் ஈர்க்கப்பெறினும், அஃது எவர்க்கும் நீண்ட நேரம் நிலைத்திருப்பதில்லை. எனவே ஒருவரேனும் அத்தூண்களிலுள்ள சிற்பங்களின் காலங்களைப்பற்றியும், அவை புலப்படுத்துகின்ற உருவங் களைப்பற்றியும் ஆராய்ந்து உண்மை காணவேண்டும் என்ற பணியில் ஈடுபட்டிலர்.

உண்மையில் வெளிநாட்டுப்] பிரயாணிகளும், வழிப் போக்கர்களும், அவற்றைப் பார்த்தலினால்மட்டு இப்பிரச் சினைகளுக்கு விடைகாண இயலாது என்பதை அவர்களே நன்கு அறிந்திருப்பர். புதைபொருள் ஆராய்ச்சியாளர் களும் சரித்திர வல்லுநர்களும் இத்தகைய ஆராய்ச்சியை மேற்கொண்டு, பொதுமக்களுக்கு உண்மையைக் கூற

வேண்டிய கடப்பாடுடையவர்களாக ஆகின்றுர்கள் என்பதே உண்மையாகும். மிக வியப்பூட்டத்தக்க முடிவுகளைக் கண்டுகொள்ள அவர்கள் மிகச் சாதாரணமான புதை பொருள் ஆய்வு முறைகளை அநுசரித்தலே போதுமானதாகும். அச்சிற்பங்களின் காலம், அவற்றைச் செய்விக்கச் செய்த அன்பர்தம் பெயர் இன்னும் நம்பக்கூடாத அளவில் அக்காலத்திய மன்னர்தம் சிலை இன்னுரென்ன அனைத்தும் வெகு விரைவில் எளிதாகப் புலனுகிப்போகும்.

முதற்கண் அவற்றின் அமைப்பு நிர்மாணக் கலையினைப்பற்றி ஆராய்வோம். ஓர் அரை நூற்றுண்டுக் காலம் சுமாராக அமையுமாறு எந்த ஒரு மாளிகையும் ஒரு குறிப்பட்ட காலத்தினது என்று முடிவு செய்ய இவ்வாராய்ச்சி நமக்குப் பெரிதும் உதவும். இங்கு நாம் திட்டமாகக் குறிப்பிடுகின்ற அளவில் அத்தூண்கள் 16 ஆம் நூற்றுண்டின் இறுதிக் காலமாகிய ''பீஜாநகர்'' தன் இறுதிக் காலத்திய கலை அமைப்பினைச் சார்ந்தன வென்று கூறலாம். 1623–1659 ஆண்டுக் காலத்திய மதுரைத் திருமலைநாயக்கரின் கலை அமைப்பிற்குப் பெரிதும் வேறுபட்டனவாக அத்தூண்கள் காணப்படுகின்றன. அதனுல் அவை மிகப்பெரிதும் பழமையானவைகள்.

பெரிதும் இலேசாகச் சிறந்த நிலையில் அவை காணப்பெறினும் மிகப் பிரபலமான வேலூர் மண்டபத்தின் கலை அமைப்பினையே கொண்டு அத்தூண்கள் விளங்குகின்றன. 1582 ஆம் ஆண்டில் அப்பய்யதீக்ஷிதர் அவர்களால் கட்டப்பெற்றவேலூர் காலகண்டேஸ்வரர் ஆலயம் இவற்றினும் முற்பட்டதென்பதில் யாதொரு ஐயப்பாடுமில்லை. அக்கோயிலினின்றும் இத்தூண்கள் பெரிதும் இலேசான அளவில், உள்ளது சிறத்தல் என்ற தத்துவ நிலையில் அழகுற அமைக்கப்பெற்றுள்ளன. அதனுல் இவை சுமார் 16 ஆம் நூற்றுண்டின் இறுதிக்காலத்தவையென்னலாம்.

வரலாறும் நமக்கு அதே குறிப்புகளை அளிக்கின்றது. இத்தூண்கள் செஞ்சியிலிருந்து வந்தவை, அக்காலத்தில் பிரசித்திப்பெற்ற இருநாயக்கவரசர்களே இருந்துள்ளனர். (1557–1595) ஆண்டுக்காலத்திய "வையப்பா" என்பாரும், (1595-1625) ஆண்டுக்காலத்திய "முத்து" என்பாருமே அவ்வரசர்களாவர். இவ்விருவரசர்களின் கல்வெட்டுக்கள்

மிகப்பலவாகக் கிடைத்துள்ளன. ''வையப்பா'' அரசரின் தந்தையாரும், ''முத்து'' அரசரின் குமாரரும் நமக்கு முற்றிலும் புலனுகாதவர்களாகவே ஆயினர். இவ்விரு நாயக்க மன்னர்கள் மட்டிலுமே சிறந்த வல்லமைசாலிகளாகவும், மிகப் பெருஞ் செல்வர்களாகவும் இருந்துள்ளனர்.

1614 ஆம் ஆண்டு முதற்கொண்டு ''முத்து' என்பார், தமக்குப் பெரிதும் தீங்காய் முடிந்த, தொடர்ந்த போர்களில் ஈடுபட்டிருந்தார் என்று வரலாறு நமக்குக் கூறுகின்றது. 1618 ஆம் ஆண்டில் நாட்டைக் கைப்பற்றியவர்கள் அதனைப் பெரிதும் பாழ்படுத்தியிருந்தனர் என்று ''வான் தென் ப்ரோக்'' என்ற ஹாலந்துக்காரர் குறித்துள்ளார். இவ்வகையில் ''பீர்'' என வழங்கும் புதுவைக் கடற்பாலத்தின், முகப்பிலுள்ள தூண்களின் காலம் 1582 ஆம் ஆண்டுக்குரிய வேலூர் மண்டபத்தின் காலத்திற்கும், 1614 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்க் காலத்தின் தொடக்கத்திற்கும், இடைப்பட்டு ஒரு முப்பதாண்டுக்கால அளவில் வரையறுக்கப் பெற்றதெனலாம்; அதாவது ''வையப்பா, முத்து'' என்ற இரண்டு அரசர்களின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்தவை எனலாம்.

தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தைக் கொண்டு அத்தூண்கள் ''முத்து'' என்ற அரசர் காலத்தவை, அவர்தம் தந்தையாருடைய காலத்தைச் சார்ந்தவையல்ல என்பதை நாம் உறுதிசெய்வித்தற்கு அதனைத் தெளிவுபடுத்துவோமாக. 1595 ஆம் ஆண்டிற்கும் 1614 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தவை அத்தூண்கள் என்பதை முடிந்த முடிபாகக்கொள்வோம்.

அரசர் வையப்பா அவர்கள் தமது ஆர்வத்தினுல் சைவ சமயத்தில் பெரிதும் நாட்டங்கொண்டவராக விளங்கியிருந்தனர். அவர்த்ம் திருக்குமாரரோவெனில் வைணவ சமயத்தில் அளவிடற்கரிய பேரார்வம் கொண்டவராக விளங்கியிருந்தனர். அவர்பால் வைணவ நெறி ஓர் ஆதிக்கத்தைச் செலுத்திவந்ததென்றே கூறலாம். மேற்குறித்த கடற்பால முகப்புத்தூண்கள் அனைத்தும் ஸ்ரீ விஷ்ணுபரமாகவே விளங்குவதை இன்றும் காணலாம். எனவே உறுதியாக அவை முத்து அரசரால்

திர்மானிக்கப்பெற்றவையே யாகும். செஞ்சியரசர்களாகிய அவ்விருவரும் சிதம்பரம் பிரதேசத்திலும் தமது ஆட்சியைச் செலுத்தி வந்துள்ளனர். கணக்கற்ற கல்வெட்டுச் சான்றுகள் ''வையப்பா'' அரசர் தம் சைவப் பற்றை, அவர் செய்துள்ள ஏராளமான சைவப்பிரிதியான அறச் செயல்களையும், தானங்களையும் குறிப்பிட்டு நமக்கு நன்கு புலப்படுத்துகின்றன. நடராஜப்பெருமானை வணங்கி வழிபடுகின்றவர்கட்கு அவர் எண்ணற்ற நன்மைகள் புரிந்துள்ளார்.

இதற்கு வேறுபடுகின்ற அளவில், முத்துவரசர். சங்கைக்குரிய ஜெசுய்த் (ஜெசுட்) தந்தையார் ''பிமாந்தா'' என்பவரால் ''செஞ்சி நாயக்கர்'' என்று குறிப்பிடப் பெற்றவர், சிதம்பரத்தில் விஷ்ணுவின் வடிவமாகிற பெருமானைச் சிதம்பரம் கோயிலில் ஸ்தாபிக்கச் செய்துள்ளார். அவ்வாலயம் முத்துவரசரால் திருப்பணி செய்விக்கப் பெற்றதென்பதைப் பல கல்வெட்டுக்கள் நமக்கு நிருபிக்கின்றன.

இவ்வகையாய், ''வையப்பா கிருஷ்ணப்பா கொண்டம நாயகர்'' எனவும் அவர் தம் குமாரர் ''முத்துகிருஷ்ணப்பா நாயகர்'' எனவும் இரண்டு அரசர்கள் நமக்குத் தெரிய வருகின்றனர். பின்னவர் 1595 ஆம் ஆண்டில் தம் தந்தைக்குப்பின் பட்டமேற்றுள்ளனர். 1595 ஆம் ஆண்டிற்கும் 1614 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தான் இவ்வரசர் அத்தூண்களைச் செதுக்கச் செவித்துள்ளார். வட்ட எண்ணுக 1600 ஆம் ஆண்டு என்று நாம் இவற்றின் காலத்தைக் கொள்வோமாக.

அக்கற்றூண்களை நாம் ஆராயுங்கால், விஷ்ணுபரமான சிற்பங்களையடுத்து கைக்கூப்பி வணங்குகின்ற நிலையில் செதுக்கப்பெற்றுள்ள வரலாற்றுப் பெரியோர்களின் சிற்பங்களும் அமைந்திருத்தலைக் காணலாம். மற்றும் அப்பாலத்தின் முகப்பிலுள்ள இரு தூண்களில், தஞ்சை மாவட்டம் பட்டீச்சுரம் ஆலயத்தில் காணப்படுகின்ற ''கோவிந்த தீக்ஷிதர்'' சிலையில் காணப்பெறும் - கூம்பு வடிவத்திலுள்ளதைப் - போன்ற முடிதரிக்கப்பெற்ற இருவர் காணப்பெறுகின்றனர். இவர்கள் அமைச்சர்களாவர். இவர்தம் ஒவ்வொருவருடைய பக்கலிலும், மனைவியொருவர்தாமே காணப்பெறுகின்றமையால், அக்காலத்

திய வழக்குப்படி இவர்கள் அரசர்க்கடுத்த கீழ் நிலையி லிருப்போர் எனக்கொள்ளக்கிடக்கின்றது. மற்றும் புதுவை தூய்ப்ளேக்ஸ் வீதியில் மத்திய சிறைச்சாலைக்கு நேர் எதிர்ப்புறத்தில், அதாவது பெரிய கடை என வழங்கும் அப்பகுதியில் நின்று காண்போமானால், அங்கும் செஞ்சியிலிருந்து கொணரப்பெற்றதாகின்ற கற்றூண் ஒன் றைக் காணலாம். அத்தூணில் தம் இரு தேவிமார்களு டன் காணப்பெறும் அரசர் தம் சிலை செதுக்கப்பெற்றுள் ளது. அவர் தம் தலையணி, கிரேக்க நாட்டின் பகுதியான "ப்ரிழி" பிரதேசத்திய குல்லாய்வடிவில் அமைந்து, பார்ப்பதற்கும் மிகவும் தனித்தன்மை வாய்ந்ததாய்த் தோன்றுகின்றது. 1600 ஆம் ஆண்டில் நாயக்க மன்னர் களின் கிரீடமும் அத்தகைய வடிவினதாக அமைந்திருந் தது வியக்கத்தக்கவொன்றாகும்.

அத்தூண்களைச் செதுக்கச் செய்வித்த அரசர் தம் பிரதிமையே அந்தத்தூணில் காணப்பெறுவதாகும்.

"செம்ஏர்"(Semeur) 1935 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இதழில் "முத்துகிருஷ்ணப்பநாயக்கர் தோல்வியுற்றமையால் 1618 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் தேதி ஒல்லாந்தே (Hollandais)க்காரர்கள் திருப்பாப்புலியூர் (திருப்பாதிரிப் புலியூர்) வாணிக நிலையத்தைக் காலிசெய்துவிட்டு, தாக்கு தற்குள்ளாகாத பாதுகாப்பிலிருந்த புதுச்சேரியில் தஞ்சம் புகுந்தனர்.

சிமோன் ழெஸ்தான் (Simon Jeesten) என்ற ஒல்லாந் தேக்காரரை நியமனம்செய்து, முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் அவர்களே, புதுச்சேரியில் ஐரோப்பிய வணிக விடுதியை நிறுவியராவர். இந்நிறுவனம் பெரிதும் முக்கிய மானதாகும்; ஏனெனில் சிமோன் ழெஸ்தான் என்ற மேற்படி ஒல்லாந்துக்காரரால் திறக்கப்பெற்ற அவ்வணிக நிலையம், தொடர்ந்து "தனுவா" (Danois) (டேனிஷ் காரர்)க்காரர்களும், பிரஞ்சுக்காரர்களும் மேற்கொள்ளு மாறு பெருக்கமுற்றதென்னலாம்.

ஐரோப்பிய நிறுவனம் ஒன்றின் முக்கியத்தை உணர்ந்திருந்த செஞ்சி நாயக்கவரசர்தம் சிலைச்சிற்பம் புதுச்சேரி நகரத்தின் வாணிக மன்றங்கள் அமைந்த பகுதியின் நடுவில் இவ்வாறாக அமைந்திருத்தலைக் காண

லாம். அம்மன்னர் வணிக நிறுவனங்களின் அமைப்பு முறையினைப் புதுச்சேரியில் தோற்றுவித்தவராவர். அவற்றின் சார்பாகவே இப்பொழுதுள்ள பிரஞ்சுக் குடியேற்ற நாடுகள் தோன்றலாயின.

முத்துகிருஷ்ணப்ப நாயக்கரின் மேற்குறித்த சிலை எல்லோராலும் கண்டு மகிழத்தக்க சிறப்புடையதாகும். ஆதலால் அஃது ஓர் உயரிய வரலாற்றுச் சிறப்புடைய பாதுகாப்புச் சின்னமாகக் கருதத்தகுந்த மதிப்புவாய்ந்த தாகும்.

## புதுச்சேரியின் துறைமுகம்.

நம்முடைய வாழ்நாட்காலமாகிற தற்போது புதுச்சேரியில் துறைமுகம் என்று வழங்கத்தக்க கடற்றுரை அமைந்தில்லை; கப்பல்கள்யாவும் நீண்ட தொலைவில் கடல் நீரில் தங்கிவிடுகின்றன; அதனால் இதனை ஒரு வெளிப்புறத் துறைமுகம் எனலாம்.

ஆனால் இந்நகரின் வரலாற்றை அறிந்துகோடற்கு, முற்காலத்தில் செஞ்சியாறுனது, நகர்க்கு அண்மையில், கிரைப்பாளையம் என்னும் பிரதேசத்தில் முற்றிலுமாகக் கடலில் சங்கமமாகிக் கொண்டிருந்துள்ளது என்பதை நாம் அறிதல்வேண்டும். உப்பளம் கல்லறைப்பகுதிக்குச் செல்வோமானல், நமது இடப்புறமாக ஒரு தாழ்ந்த சமவெளி அமைந்திருத்தலைக்காணலாம். தற்போதுதான் அங்கு ஒரு விளையாட்டுத்திடல் உருவாக்கப்பெற்றது. தூய்ப்ளேக்ஸ் அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிட்ட தேசபடம், அவ்வாற்றின் சங்கமத்தைத் தடுத்துக் கொண்டிருந்த, அர்ச்சியசிஷ்ட தோமாஸ் (Saint Thomas) என்பாரின் பெயரைத் தாங்கியிருந்த கோட்டைப்பகுதியின் தனித்த கட்டிடம் ஒன்று அவ்விடத்தில் அமைந்திருந்ததைப் புலப்படுத்துகின்றது.

அங்கு முற்காலத்தில் துறைமுகம் ஒன்று இருந்துள்ளது; 1700ஆம் ஆண்டுவாக்கில் வெளியிடப்பெற்ற "தெ பேர்" (de Fer) என்பாரின் தேசபடம் அப்பகுதியில் 13 கடல் அளவையில் அதாவது 21.02 மேத்தர் உயரத்தில் நீர் அமைந்திருந்ததாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

இன்று அவ்வாற்றுச் சங்கமமும் அங்கில்லை; துறைமுகமும் அங்கு அமைந்தில்லை; வீராம்பட்டினத்திற்கு அண்மையில் நீரானது தனக்கென ஒரு போக்கை அமைத்துக்கொண்டு விட்டது; மேற்குறித்த நேசபடம் அதனைப் 'புதுச்சேரி யாறு' என்று குறிக்கின்றதாயினும் அவ்வாறு தற்போது காணப்பெற்றிலது. தற்போது நாம் கேள்விப்படுவ தெல்லாம் "அரியாங்குப்பத்தாறு" என்ற ஒன்றைப்பற்றிக் கூறுகின்றதையேயாம்.

அதற்கும் அதிக தொலைவில் தென்பால், செஞ்சி யாற்றின் கிளையொன்ருகச் "சுண்ணும்பாறு" ஒன்று காணப் பெறுகின்றது. முற்காலத்தில் அத்தகைய கிளையாறு இவ்வாற அமைந்திருந்ததில்லை. சுருக்கமாகக்கூறுங்கால், புதுச்சேரிக்குத் தற்போது ஆறு ஒன்றில்லை துறைமுகமும் இல்லை, செஞ்சியாறு பெரிதும் அதன் தென்பால், "அரி யாங்குப்பத்தாறு" 'சுண்ணும்பாறு' எனவழங்கும் இரு கிளைகளாகப்பிரிந்து ஓடிக்கொண்டிருக்கிறது; முற்காலத் தில் அவ்வாற்றின் நீர் முற்றிலும் தனித்த ஒரேமுக மாகக் கடலில் சங்கமித்துக்கொண்டிருந்தது, அம்முகத் துவாரம் தற்போது அடைந்துபட்டுள்ளது; ஆழமான அத்துறையில் புதுச்சேரிக்கு முற்காலத்தில் அமைந் திருந்த துறைமுகம் தற்போதில்லை.

"பிரான்சுவா மர்த்தேன்" அவர்கள் காலத்தின் போதும் அமைந்திருந்த புதுச்சேரித் துறைமுகம், ஒரு நூற்றுண்டிற்குப் பின்னர் முற்றிலுமாக மறைந்துவிட்ட தென்பதை நிரூபிக்க அதற்கு ஆதாரமான எழுத்துச் சான்றுகளைக் குறிப்பிடவேண்டியது நமது கடமை யாகின்றது. ஏனெனில் இஃது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுப் பிரச்சினையாகும்.

"பிரான்சுவா மர்த்தேன்" நினைவுக் குறிப்புக்களின் இரண்டாம் புத்தகம். 16 ஆம் பக்கம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது : "லா தில்லிழாந்த்" என்ற போர்க் கப்பல் கடற்றுறையின் கண்ணேயே தங்கியிருந்தது. புதுச்சேரியாற்றின்கண் அக்கப்பலைச் செலுத்துதற்கு முடிவு செய்தனர். கடந்த கார்காலத்தின் மிகப் பெரிய மழை நீரோட்டங்களினால் அவ்வாற்றின் முகப்பில் அமைந்திருந்த மணல் மேடானது பெரிதும் ஆழங்காற் பட்டிருந்தது. பாய்கள் உயர்த்தப்பெற்ற நிலையில் அப்

போர்க் கப்பலானது ஆற்றின்கண் நுழைந்தது. பின்னர் அது உபயோகப்படக்கூடிய நிலையில் இராமையினால், அவ்விடத்திலேயே மூழ்குமாறு கைவிடப்பட்டு, அதன் பின்னர் துண்டு துண்டுகளாகத் துணித்தெடுக்கப் பெற்றது. அவ்வாறு நல்ல நிலையில் நீடித்திருந்திருப்பின், புதுச்சேரி அக்கரைப் பகுதியில் பெரிதும் அனுகூலமான ஒரு துறைமுக நகரமாக விளங்கியிருக்கலாம்; அக்காலத்தே அஃது அமைந்திருந்த நிலையிலேனும் அது முதற்கொண்டு அதனை நாம் காணற்கியலாது போயிற்று."

இவ்வாறாக, 1675 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு போர்க்கப்பல், பாய்கள் உயர்த்தப்பெற்றுப் புதுச்சேரித் துறைமுகத்தில் வந்து சேர்ந்துள்ளது. மற்றும் பிரான்சுவா மர்த்தேன் குறிப்பிடும் இறுதிக் குறிப்பானது அச்சிறந்த துறைமுகத்தைப்பற்றி அன்னவர் கொண்டிருந்த உயர்ந்த மதிப்பீட்டினையும் நன்கு நமக்குப் புலப்படுத்துகின்றதல்லவா?

1769 ஆம் ஆண்டில் லெ ழாந்தில் என்பார் "பிரயாணங்கள்" என்னும் தமது நூலின் முற்பகுதி, பக்கம் 544 இல் கீழ்வருமாறு குறிப்பிட்டிருந்தனர்: "மிகப் பெரு மழைகளினால் பெரிய வெள்ளப் பெருக்கு நேர்ந்தபோது மேற்படி ஆறானது மற்றொரு படுகையை அமைத்துக்கொள்ளலாயிற்று. அப்புதிய கிளையே தற்போது அவ்வாற்றின் பிரதான கிளையாக விளங்குகின்றது. பழைய முந்தைய கிளையானது சிறிது சிறிதாகத் தூர்ந்துபோய் நாளுக்கு நாள் ஆழங்குறைந்துபட்டதாம்."

இவ்வாறாக புதுச்சேரித் துறைமுகத்தின் மறைவு ஒரு வரலாற்றுச் சம்பவமாகக்கொள்ளத்தக்கதாகும். 1675-ஆம் ஆண்டில் போர்க்கப்பலொன்று உயர்த்திய பாய்களுடன் கிரைப்பாளையம் மார்க்கமாய் ஆற்றில் புகுந்து, தற்போது விளையாட்டுத் திடல் அமைந்து காணும் அதே இடத்தில் போர்ப்பணியில் ஈடுபட்டுள்ளது. 1765 ஆம் ஆண்டிற்கு முன்னர்ப் புதுச்சேரி துறைமுகத்தின் சார்பினால், அக்கரைப் பிரதேசத்தில் பெரிதும அனுகூலமான ஒரு துறைமுக நகரமாக விளங்கியிருந்ததை நாம் அறிய நேர்கின்றது.

1769 ஆம் ஆண்டில் அத்துறைமுகம் மறைந்து போயிற்று; மேற்குறித்த "லெமாந்தில்" என்பார் அதே நூலில் 541 ஆம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள் ளார்: புதுச்சேரி நகரத்திற்குத் துறைமுகம் ஒன்று இருந்திருப்பின், இந்தியாவின் முழுமைக்குமாக, விசேட மாய் அதன் வாணிபத்துறையில் அந்நகர் தலைமை ஸ்தானத்தை வகித்திருக்கக்கூடும். இவ்வழகிய பெரு நாட்டின் ஏனைய பகுதிகள் அனைத்தும் அதற்குத் தத்தம் பண்டங்களை வணிகத்திற்கு வழங்குவனவாக அமைந்து சிறப்படைந்திருத்தல் கூடும். இந்நிலை நமக்கு முற்காலத்தில் "தீர்", சிதோன் என்ற நகரங்களிலிருந்த பிரஜைகள் வாழ்ந்திருந்த நிலைக்கொப்பானதாக புலப்பட் டிருக்கும்.

1673 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட புதுச்சேரியின் வர லாற்றைத் தொகுத்தற்கு. "முற்காலத்தில் புதுச்சேரி நகர்க்குத் துறைமுகம் ஒன்று இருந்துள்ளது. அதன் காரணமாய் அந்நகர் சிறந்து ஒரு முக்கியமான துறை முகமாய் விளங்கியிருந்தது" என்ற ஒரு தோற்றுவாயினை முதலாகக்கொண்டு தொடங்குவது மிகவும் முக்கியமான தாகும்.

மிகப் பழமையான காலத்திலும், வரலாற்றின் இடைக்காலத்திலும் புதுச்சேரியானது. அக்கரைப் பகுதியில் மிகப் பெரிய துறைமுகமாக விளங்கியிருந்தது எனில், அது சுமத்ரா. மல்ாக்கா நாடுகளின்மூலம் ஆசியா வின் கீழ்க்கோடியிலிருக்கும் நாடுகளுடன் உறவுகள் பல வற்றைக் கொண்டிருந்துள்ளது என முடிவு செய்தல் வேண்டும்.

தற்போதும் நாகப்பட்டினத் துறைமுகம் பினங்குடன் தொடர்பு கொண்டுள்ளதல்லவா? அந்நகரில் 'சீனக் கோயில்" ஒன்று அக்காலத்தில் இருந்துள்ளது, அண்மைக் காலத்தில்தான் அக்கோயில் 'ஜெசுய்த்"(ஜெசுட்)குருமார் களால் அழிக்கப்பெற்றதாகும் "லெய்த்"("லெய்டன்") கலை கூடத்திலுள்ள சிறப்புமிக்க கல்வெட்டொன்று சான்றாக அமைவதைக் கொண்டு, அப்புத்தர் கோயில், சுமத்ரா, மலாக்கா, கிடாரம் ஆகிய நாடுகளனைத்திற்கும் அரசனாகி விளங்கி ஆட்சி செலுத்திய "ஸ்ரீவிஜயா" என்ற மன்னரால்

அமைக்கப்பெற்றுப் பரிபாலிக்கவும் பெற்றுவந்துள்ளது என அறிகிறோம்.

நாகப்பட்டினம் தன்னகத்தே சீனக் கோயிலொன்றைக் கொண்டிருந்ததெனில். புதுச்சேரியும் "பர்மாக் கோயில்" ஒன்றை அக்காலத்தே கொண்டிருந்ததாம் உண்மையில் இக்கோயில்களின் பெயர்கள் நவீனமானவைகளாக இருப்பினும், அவை "புத்தர்" கோயில்களையே தாம் குறிப்பிடுகின்றனவாகும். புத்த நிறுவனம் ஒன்றை நாகப்பட்டினத்தைப்போன்று பெற்றிருந்தது புதுச்சேரி நகரத்திற்கே ஒரு பெருஞ் சிறப்பாகும் இந்தோ சீன பௌத்தர்களின் குடியேற்றம் ஒன்று புதுவையில் அமைக்கப்பெற்றிந்தது என்பது ஒருமுழுத்த சான்றாகும்

புதுச்சேரியாற்றின் கரையில் புத்தர் கோயில் இருந்ததை மேற்கூறிய "ஜெலாந்தில்" என்பார் தம் நூலின் 147 ஆம் பக்கம் குறிப்பிடுகின்றது. அன்னவர் பின்வருமாறு அந்நூலில் கூறியுள்ளார். "யான் விநோதமாக அமைந்திருந்த அச்சிலையுருவத்தைப் பற்றிப் பல்வேறு செய்திகளைச் சேகரித்தேன்; தமிழர்கள் அதனை "பவுத்" (Baouth) (பௌத்) என்று உறுதியாகக் கூறினர். சோழ மண்டலக் கரையில் சீனர்கள் "பவுத்" காலத்தின் போதுதான் வாணிகத்தின் பொருட்டு வந்திருந்தனர்" என்றும் குறிப்பிட்டனர். லெஜாந்தில் என்பார் தம் நூலின் 544 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருந்த அவ்விடமானது அரியாங்குப்பத்தின் கிழக்கில் ஆற்றின் கரையில் இறந்தவர்களைத் தகனம் செய்கின்ற இடத்திற்கு அண்மையில், காணப்பெறுகின்றது. ஞான ஒளி பெற்ற காலை, தியான நிலையில் அமைந்திருந்த புத்தர்தம் உருவமே அச்சிலையாகும். வலப்புறத்தோள் வெளித்தோன்றும் வண்ணம் பௌத்த அங்கியொன்று அவர்தம் உடலைப் போர்த்திய வாறு அமைந்திருந்தது; மற்றும் இடது புயத்தை மூடிய வாறு, மார்பின் இடது பக்கத்தில். நன்கு கண்ணுக்கு விளங்கக்கூடிய நிலையில் ஒரு மடிப்பாக அமைந்து தொங்கிக் கொண்டிருக்கும் வண்ணம் அஃது புலப்பட்டது. ஒரு கால் நூற்றுண்டிற்கு அதிகமாகவே, 1909 ஆம் ஆண்டளவில் அப்புத்தர் சிலைக்கு எதிரில் அகழ்வராய்ச்சிப் பணியை மேற்கொண்டிருந்தேன். விளக்கங்கள் தரும் பதிவு எழுத்துக்களைக்கொண்டிருந்த இரு சிலைகள் நற்காலவசமாய் அங்குக் கிடைத்தன. அச்சிலைகள் அழகப்ப

தாண்டு இடைவெளிக் காலத்தில் அந்த நகரமானது எத்துணை மாற்றத்திற்குள்ளாகியுள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

மேற்குறித்தபடி இவ்விரு வரை படங்களையும் ஒப்பிட்டுக் காண்டல் அதிகமும் ஆர்வமளிப்பதாகவுள்ளது. இன்று வாழ்ந்துவரும் மக்களுக்கு அவரவர்கள் தம் குடியிருப்புக்கள் அமைந்துள்ள அதேயிடத்தில் 17 ஆம் நூற்றாண்டுக் காலத்தின்போது எத்தகைய மாளிகைகள் அமைந்திருந்தன என்பதை அறிந்துகொள்வது எத்துணை வியப்பையும், ஆர்வத்தையும் ஊட்டவல்லதாக அமையும். எனவே. அவ்விரு வரை படங்களையும் ஒன்றின் மற்றொன்று பொருந்துமாறு ஒரு படமாக அமைத்துக் கொண்டு, 1699 ஆம் ஆண்டுக்குரியதும், 1937 ஆம் ஆண்டுக் குரியதுமான ஒன்றாக அமைந்த அவ்விரு வமைப்புக்களையும் பற்றி சில விமரிசனங்களைக் குறிக்க விழைகின்றேன்.

நாம் குறிப்பிட்டவாறு அமைந்துள்ள அப்படத்தின் மையத்தில் ஒரு பக்கத்தைக் காட்டிலும் மற்றொரு பக்கம் நீண்டுள்ள கோட்டையின் அமைப்பினைக் காணலாம். அதன் மூலைகளில், சரித்திரத்தின் இடைக் காலத்திய வடிவமைப்பினைக்கொண்ட வட்ட வடிவுடைய கோபுரங்களைக் காணலாம். கோட்டையின் கட்டிடங்களைப் பற்றிக் குறிப்பிடுங்கால். ''பிரான்சுவா மர்த்தேன்'' என்பார் தம் நூலின் மூன்றும் பகுதி, பக்கம் 350 இல் தாமே குறித்திருப்பதாவது : ''அக்கட்டிடங்கள் யாவும் பெருஞ் செல்வர்கள்தம் மாளிகைகளின் வேலைப்பாடுகளைக் கொண்டவைகளாய்த் திகழ்ந்தன. இங்குக் குறிப்பிடும் பெருஞ் செல்வர்கள் 14 ஆம் நூற்றாண்டுக் காலத்திய ''பிஜாநகர்'' அரசர்களாவார்கள்.

அடுத்துப் பிரான்சுவா மர்த்தேன் என்பாரின் பிரஞ்சு நாட்டுக் கட்டிடக் கலை முறைப்படி அமைக்கப்பெற்ற கட்டிடங்கள் அவற்றினின்றும் வேறுபட்டுக் காண்கின்றன. இவைகள் ''bastions'' என்னும் இருபக்கங்களும் இரு முகப்புக்களும்கொண்ட அமைப்புக்களாகும். படத்தில் B எழுத்திட்ட இடம் 1676 ஆண்டுத் தொடக்கத்திலிருந்த ''bastion'' என்னும் சிறிய அமைப்பாகும். அது

பெரும்பாலும் ஐம்பட்டை வடிவுடைய கோட்டையின் கவர்ச்சியூட்டும் பகுதியாக இருந்திருக்கலாம்; அவ்வடிவில் கோட்டை அமைக்கப்பெற்றிருக்கலாம் என்பது ஐயுறுதற்கிடனுயுள்ளது. பின் D. எழுத்திட்ட இடத்தில் " பிரான்சுவாமர்த்தேன் " என்பாரால் அமைக்கப் பெற்ற, அகழி, அதன் புறச்சரிவு ஆகியவற்றை அடிப் பாகத்தே கொண்டுள்ள கோட்டையின் புறமதிலுறுப்பு "demi - lune" காண்கின்றது.

" லூய் " கோட்டை கட்டப்பெற்றகாலே முந்தைய வட்ட வடிவக் கோபுரங்களில் மூன்று மறைந்துபட்டன. C எழுத்திட்ட இடத்தில் உள்ள நான்காவது கோபுரம் மட்டிலும் நிலேத்து நின்று அக்கோட்டையின் கொடி மரக் கம்பத்தினைத் தன் உச்சியில் கொண்டு விளங்கியிருந்துள்ளது. அக்கோட்டை "சுய்ப்ரேன்" (Suffren) வீதியில் தற்போது வங்கி அலுவலகக் கட்டிடமாகத் திகழும் மாளிகைக்குக் கிழக்கிலுமாக அமைந்திருந்துள்ளது. கடந்த இவ்வாண்டுகள்வரை மேற் கூறிய " சுய்ப்ரேன் வீதி " "கொடி வீதி" என்று பொருள்படும் ,'பவிய்யோன் "வீதி (Rue du Pavillon) என்றே வழங்கப்பெற்றதாகும்.

"51" எண்ணிட்ட இடத்தில் "பிரான்சுமர்த்தேன்" என்பாரின் அரசாங்க மாளிகை அமைந்திருந்து, பின்னர் "துய்ப்ளேக்ஸ்" என்பாரின் புதிய அரசாங்கமாளிகை எழுந்துள்ளது.

A எழுத்திட்ட இடம் "லூய்" கோட்டையின் நடுப் பகுதியாகும். முன்குறிப்பிட்ட ஒருபக்கம் மட்டிலும் நீண்டுள்ள கோட்டையின் கிழ்ப்புறத்திலுள்ள மதிலின் நடுவிடத்தையும் மையமாகக் கொண்டு அமைத்துக்கொள்ளப்பட்டதாகும் அது. அந் நடுப்பகுதி அரசாங்கத் திடலில், இந்தோ-சீன வங்கியின் தற்போதைய யுகோ வங்கி. மேற்குப்புறக் கதவின் எதிர்ப்புறத்தில், மருத்துவச் சாலேயில், மடத்துச் சகோதரிகளின் பொறுப்பிலுள்ள துணிகளைச் சேமித்து வைக்கும் நிலேயத்திற்கும் எதிர்ப் புறத்திலுமாக அமைந்துள்ளது, துணிகளைச் சேமித்து வைக்கும் அந்நிலேய இடத்தேயே அர்ச்சியசிஷ்டலூய் என்பார் தம் பெயர்கொண்ட சிறிய தேவாலயம் அமைந்துள்ளது. ஆனல் ஒரு பக்கம் மட்டிலும் நீண்டுள்ளதான முன்குறித்த கோட்டையி

லிருந்த பழைய சிறிய தேவாலயம். அதாவது "பிரான்சுவா மர்த்தேன்" என்பாரும் அவர் தம் மனைவியார் "மர்த்தேன் அம்மையார்" என்பாரும் நல்லடக்கம் செய்விக்கப்பெற்றதானது 57 எண்ணிட்ட இடத்தில் அமைந்திருந்ததாகும். 1704 ஆம் ஆண்டுக் காலத்திய, "தெனியோன்" என்பார் திட்டப்படி அமைந்த, நிலவமைப்புத் துறையினரின் 1 ஆம் எண்ணுள்ள வரை படத்தின்படி, அரசினர்த்திடலில் "அர்ச்சிய சிஷ்ட ஆன்ழ்" வீதிக்கும் நாணயச்சாலை வீதிக்கும் குறுக்காக அமையும்இடத்தில் அமைந்திருந்ததாகும்.

"சேர்க்கிள்" என்ற கழகத்தினுடைய சுற்றுச்சுவரின் வடமேற்கு மூலையில், G எழுத்திட்டுள்ள இடத்தில் கத்தோலிக்கர்களின் கல்லறை இருந்துள்ளது.

H எழுத்திட்டுள்ள இடம் ஒரு தோட்டமாகும் அது தற்போது கால்வாயாக இருப்பதும் முற்காலத்தில் ஊற்றுக்காலாக இருந்ததுமான இடத்தில் அமைந்திருந்தது. 1600 ஆம் ஆண்டில் அத்தோட்டம் "கிதி" (கெஸ்தி) என்று வழங்கப்பெற்றவரும், பிராஞ்சு நாட்டவரும், நீண்டகாலம்வரை சென்னை நகரிலேயே குடியிருந்தவருமான துரை ஒருவருக்குச் சொந்தமாயிருந்தது. துய்ப்ளேக்ஸ் வீதியின் பாலம் அமைந்திருக்கும் இடத்திலிருந்து தொடங்கி தெற்கு நோக்கியவாறு அக்கால்வாய் அதன் இரு சாலைகள் முழுமைக்குமாக அத்தோட்டம் அமைந்திருந்ததாகும். நிலவமைப்புத்துறையினரின் 3 ஆம் எண்ணுள்ள வரைபடத்தின்படி (1714 ஆம் ஆண்டு காலத்தியது) "மர்த்தேன் அம்மையார்" தோட்டம் என்று வழங்கப்பெற்றுள்ளது. இச்செய்தி நமக்குப் பேரார்வத்தை யூட்டுகின்றது. மற்றும் குடியேற்ற நாடுகளின் அமைச்சுத் துறையின். 15 ஆம் எண்ணிடப்பெற்ற வரைபடத்தில் "விதவை மர்த்தேன் அம்மையாரின் தோட்டம், அழிக்கப்படவேண்டிய ஒன்று" என்றும் குறிப்பிடப்பெற்றிருப்பதைக் கொண்டு, இச்செய்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த இடத்தில்தான், "ரொபேர் கெப்ளே" என்பாரின் உருக்காலையின் மேற்குப் பக்கத்தில் சிறிதளவும் அடங்கிய அவ்விடத்தேதான், மரங்களின் நிழலில், ஊற்றுநீர்க்கரை யோரத்தில், 1706 ஆம் ஆண்டில் காலஞ்சென்ற தமது கணவரைப்பற்றிய சிந்

தையோடு ''மர்த்தேன் அம்மையார்'' இளைப்பாற்றிக் கொள்ளப் போகின்றனர்.

M எழுத்திட்ட இடம் 1699 ஆம் ஆண்டில், 'தே. ஒழியே'' என்ற குதிரை வீரரால் அழிக்கப்பெற்ற ஒல்லாந்தேக்காரர்களின் பீரங்கிக் களமாகும்.

J எழுத்திட்ட இடம் ஒரு பள்ளிவாசலாகும். இஸ்லாம் மதத்திற்கு மாறியவராகிய '' மவுலா சாஹிப் '' என்ற பிரமுகர் அங்குத்தான் நல்லடக்கம் செய்யப்பெற்றிருந்தனர். அப்பள்ளிவாசலுக்குரிய நிலம் எப்போதும் போல் இஸ்லாமியர்க்கே சொந்தமாக இருந்துவருகிறது அந்நிலம் '' பாஸியேவ் '' ( Buslieu ) என்ற வீதியில் அமைந்துள்ளதாகும். அது மிகச் சிறந்த குறியிடமாகும். அதன் பக்கத்தில் '' கூடலூர் வாயிற்புறம் '' அமைந்திருந்ததாகும். பிரான்சுவா மர்த்தேன் காலத்தில் ''கூடலூர் வாயில் விதியானது'' பெரும்பாலும் 46 எண்ணிட்ட இடத்திலிருந்து K எழுத்திட்ட இடம்வரையில் கிழக்கு மேற்காக அமைந்திருக்கும் வீதியாக இருக்கலாம். அவ்வெழுத்திட்ட இடத்தில்தான் ''மர்த்தேன் '' அம்மையாருடைய விடு அமைந்திருந்ததாகும்.

E எழுத்திட்ட இடம் ஒரு பெரிய விசாலமான வீடு அமைந்திருந்த இடமாகும், அது பின்னால் டேனிஷ்காரர்களின் இல்லமாக விளங்கியிருந்த ஒரு சிறிய கோட்டையாக மாற்றியமைக்கப்பெற்றதாகும்.

N எழுத்திட்ட இடத்தில் அர்ச்சிய சிஷ்ட லஜார் தேவாலயம் அமைந்திருந்தது. அதன் பூசை நிகழ்வுறும் நடுவிடம் தற்போது ''துய்மா'' (டுமேஸ்) வீதியினால் குறுக்கிடப்பெற்றுள்ளது. குறிப்பாக உப்புக் கிடங்கின் மேற்குப் பக்கத்தில் என்று கொள்க.

Y எழுத்திட்ட இடத்தில் தற்போதும் கிணறொன்று காணப்பெறுகின்றது. அது மின்சாரம் உற்பத்தி செய்யும் ஆலைக்குப் பெரிதும் பயன்பட்டு வந்துள்ளது. லெ மாந்தில் என்பாரால் அக்கிணறு புதுச்சேரியின் அழிபாடுகளைக்காட்டும்படத்தில் குறிக்கப்பெற்றுள்ளது. பொறியியல் வல்லுநர் ஒருவரின் தோட்டத்தில் அக்கிணறு அமைந்திருந்ததாகும்.


T எழுத்திட்ட இடம் ஹ்ாலண்டுக்காரர்களால் கட்டப்பெற்ற, அர்ச்சிய சிஷ்ட லூய்'' என்றபெயர் தாங்கியிருந்த, சிறிய கோட்டையைக் குறிக்கும். அக்கோட்டை தனது பெயரை அவ்வீதிக்கும் வழங்கவே, அவ்வீதி'' அர்ச்சிய சிஷ்ட லூய் வீதி '' என்று வழங்கப்பெற்றதாம், அக்கோட்டை வீதியின் கிழக்குப் பாதிப் பகுதியிலும் தற்போது ஆளுநர் (கவர்னர்) கோதார் (Gaudart) அவர்கள் வசித்துவரும் வீட்டு வாயிற்புறத்திலுள்ள சிறிய தோட்டத்திலுமாக அமைந்திருந்ததாகும்.

32 எண்ணிட்ட செயிண்ட்லூய் வீதியும். 31 எண்ணிட்ட பிரான்சுவா மர்த்தேன் வீதியும், 30 எண்ணிட்ட ஆர்லியன்ஸ் ( ஒர்லெயான் ) வீதியும். கடைசியாக "லா தெ லொரிஸ்தோன்'' வீதியும் மிகப்பழமையானவைகளாம். எனினும் இறுதியாகக் கூறிய வீதிக்கு மட்டிலும் தற்போது அதன் முந்தையப் போக்கு நிலை முற்றிலுமாக வேறுபட்டுக் காண்கின்றது.

வடபால் உள்ள கரைப்புறம் இன்று காணப்படுவது போன்றே அமைந்திருந்தது. ஆனால், தென்புறம் கடல் பெரிதும் தொலைவில் இருந்ததாகும், ஏனெனில் பொதுக் கிடங்குகள் அமைந்திருந்த இடப் பகுதியில் பாய்ந்து கொண்டிருந்த புதுச்சேரியாருனது, மண்மேடு இட்டுக் கொண்டிருந்துள்ளது. அம்மண்மேடு, பிற்காலத்தே அவ்வாறு வீராம்பட்டினத்திற் கண்மையில் பாயத்தொடங்கியது முதல் சிறுது சிறிதாக மறைந்தொழிந்ததாம்.

நகரின் தென்பாலுள்ள வீதிகள் எல்லாவற்றிலும் ''கப்புய்ஸேன் மார்கள் '' வீதியொன்றே மிகப்பழமையானதாகும்.

1699 ஆம் ஆண்டினுடையதும் 1937ஆம் ஆண்டினுடையதுமான இருபடங்களையும் ஒன்றின்மேல் வொன்றுக அமைத்து நாம மேற்கொள்ளும் முக்கிய முடிபுயாதெனில், அக்காலை மடத்தின் குருவாக விளங்கி யிருந்த '' குய்யோன் '' (Guyon) தந்தையாரின் கூற்று முற்றிலும் உண்மையானது- என்பதேயாகும். வெண்ணிறத்தவர்கள் வதிந்திருந்த நகரப் பகுதியின் அழகிய ஒழுங்கு முறை அமைப்பு, நகரில் ஆளுநர் (கவர்னர்) களாக ஆட்சி செய்தோர்களின் மன விருப்பத்தினைப் புலப்படுத்துகின்றது.



புள்ளிகளில் காட்டப்பட்டுள்ள 1937-ம் வருடத்திய புதுவை நகரின் அமைப்புக்கு இணையாக, 1699-ம் ஆண்டு நிலவிய புதுவை நகரின் அமைப்பு வரிகளில் காட்டப்பட்டுள்ளது.

சந்தர்ப்பத்திற்கியைந்த வகையில் கட்டப்பெற்றிருந்த ஒரு பழமையான நகரை, ஒரு பிரஞ்சு நாட்டின் நகரமாக அவர்கள் உருமாற்றியுள்ளனர். அந்நகரின் பெரிதும் நேரிய வீதிகள் தூய்மை,ஒழுங்கு என்னும் பண்புகளைப் பகர்வனவாம். ஏனெனில், பிரஞ்சு நாட்டில் 14 ஆம் லூய் அரசரின் ஆட்சிக்கால இறுதியில், இப்பண்புகளே பிரஞ்சு மக்களின் சிந்தையைக் குறிப்பிடுவனவாக விளங்கியிருந்தன'' என்று அப்பெரியார் கூறியிருந்தனர்.

# புதுச்சேரியும் இந்திய வணிகக்கழக ஸ்தாபிதமும்

பிரஞ்சு குடியேற்ற நாடுகளின் வரலாற்றிதழ் முதற் பாகம் பக்கம் 64 இல், 1913 ஆம் ஆண்டில் "தெலா ரோன்ஸியேர்" என்பார், 89 ஆம் எண்ணுள்ள "துவாஜி" என்பாருடைய தொகுப்பில், 175 ஆவது ஏட்டில், வரலாற்று ஆதாரம் ஒன்றினைக்கண்டு பிடித்தார். அவ்வாதாரப்படி புதுச்சேரியில் முதன் முதலாகப் பிரஞ்சுக்காரர்களின் குடியேற்றம், 1617 ஆம் ஆண்டுக் காலத்திய பழமையது என்று விளங்கிற்று.

"செயிண்ட் லூய், செயிண்ட்-மைக்கேல்" என்ற பெயருடைய இரு, 600 டன்கள் ஒவ்வொன்றும் எடையுடைய, நவாய்கள் 1616 அம் ஆண்டின்போது இந்தியாவிற்குப்புறப்பட்டுச் சென்றிருந்தன. செயிண்ட்-மலோ ( Saint-Malo ) என்ற ஊரில் ஆயத்தம் செய்யப் பெற்றவையும், எட்டு அல்லது ஒன்பது இருபது பேர்கள் அனைவரும் பிராஞ்சு நாட்டவர்களாகவே விளங்கியிருந்தவர்களைக் கொண்டிருந்தவைகளுமான அவ்விரு நாவாய்களின் புறப்பாடு "முப்பதாண்டுப்போர்"க்கு முந்தியதாகும். சிலோனில் அவ்விரு நவாய்களும் பிரிந்துபோயின; செயிண்ட்-லூய் நாவாய், சோழமண்டலக்கரை நெடுகிலுமாகத் தொடர்ந்து சென்று, புதுச்சேரி, பெண்டாபொளி (நைஜாம்பட்டினம்), மசூலிப்பட்டினம் ஆகிய துறைமுகங்களில் தங்கிப் பின்னர், சுமத்ராவுக்கு வடபால் அஷாம் என்ற துறைமுகத்தில் செயிண்ட்-மைக்கேல் நாவாயுடன் சென்று சேர்ந்துகொண்டது.

செயிண்ட்-மைக்கேல் நாவாய் பெண்டாம் துறைமுகத்தில் ஹாலண்டுக்காரர்கள் வசமாயிற்று.

செயிண்ட்-லூய் நாவாய் ஒன்று மட்டும் சுகமாகச் "செயிண்ட்மலோ" துறைக்குத் திரும்பிற்று. இப்பயணத்திற்கு இரண்டு வருடம ஐந்து மாதம் பிடித்துள்ளது.

ஜீன்-பீபைன் (Jean-Pepin) என்பார், செயிண்ட்-லூய் நாவாயில், செயிண்ட்-மலோ நகரத்தார் தம் வணிகக் கழகப் பிரதிநிதியாக இருந்துள்ளார். அக்கப்பல் 1617 ஆம் ஆண்டில் புதுச்சேரியில் தங்கிச் சென்றதென மேலே குறிப்பிட்டோம். அதன்படி முதன் முதலாகப் பிரஞ்சுக் குடியேற்றத்தை நிறுவிய புகழ் மேற்சொன்ன ஜீன்-பீபைன் என்பவரையே சாருகின்றது.

அதன் தொடர்பாக, 455 ஆயிரம் (livres) பிராங்குகள் கொண்ட தொகையை முதலீடு செய்த சில ஆந்வேர் (Anvers) நகர வணிகர்கள் வியாச்சியமொன்று தொடங்க வேண்டிய கடப்பாடுடையவர்களானர்கள். அவ்வியாச்சியம் 1664 ஆம் ஆண்டு வரையிலுங்கூட நீடித்து நடைபெற்றுக்கொண்டிருந்ததாகும். அவ்வாண்டின்போது அவ்வணிகர்கள் 14 ஆம் லூய் அரசர்க்கு வேண்டுகோள் விண்ணப்பும் ஒன்று கொடுத்திருந்தனர். "துவாஜி" என்பார் தம் தொகுப்பு, 89 ஆம் பகுதி, 175 ஆவது ஏடாக, "தெலா ரோன்ஸியேர்" என்பாரால் அவ்வாதரவு கண்டு பிடிக்கப்பெற்றுள்ளது.

நமது நகரத்தோடு தனிப்பட்டவிதமாகப் பெரிதும் சம்பந்தப்பட்ட அந்த ஆதரவின் புகைப்படம் பிரதி புதுச்சேரியில் இருக்கக்கூடும் என்றெண்ணினேன்.

பின்னர், பாரீஸ் II, ரிஷ்லியேவ் வீதி, 58 எண்ணுள்ள தேசிய நூல் நிலைய நண்பர்கள் கழகத்தினுடைய செய்தி அலுவலகத்தின் உதவியினல், பின்வரும் வாசகப்பகுதியடங்கிய புகைப்படப் பிரதியொன்றைப் பெற்றேன். அது முக்கியமான ஒரு புலப்பாட்டின் போதில் நேர்ந்தது. குடியேற்ற நாடுகளின் வரலாற்றிதழ், 1913 ஆம் ஆண்டில் வெளியிட்ட முதல் வருடப் பிரதியில், மேற்குறிப்பிட்ட பத்திரத்தைத் "தெலா ரோன்ஸியேர்" எஸ்பான் 64, 65 எண்ணுள்ள பக்கங்களில் பிரசுரம் செய்திருந்தனர். அப்பிரசுரத்தில் நமது ஊரின் பெயர் மட்டிலும் பிழைகளோடு காணப்பெற்றது. அன்னவர் "புதுச்சேரி"

(Pondicherry) என்ற பெயரைப் "புதிச்சேரி" என்று பதிப்பித்திருந்தனர்.

அப்பத்திரவாசகத்தில், "Pondi" என்பதற்குப் பதில் "Poudi" என்றும், "cheri" என்பதற்குப் பதில் "chori" என்றும் அமைந்துள்ளது. வரலாற்று நோக்கின்படி ஒரு சொல்லின் எழுத்தியல் எத்துணையளவு முக்கியத்துவம் பொருந்தியதென்பதை அதிகமும் நினைவூட்ட வேண்டியதில்லை என்றெண்ணுகின்றோம்.

அப்பத்திரப் புகைப்படப் பிரதியைக் கண்ணுற்ற போது, மிகவும் ஆர்வந்தரும் இரண்டாவது. கருத்தொன்றை யான்கொள்ள வேண்டி நேர்ந்தது. குறிப்பிடத்தக்க செய்திகள் ஒன்றையும் "தெலா ரோன்ஸியேர்" என்பார் அதில் குறித்திலர். ஆதலினால் இங்குப் பேசப் படுவது ஒரு கையேட்டுப் பிரதியாக இருந்திருக்கலாம் என்று நாம் எண்ணக்கூடும். இவ்வாசகப் பத்திரம் ஓர் அச்சுப் பிரதி என்பதை நாம் கண்டுகொள்வது தலையான முக்யத்வம் வாய்ந்ததாகும். அச்சடிக்கப்பெற்றுக் கொடுக்கப்பெற்றுப் பிரஞ்சு நாட்டில் உரிய விடையும் அளிக்கப் பெற்றுள்ள விண்ணப்பம் ஒன்றே இங்கு நம் கண் முன் காண்பது.

இவ்வெளியீடு திட்டவட்டமாக 1664 ஆம் ஆண்டில் செய்யப் பெற்றுள்ளது; இவ்விண்ணப்பம் யாருக்கு அளிக்கப் பெற்றதோ, அதே 14 ஆம் லூய் அரசர் பிரான் அதே 1664 ஆம் ஆண்டில், கிழக்கிந்தியப் பிராஞ்சு அரச வணிகக் கழகம்" என்பதைத் தோற்றுவித்துள்ளார்.

அவ்விண்ணப்பத்தில், பிரயாண வரலாறு மட்டிலும் அல்லாமல், இந்தியாவில் வணிகக் கழகம் அமைக்கும் திட்டம் ஒன்றும் குறிக்கப்பெற்றிருந்தது.

## "மேற்குறித்த பிரயாணத்தின் குறிப்பிடத்தக்க அநுபவங்களும், இந்திய வாணிகமும்"

அதைச்சார்ந்த உண்மைகள், அநுபவங்கள் ஆகியவற்றில் முதன்மையானது, கிழக்கிந்தியாவிற்குச் சென்று மீளுகின்ற கப்பற்பாட்டையின் சுலப நிலையினைச் சார்ந்ததாகும். மற்றும் அந்நாட்டில் தங்கியிருந்ததற்கும்

அண்மைத் தீவுகளுக்குச் சென்று மீள்வதற்கும், அவ்வவ்விடங்களில் தொடர்பு கொள்வதற்கும் வேண்டியிருந்த வசதியைப் பற்றியதாகவும் அது அமையும்.

இரண்டாவது பிரஞ்சு மக்களின் மன நிலைக்கும் பெருந்தன்மைக்கும் பொருந்த இந்தியர்கள் அவர்கள் பால் கொள்ளக்கூடிய உள்ளன்பைப் பொருத்தாகும். எத்துணையளவு வலிமையுடையதாயும், உண்மை வாய்ந்தும் அவ்வன்பு திகழவேண்டுமெனில், போர்க்கருவிகளின் வலிமையினுல் அவர்களிடத்தில் ஏனைய வெளிநாட்டவர்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ள முடியாமற் போன அவ்வுள்ளன்பு, உள்ளத்தின் வலிமையினுல் பிரஞ்சு மக்களுக்கு கைவந்தவொன்ருக அமைந்திருப்பது.

''எதிர்காலத்தில் உருவாக்கப்படவேண்டிய ஒவ்வொரு கப்பலுக்கும், பக்கம் 65 இல், புதிய வணிகக் கழகத்தின் கப்பல்களின் செயல்முறைத் திட்டத்தைக் குறிப்பிடுகின்ற குறியீட்டெண். மேற்கூறிய நாவாய்களிற் சென்று, சோழமண்டலக்கரை நெடுந்தொலைவிலும், நம் நாட்டு உற்பத்திப் பொருள்களில் நூலும், காரீயமும். டேன்ஸ்விக் நகரத்தினுடைய அம்பர், சாணை பிடித்த பவழம், இன்னும் மற்றைய சரக்குகளை மிகப் பெரும் ஆதாயத்தோடு விற்றல்; இன்னும் புதுச்சேரியிலும் பெண்டாபொளியிலும், மசூலிப்பட்டினத்திலும், வைரச் சுரங்கம் அண்மையிலும், ''பெகு''நாட்டில் அச்சுரங்கத்தின் தொலைதூரத்திலின்றியமைந்திருந்த கெம்புச்சுரங்கம் ஆகியவற்றினின்று கிடைக்கும் வைரக்கற்களையும். கெம்புக்கற்களையும் ஒப்பந்த முறைப்படி வாணிகஞ் செய்தல்; மேற்குறித்த சோழமண்டலக்கரையில் நீலம், உள்நாட்டு நெசவுத் தொழிலினுல் உற்பத்தியாகும் பல்வகைத் துணி வகைகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்து கொள்ளல்: மிகக் குறைந்த செலவில் அப்பண்டங்களை உற்பத்திச்சாலைகளிலேயே சுலபமாக உற்பத்தி செய்வித்து, அவற்றைத் தங்களுக்கே உதவிக்கொள்ளுதல்; பணம் அங்குப் பெரிதும் காண்பதற்கே அரிதாகவிருத்தலினுலும், உணவுப் பண்டங்கள் மிகமிகக்குறைந்த விலையினவாக விருத்தலினுலும், பத்துப்பேர்களின் உணவுக்கென வருடம் ஒன்றுக்கு இருநூற்றைம்பது (reaux de huiet) ஸ்பெயின் நாட்டுக் கால்ரூபாய் நாணயம் போதிய

தாக இருத்தலினாலும் இவையனைத்திற்குமாகத் திட்டம் வகுத்துக்கொள்ளுதல்.''

இந்தியாவில் வாணிகம் செய்வதிலுள்ள சுலபத் தன்மைக்கு ஆதாரமாக, மேற்பேசிய விண்ணப்பத்தில் காணப்பெற்ற ஒரு பாராவின் சில வரிகளை நாம் புகைப் படமெடுக்கச் செய்வித்தோம். அவ்வாசகம் பின்வருமாறு:

பக்கம் 64: ''ஒவ்வோரிடத்திலும் அமைந்துள்ள நிலைமை, ஆட்சி, பழக்கவழக்கங்கள் ஆகியவை நன்கு உற்றுக் கவனிக்கப்பட்டன; எல்லா மாவட்டங்களிலும், பிரஞ்சு மக்களின் மனநிலைக்குப் பரிபூரணமான உள்ளன்பே ஆளுநர்களால் பிரதிபலிக்கப்பெற்றது. சோழ மண்டலக் கரையிலுள்ள புதுச்சேரி நாயக்கவரசர் உடன்படிக்கையொன்றின் வாயிலாக, பிரஞ்சு நாட்டு வாணிபத்தின் பாதுகாப்பிற்குத் தம் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் கோட்டையொன்று கட்டிக்கொள்ளவும், அதைப் பரிபாலித்துவரவும் அனுமதி வழங்கியிருந்தனர். இவையனைத்திற்கும் ஈடாகப் பெரிதும் இலேசான வரியைக் கொண்டே அவர் மன நிறைவுகொண்டிருந்தனர். வாணிகக் கழகம் தன்னுடைய இறக்குமதிச் சரக்குகளைத் தொடர்ந்து அனுப்பிக்கொண்டேயிருந்திருப்பின், மேற்குறித்த திட்டமானது நன்கு நிறைவேற்றப்பெற்றிருக்கும்.''

செயிண்ட் மலோ நகர வணிகர்களின் இப்பெருந் திட்டத்தினையே, 1664 ஆம் ஆண்டில் ''கொல்பேர்'' (Colbert) என்ற பிரதமர் அப்படியே ஏற்றுக்கொண்டிருந்தனர். தெலா ரோன்ஸியேர் என்பார் 61 ஆம் பக்கத்தில் குறித்திருப்பதாவது: ''தீட்டப்பெற்ற இப்பெரிய திட்டத்தைக் குழித்தோண்டிப் புதைத்துவிடுதலே தங்கள் உரிமைகட்குச் சிறந்த சாதகமாய் அமையும் என்று ''பிளாந்த்ரு'' Flandre பிரதேசத்தவர்கள், செயிண்ட்மலோ நகர வணிக அலுவலர்கள் தம் இந்தியப் பயணத்தினின்று மீளுங்காலைத் தீர்மானித்தனர். அது மிகவும் ஏற்ற சமயமாகவிருந்ததனால், அதேபோது ''கிழக்கிந்தியக் கம்பெனி'' என்ற மற்றொரு வணிகக்கழகம் நிறுவப் பெற்றது. அக்கழகம் முந்தைய அநுபவங்களைப் பெரிதும் பயன்படுத்திக்கொள்ளக்கூடுமாயிற்று. இம்முறையில் செயிண்ட்மலோ நகரத்தவர்கள், தனித்த வணிகக்

குழுவினராக விளங்குதலை விடுத்து, முன்குறிப்பிட்ட ''கொல்பேர்'' அவர்கள் நிறுவிய பெருவணிகக் கழகத்தில் சேர்ந்து, தமது நாவாய்களையும் பயன்படுத்திக்கொள்ளுமாறு உதவினர்.

மேற்கண்டவாறு செயிண்ட்மலோ நகரத்தின் பழைய வணிகக்கழகம் ''கொல்பேர்'' நிறுவிய புதிய கழகத்தோடு ஒன்று கலந்தது. துவாஜி அவர்களின் தொகுப்பில் 89 ஆவது பகுதியில் 175 ஆவது ஏட்டில் உள்ள ஆதாரங்களினால் நிரூபிக்கப்பெற்றுள்ளது.

ஆனால், தெலாரோன்ஸியேர் என்பார் வெகுமுக்கிய மான இடம் ஒன்றைப் போதிய அளவு வெளிப்படுத்தாமல் சென்றுள்ளதால், இதற்கு மாறாக நாம் அதனைப் பெரிதும் வலியுறுத்தப்போகின்றோம்.

மேற்குறித்த செயிண்ட்மலோ வணிகர்களின் இந்திய வாணிகக் க்ழக அமைப்பில் தலைமையான அம்சம் புதுச்சேரி நாயக்க வரசரின் விசாலமான உள்ளத்தினால் அமைந்த ஆதரவேயாகும். அவர் வணிக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளார்; கோட்டையோடு கூடிய வணிக் மன்றம் ஒன்றை அமைத்துக்கொள்ள அனுமதித்துள்ளார்.

ஜீவசக்தி நிறைந்த இத்தகு வரவேற்பைப்பற்றிய வரலாறு அச்சடிக்கப்பெற்றுள்ளது; பிரஞ்சு மக்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அதை வாசித்து வருகின்றனர்; மற்றும் அவ்வரலாற்றுப் பிரதிகள் அமைச்சியல் அலுவலகங்களிலும் விநியோகிக்கப்பெற்றுள்ளன. பிரதமர் கால்பெர்ட்டும் இதனை அறிந்துள்ளார். ஆனால், அவ்விண்ணப்பம் அச்சடிக்கப்பெற்று விளங்குவது 14ஆம் லூய் மன்னர்க்கு விடுக்கப்பெற்றதாகும்.

''அரசர்பிரானுக்கு

''அரசே

ஆன்வேர் நகர வணிகர்களின் மிகவும் தாழ்மையான வேண்டுகோள் மேன்மைதங்கிய தம்முடைய பாதங்களில் இருக்கக்காண்கின்றூர். மாட்சிமை பொருந்திய அரசர் பிரான்சு தேசத்தின் பலமான பாதுகாப்பும்,

நாணயமும் அனுகூலமாக அமைந்தபடியால், அவற்றின் துணையுடன் சிலவருடங்களுக்கு முன்பு கிழக்கிந்தியாவில் வாணிகத்திட்டம் ஒன்றைப் பிரஞ்சுத் துறைமுகங்களில் நிர்வகித்துவர நேர்ந்தது.

மேற்குறித்த விண்ணப்ப வாசகத்திலுள்ள "சில வருஷங்களுக்குமுன்" என்ற தொடரைப்பற்றிக் கருதுவோம்; 1617 ஆம் ஆண்டில் செயிண்ட் லூய் நாவாய் பயணம் மேற்கொண்டதை 1664 ஆம் ஆண்டளவில் ஒருவரும் மறந்திலர்; அண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சியைப் போன்று அதனைப்பற்றி 14 ஆம் லூய் அரசரிடமும் குறிப்பிடுகின்றனர்.

1664 ஆம் ஆண்டிற்கு முன் கடந்த ஆண்டுகளிலெல்லாம் அப்பயணத்தைப் பற்றிப் பெரிதும் பேசப்பட்டு வந்தது; விண்ணப்பத்தின் 70 ஆம் பக்கத்திலும் 14 ஆம் லூய் அரசர்க்குக் குறிப்பிட்டுள்ளதைப் பின்வருமாறு காண்க :

'உமது தேச நிர்வாகத்தின் ஆலோசனைச் சபையார் 1658 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் தேதி செய்த தீர்மானப்படி; அதன் சார்பாகபிறப்பித்த அவசரஉத்தரவுக்ிணங்க வணிகக்கழக ஆதரவுகள் அனைத்தும் செம்மையாக ஆராயப்பெற்றன. இவற்றில் மிகப் பெரும்பாலானவை "பிரெத்தாஞ்" Bretagne நாட்டில் சேகரிக்கப் பெற்றவை; இங்கு மேற்படி ஆலோசனைச் சபையின் செயலாளர் "காத்லான்" என்னும் எழுத்துக்கூட அலுவலரிடம் அவை ஒப்புவிக்கப் பெற்றன. உமது அரசு ஆலோசனைச் சபையினர் 1663 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் தேதிய முடிவுப்படி, மாட்சிமை மிக்க தங்களது சாதாரண ஆலோசனையாளர் பெர்ரியே (Berryer) என்பார் வசம் அவை ஒப்புவிக்கப்பெற்றன..., பின்னர் அவ்வாலோசனை மன்றத்தில் அப்பத்திரங்களும் மேற்படி காரண காரியங்களின நம்பிக்கையைப் பொருத்த தீர்மான ஆதரவுகளும் ஆராயப்பெற்று, 1664 ஆம் ஆண்டு மே மாதம் எட்டாந் தேதிய தீர்மானப்படி, நியமன அதிகாரிகளின் முன்பாக அதன் பிரதி நிதியிடம் அவர்களின் நிர்வாகத்தை குறிப்பிடும் ஆதாரப் பத்திரங்கள், கணக்குப் பட்டியல்கள். மேற்படி நாவாய்களின்று பெறப்பட்டவை இவையனைத்தையும் ஒப்படைக்குமாறு அவர்கட்கு உத்தரவிடப்பெற்றுள்ளது.

இந்தவிவரணங்கள் தலைமைச்சான்ற முக்கியத்வம் வாய்ந்தவை; 1658ஆம் ஆண்டுமுதல் 1664ஆம் ஆண்டுவரை செயின்ட் லூாய் நாவாய் பற்றிய வியவகாரம் அச்சடிக்கப் பெற்றுப் பலவாக அனைத்து அமைச்சகங்களிலும் வினியோகிக்கப்பெற்ற பல விண்ணப்பங்களாக உருக்கொள்ளலாயிற்று; "புதிச்சேரி" என்ற பெயர் நன்கு விரும்பப் பெற்றிருந்தது; 14ஆம் லூாய் அரசரும், பிரஞ்சு மக்களின் மனநிலைக்கும் பெருந்தன்மைக்கும் பொருந்த இந்தியர்கள் அவர்கள்பால் கொண்டிருந்த வலிமையும் உண்மையும் சான்ற உள்ளன்பினையும், சோழமண்டலக் கரையிலுள்ள புதுச்சேரி நாயக்கவரசர் உடன் படிக்கையொன்றின் வாயிலாகப் பிரஞ்சு நாட்டு வாணிபத்தின் பாதுகாப்பிற்குத் தம் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் கோட்டையொன்று கட்டிக் கொள்ளவும், அதைப் பரிபாலித்து வரவும் அனுமதி வழங்கியிருந்ததையும் நன்கு அறிந்து கொண்டிருந்தனர்.

1664 ஆம் ஆண்டில் 14ஆம் லூாய் அரசர், புதுச்சேரி "Pondichery" என்ற பெயரையும், அத்திருநகர மக்களின் மரியாதை நிறைந்த பண்புகளையும் தெரிந்து கொண்டிருந்தனர், "அங்குத்திறந்த உள்ளத்தோடு பிரஞ்சு மக்கள் நன்கு வரவேற்கப் பெற்றனர்" என்பதையும் அறிந்திருந்தனராதலின், அப்புதுச்சேரி நகரத்தைத் தம் மூளத்திற் கொண்டே அவ்வரசர் இந்திய வணிகக் கழகத்தைத் தோற்றுவித்துள்ளார்.

# பண்டைய வரலாறும் நவீன வரலாறும் செஞ்சியில் பிரஞ்சு நாட்டுப் போர்வீரர்கள்

பெரும்பாலும் ஏறிச் செல்லவொண்ணாத மூன்று மலைகளின் மேல் நெடிய வலிய சுவர்களோடு கூடிய கோட்டை நகரமே செஞ்சியாகும். அதன் கோட்டை பத்து வருட காலத்திற்கதிகமாகவே பிரஞ்சுக் கோட்டையாகத் திகழ்ந்திருந்ததாகும். 1750ஆம் ஆண்டில் நடை பெற்ற தாக்குதலில் அக்கோட்டை கைப்பற்றப் பட்டதாகும். பின்னர் 1761 ஆம் ஆண்டில் புதுச்சேரி வீழ்ச்சியுற்ற போது, அக்கோட்டையும் எதிரிகளுக்குவிட்டுக் கொடுக்கப் பெற்றதாயிற்று.

11 ஆவது தரைப்படையில், குடியேற்ற நாடுகளின் 3ஆம் பிரிவு ராணுவத்தைச் சேர்ந்த ராணுவ உயர் அதிகாரிகளும், துணையதிகாரிகளும், வீரர்களும் அதாவது தற்போது புதுவையில் இருந்துவருபவர்கள், (இத்தரைப் படை புதுச்சேரிக்கு 1938 ஆம் ஆண்டு வந்து சேர்ந்த தாகும்) நாட்டுப் பற்றுடன் ஏப்ரல் 7-13 ஆகிய இரு தேதிகளிலும் செஞ்சிக்குச் சென்றிருந்தனர். பெரிதும் உள்ளத்தை நெகிழ்விக்க கூடியவாக அமைந்த சில சந்தர்ப்பங்களை கலக்கமுற்ற நிலையில் இங்கு நாம் நினைவூட்டப் புகுகின்றோம்.

அம்மூன்று மலைகளில் பெரிதும் செங்குத்தான சரிவுகளுடையதும், நன்கு பாதுகாக்கப் பெற்றதுமான ராஜா மலை என்று வழங்கப்பெறும் ராஜகிரியை ஏறிச்சென்றடைந்த பின்னர், அப்போர் வீரர்கள் விசாலமான அறை யொன்றில் குழுமியிருந்து, ''புய்ஸி'' போர் நடவடிக்கைகளைப் பற்றி வாசிக்கப் பெற்ற வரலாற்றைச் செவிமடுத்தனர்.

ஒரு பழைய நூலின் 15ஆவது தொகுதியில், வெளிநாடுகளில் மதப்பிரசாரம் செய்தோர்கள் வரைந்துள்ள பத்திச்சுவையும், ஆர்வமும் ஊட்டவல்ல கடிதங்கள் காணப்படுகின்றன.

செஞ்சியில் நிகழ்ந்த போர் நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற வராகிற "தந்தை லவோர்" என்ற குருவானவர் தம்முடைய சரிதத்தைப் பதினெட்டாம் நூற்ருண்டுக் காலத்தின் சுவைமிக்க நடையில் வரைந்துள்ளார். அதில் அவர் பின் வருமாறு குறிப்பிடுகின்ருர்.

"செஞ்சி ஒரு பெருநகரம்; அது சுமார் 13 கிலோ மீட்டருக்கதிகமான சுற்றளவுடையது; மலைகளின் மேல் அமைந்துள்ள அந்நகரம் புதுச்சேரிக்கு மேற்கில் 62.216 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இந்தியாவிலுள்ள வலிமை சான்றனவாகத்திகழும் நகரங்களில் அதுவும் ஒன்ருகும். அழகிய சுவர்ச்சுற்றிஞல் மூடப்பெற்றவாறு அமைந்துள்ள அந்நகரத்தைக் கோட்டையொன்று அமைந்து பாதுகாத்துவருகின்றது: ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தில் விளங்குமாயின் ஆசியாக் கண்டத்தினுடைய அனைத்துப் போர்ச் சக்திகளுக்கும் ஈடுகொடுத்து நிற்கக்கூடும். தன்னகத்தேயே அழகிய நகரம் ஒன்றைக்கொண்டு விளங்கும் அதன் பிரதான கோட்டை, பெரிதும் நன்ருகப் பூச்சு வேலை செய்யப்பெற்றுள்ள ஒரு பெரிய அகழியினுல் சூழப்பெற்றுள்ளது; கற்பாறைகளில் அமையப்பெற்றுள்ள பல சுவர்களின் வாயிலாக, செங்குத்தாகவுள்ள மலையின் கண் அதே அளவு உயரத்தில் கட்டப்பெற்றுள்ள ஏழு பிற கோட்டைகளுடன் தொடர்புடையதாயமைந்துள்ளது. நான் பேசுகின்ற காலத்தின்போது, இக் கோட்டைகளில் பிரங்கிப்படைகள் எண்ணற்றனவாக அமைந்திருந்தன. அவற்றில் பல்வகைப் பரும அளவைகள் பொருந்திய குண்டுகளை வீசும் இரும்புப் பீரங்கிகளும் வெண்கலப் பீரங்கிகளும் எண்ணிலவாய்க்காணப்பெற்றன; நீண்டகாலம் வலிமையுடன் தற்காப்புச் செய்துகொள்ளுதற்கேற்றவாறு படைச்சாதனப் பொருட்கள் அனைத்துடன் நான்கு இராத்தல் எடை முதல் முப்பத்தாறு இராத்தல் எடை வரையிலுள்ள குண்டுகளும் அவற்றிற்கு வழங்கப்பெற்றிருந்தன."

"1750 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதியன்று "புஸ்ஸி" Bussy என்பார் அங்கு வெளித்திடலுக்கு எதிரில் பாசறையமைத்துத்தங்கியிருந்தனர்."

அக்காலை முஸ்லீம்கள் Maures மத்தியில் நிலவியிருந்த அச்சநிலையைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறிச் செல்வதே, மறுத்துச் சொல்வதற்கின்றி

ஏற்றுச் செய்யத்தகுந்த செயலாகக் காணப்பெற்றது. உடன் செஞ்சியைத் தங்களது ஆதிக்கத்திற்குட்படுத்த அதுவே பொருத்தமான ஏற்பாடாகவும் தோன்றிற்று. அவ்வாறே தீர்மானிக்கப்பெற்றமையால், "புய்ஸி" என்பார் அதனை உடனே செயல்படுத்த முற்பட்டார். கோட்டைகளிலுள்ள பீரங்கிகள் தொடர்ந்து குண்டுகளைப் பொழிந்துகொண்டேயிருக்கையில், காயம்பட்ட போர் வீரன் ஒருவன்கூட இல்லையென்னும்படியாக அவர் நகர்க்குள் புகுந்தார். அவ்விடத்திலிருந்து கோட்டைக்கு 100 மீட்டர் தொலைவில் சென்று நின்றுகொண்டு, அவ்விடத்திலிருந்து தனது நிலைமையை அறிமுகப்படுத்தவே, படை தொடர்ந்து நடந்தேசென்று, மாலை 7 மணியளவில் கோட்டைக்குள் புகுந்தது.

"உடனே' "தொத்தேவ் இய்" D'Auteuil என்பார் கோட்டையைத் தாக்குதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தனர். வெளிப்புறமாகச் சுவர் ஓரமாகச் சிப்பாய்கள் நிற்க வேண்டுமென்று கட்டளையிடப்பெற்றது; குறுக்கு வீதிகள் எல்லாவற்றிலும் போர்ச் சாதனங்கள் நிரம்பிய வண்டிகள் நிறுத்தப்பெற்றன; படை வீரர்களும் பல்வேறு பிரிவாகப் பிரிக்கப்பெற்று நிறுத்தப்பெற்றனர்; பீரங்கிப் படையும் பல்வேறு இலக்குகளில் அமைக்கப்பெற்றது; சந்திரனின் அஸ்தமனத்தின்போது அக்கோட்டைகள் ஒன்றுக்குள் ஏணிகளின் உதவியினால் மதிலைக்கடந்து புக வேண்டுமென்று செயிண்ட்–ஜார்ஜ், வெர்ரி, லெநார் மாண்ட் என்ற மூவருக்குக் கட்டளையிடப் பெற்றிருந்தது. புய்மோரேன் என்பாரின் தலைமையின் கீழிருந்த குதிரைப் படையினர், தொத்தேவ் இய் என்பார், தெலாதூரஷ், புஸ்ஸி என்போரின் உதவியுடன் கோட்டை வாயிற்கதவுகளில் பின்னால் தாக்குதல் நடத்துகின்றபோது, வெடி மருந்த அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கட்குத் துணைபுரியவேண்டி நியமிக்கப்பட்டிருந்தனர்· எல்லோரும் முக்கியமான சம்பவம் நிகழப்போவதை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். அஞ்சாமையும் வீரமும் சாதிக்கவேண்டிய ஒரு செயலை துடுக்குததனமான துணிவு ஒன்று நற்கால வசமாகச் சாதிக்கவேண்டி நேர்ந்தது. அக்காலை, எதிரிகள் தொடர்ந்து பீரங்கிகளின் வாயிலாகப் பெருங் குண்டுகளைப் பொழிந்துகொண்டிருந்தனர்; பல கனமான துப்பாக்கிகள் ஏககாலத்தில் வெடி தீர்த்துக்கொண்டிருந்தன. கணக்கற்ற

fourgettes வீசப்பட்டன. பிரஞ்சுக்காரர்களில் அறுவர் கொல்லப்பட்டனர்; சிலர் காயமுற்றனர்; தலைமைக் கோட்டையின் கதவைப்பற்றிய நிலையினை அறிந்து வருமாறு தொத்தேவ்இய் என்பார் "துய் ருவ்ரே" du Rowrai என்பாரை அனுப்பியிருந்தார். வீரமிக்க இப்படையதிகாரி, தம் அலுவலை முடித்துக்கொண்டு மீளுங்காலையில், துப்பாக்கிக்குண்டொன்று அவர் உடலை ஊடுருவிச் சென்றதால், அன்றைக்கு அப்பால் நாளையன்று இறந்து போனார். படைவீரர்களனைவரும் அவர் மரணத்திற்குப் பெரிதும் வருந்தினர். சந்திரனின் அஸ்தமனத்தை எதிர் பார்த்தவண்ணம் இப்போர்நிலை நீடிக்கலாயிற்று; அனைத்துப்பக்கங்களிலும தாக்குதலைத் தொடங்க அதனையே சமிக்ஞையாகக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் பீரங்கிப்படையை நடத்திச்சென்ற "கல்லார்ட்" Gallard என்பார் அவ்விடத்தைத் தனது பீரங்கிகளைக் கொண்டு குண்டுகளைச்சரமாரியாகப்பொழிந்து அழித்துக் கொண்டிருந்தார்; மற்றும் எதிரிகளின் மீது வெடிகுண்டுகளையும், மாதுளம் பழ வடிவினவாகிய கைவெடிகளையும் வீசச்செய்துகொண்டேயிருந்தார்; கடைசியாகக் காலை 4 மணியளவில் அம்மலைகளில் ஒன்றின் உச்சியிலிருந்து "அரசர் வாழ்க" என்றொரு பேரொலி எழுந்தது; தமது படைக்ள் பின் தொடர முன்னேறிச் சென்ற செயிண்ட்-ஜார்ஜ், வெர்ரி, லெநார்மாண்ட் என்ற மூன்று படையதிகாரிகளும் தமக்கிட்டிருந்த பணியினை நிறைவேற்றி, கையிற்பிடித்த உடைவாளுடன், தங்களுக்கென்றே அமைக்கப்பெற்றிருந்ததாகிய அக்கோட்டையினைக் கைப் பற்றியிருந்தனர். அக்காலை. தாக்குதல் பொதுவாக நிகழ்ந்துகொண்டிருந்தது. தொத்தேவ்இய் என்பார் கோட்டையின் கதவுகளை வெடிவைத்துத் தகர்த்துக் கொண்டிருந்தனர்; அதனைப் பாதுகாத்துக்கொண்டிருந்த Maures வீரர்களிடையே அச்சம்பரவிக்கொண்டிருந்தது. பயனற்ற சில வெடிகளை வெடித்துத் தீர்த்து ஓட்டம் பிடிக்கலாயினர். ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே எல்லாப்பகுதிகளுக்கும் பிரஞ்சு ஆதிக்கம் நேர்ந்தது."

"பகல் பத்து மணியளவில், செஞ்சி, அதனுடைய எல்லாக் கோட்டைகள் ஆகியவைகளில் பிரஞ்சுமக்கள் அமைதியாக அதிகாரிகள் ஆயினமையால். உடனே தொத்தேவ்இய் என்பார் அரசருடைய கொடியைக் கோட்டையின்மீது உயர்த்தினர்"

இச்சமயத்தில் வரலாற்றுச் சம்பவத்தை வாசித்துக் கொண்டு வந்தவர் தம் குரல் இடி முழக்கம் போன்ற கைத்தட்டல் ஆரவாரங்களினுல் முற்றும் அடங்கிப் போயிற்று; தம் முத்தோர்களின் உயரிய வரலாற்றைச் செவிமடுத்தபோது தங்களுடைய ஆர்வம் நிறைந்த வியப்பை நீண்ட நேரம் அங்கிருந்த 1938 ஆம் வருடத்திய போர் வீரர்கள் அடக்கிக்கொள்ள இயலாது போயிற்று.

அன்றைய பொழுதில் அவர்கள் "புதுச்சேரி வாயில்" என்றவிடத்திற்கும், அன்றைய "பிரஞ்சுப் போர் வீரர்களின் இருக்கைகள்" என்றவிடத்திற்கும் மேற்கொண்ட யாத்திரையே பெரிதும் உள்ளத்தை உருக்குவதாக விளங்கிற்று.

(குறிப்பு) — "ஓர்ம்" Orme என்பாருடைய "இந்துஸ்தானத்தில் ஆங்கில நாட்டினரின் போர் நடவடிக்கைகளின் வரலாறு" என்ற நூலில் பழைய செஞ்சியின் அமைப்பைக் காட்டும் வரைபடம் ஒன்று காண்கின்றது. அதில் மேற்படி வாயிலும், போர் வீரர்களின் இருக்கைகளும் "புதுச்சேரிவாயில்" என்றும் "பிரஞ்சுப் போர் வீரர்களின் இருக்கைகள்" என்றும் இதே சொற்றொடர்களால் குறிக்கப்பெற்றுள்ளன. இவ்வகையாய் அதிகாரபூர்வமான நம்பத்தகுந்த ஆதாரம் ஒன்றினுல் அவ்விடத்தில் பிரஞ்சுக்காரர்கள் இருந்து வாழ்ந்த பகுதிகள் இருந்துள்ளன என்பது ஊர்ஜிதமாகின்றது.

செஞ்சியின் பழைய வாயில் வடமேற்குத் திசையில் அந்த இராஜ்ஜியத்தின் வெவ்வேறு பழைய தலைநகரங்களாக விளங்கியிருந்த பிஜாநகர், சந்திரகிரி, வேலூர், பிஜாப்பூர், ஆற்காடு என்னும் இவற்றை நோக்கியவாறு அமைந்திருந்தது; ஆனுல், தென்னிந்தியாவின் தலைநகராக ஆகின்றது புதுச்சேரியே என்ற காலை, அதிலும் பிரஞ்சுமக்கள் புதுவையிலிருந்து செஞ்சிக்கும் அதிகாரிகளாக விளங்கியிருந்த அச்சமயம், அவர்களால் அக்கோட்டைக்குக் கிழக்கில் புதுச்சேரியை நோக்கியவாறு ஒரு புதிய வாயில் கட்டப்பெற்றதாம்.

அக்கோட்டையின் உள்ளில், புதுச்சேரி வாயிலுக்குப் பக்கத்தில், பிரஞ்சு வீரர்கள் தங்கள் இராணுவ இல்லப்

பகுதிகளைக் கட்டிக்கொண்டனர்.

அவ்விடங்களைப் பார்வையிட 1938ஆம் ஆண்டில் பிரஞ்சுப் போர்வீரர்கள் வந்தபோது, 1750ஆம் ஆண்டு முதல் 1761 ஆம் ஆண்டுவரையில் துய்ப்ளேக்ஸின் இராணுவ வீரர்கள் வதித்திருந்தவிடம் அதுவாதலின், அவர்களது உள்ளம் எத்துணையளவு தழதழத்துப் போயிற்று என்பதைக் கற்பனை செய்யவும் முடியாததாக அது விளங்கிற்று,

18ஆம் நூற்றுண்டு காலத்திய பிரஞ்சுக் கலையமைப்பினை முற்றிலுமாகப் பிரதிபலித்துக்கொண்டிருந்த "புதுச்சேரிவாயில்" என்ற அவ்விடத்தினை அவர்கள் அடைந்தபோது, உள்ளக் கலக்கத்தின் உச்சநிலையில் மூழ்கியிருந்தனர்.

புதுச்சேரியிலும் கோட்டையின் சுவடுகளைக் குறிக்கும் சின்னங்களே மிகுந்துள்ளன. செஞ்சியில் பிரஞ்சு மக்கள் வாழ்ந்திருந்த பகுதிகளை, அவை, அவர்கள் வாழ்ந்து விட்டுச்சென்ற அடையாளங்களைக் கொண்டிருத்தலினுல், எக்காலத்தும் காணக்கூடுமாயுள்ளது.

இன்றுவரை அறியப்படாமலிருந்த சம்பவம் ஒன்றை செஞ்சி நிலத்துடன் பிரஞ்சு ஞாபகார்த்தம் உள்ளுறக் கலந்திருப்பது எத்துணையளவென்பதை நிருபித்தற்கெனக் குறிக்கின்ருேம். செஞ்சியின் அழிபாடுகளில் நடந்து சென்றுகொண்டிருக்கையில் செப்பு நாணயங்கள் சிறிய வடிவினவாய் அங்குக்கிடப்பதைக்காணலாம். அவற்றில் தமிழில் பதிந்துள்ளதை எழுத்துக்கூட்டிக் காணுங்கால் "புதுச்சேரி" என்ற சொல்லை வாசிக்கின்ருேம்.

இவ்வாருகப் பிரஞ்சு நாட்டின் புகழ் அந்த அழிபாடுகளில் எப்பொழுதைக்குமாக விரவிக்கிடக்கின்றது; எதிர்கால நூற்றுண்டுகளில், இறந்தகாலச் சின்னங்களை அக்கற்பாறைகளினிடையில் தேடிக்காண வரும்போது, ஒவ்வொரு யாத்திரைவாசியும், சாகாத பெயராகத்திகழும் "புதுச்சேரி" என்ற சொல்தான் கண்களின் முன்னே தோன்றுவதைக் காண்பார்.

# "தூய்ப்ளேக்ஸ்" என்பாரின் கொடி

1741ஆம் ஆண்டின் இறுதியில், மொகலாயப் பேரரச ரிடமிருந்தே தூய்ப்ளேக்ஸ் என்பார் "நவாபு" Nabab என்னும் பட்டத்தினைப் பெற்ருர். மொகலாய சாம்ராஜ் ஜியத்தின் வழக்கப்படி ஒவ்வொரு நவாபுக்கும் தனிப் பட்ட கொடியொன்றுண்டு; அவ்வகையாய் தூய்ப் ளேக்ஸ் என்பாரும் தன்னுடைய மொகலாயக் கொடி யொன்றைக் கொண்டிருந்தார். முக்கோண வடிவிலும், பிரஞ்சு நாட்டின் வண்ணம் வெள்ளையானதால், வெண் ணிறத்திலும் காணப்பெற்ற அச்கொடி தன் நடுவில் பொன்னுல் அமைந்த சூரிய வடிவம் ஒன்றையும் கொண் டிருந்தது.

"நவாபு" என்னும் பட்டம், புதுச்சேரியின் ஆளுநர் என்ற அலுவற் பெயரோடு கூட்டப்பெற்றிருந்ததால், ஆளுநரின் கொடியானது பிரஞ்சு – மொகலாயக் கொடி யாக விளங்கிற்று.

பொன் சூரிய வடிவத்துடன் வெண்ணிறமாகக் காணப்பெற்ற அக்கொடியைப்பற்றிக் குறிப்பிட்டுள்ள வாசகங்கள் சிலவற்றை இங்குக்கூறுவது பெரிதும் சுவை யூட்டவல்லதாகும்.

1749ஆம் ஆண்டில், ஆம்பூர் வெற்றிக்குப் பின்னர், ஆர்காடு நவாபு "சந்தா சாஹேபு" என்பார் வெகு ஆடம்பரத்துடன் புதுச்சேரிக்கு விஜயம் செய்தார்; "உறுதி வாய்ந்த கடிதங்கள்" என்ற நூலின் 14ஆம் தொகுதி, பக்கம் 383இல் நாம் கீழ்வருமாறு வாசித் தற்குக்கூடுமாயுள்ளது :— அரசாங்கத்தில் "நவாபு" களுக்கென ஒதுக்கப்பெற்ற ஒருவிதமான, அரைகோள வடிவனவாகிய "நவாபு மேளம்" எனப்பெறும் 'டக்கை' களைச்சுமந்து இரண்டு யானைகள் வந்துகொண்டிருந்தன; பின்னுல், பொற்சரிகை வேலைபாடுகொண்ட சூரிய வடிவ முடைய வெண்ணிறக்கொடி யொன்றை உயர்தியுள்ள

மற்ருெருயானை நடந்துவந்தது; உருவிய பட்டாக் கத்திகளைக் கையிற்பிடித்தவண்ணம் ஐந்நூறு குதிரை வீரர்கள் வந்துகொண்டிருக்க, 'தூய்ப்ளேக்ஸ்' அவர்கள் அமர்ந்து வரும் பல்லக்கைத் தொடர்ந்து, பிரஞ்சு நாட்டினராகிய சாதாரணக் குதிரைவீரர் அறுபதின்மர் பின்தொடர்ந்தனர். அவருடைய வலப்புறத்தில், பொற்சூரிய வடிவு நடுவிற்கொண்ட பன்னிரு வெண்சிறு கொடிகள் பிடித்துக் கொண்டுவரப்பட்டன; இடப்புறத்தில் "சந்தா சாஹேபு" அவர்கள் வீற்றிருந்த பல்லக்கும், அதன் பக்கங்களில், பொற்சூரிய வடிவு அமைந்திருந்த எட்டுப் பச்சைநிறக் கொடிகள் ஏந்திய வீரர்களும் தொடர்ந்தனர். அவருடைய பரிவாரங்களாக, பொற் சூரியன் பதித்திருந்த பச்சை நிறக்கொடியினைத் தாங்கியவாறு முன் வந்து கொண்டிருந்த யானை ஒன்றும், மூவாயிரம் குதிரை வீரர்களும் அப் புறப்பாட்டில் காணப்பெற்றனர்...... இன்னும பல......

மேற்குறித்த வாசகத்தின்படி அவ்விரு நவாபுகளின் கொடிகள் ஒவ்வொன்றிலும் "பொற்சூரியவடிவு" அமைந்திருந்தது என்பதும் நிறம் பச்சையொன்றும், மற்ருென்று வெள்ளையாகவும் விளங்கிற்று என்பதும் தெளியக்கிடக்கின்றது.

இவ்விவரம் "கொத்ஹேவ்" (Godeheu) என்பாரால் முற்றிலுமாக உறுதிப்படுத்தப் பெற்றுள்ளது. 'கொத்ஹேவ்' என்பார்க்குரியவை என்ற ஒதுக்கப்பெற்ற செய்திகளின் மறுப்பு என்ற நூல், 87ஆம் பக்கத்தில், 1751ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதியிட்ட கடிதம் ஒன்றைக்குறிப்பிடுகின்ருர்: "தூய்ப்ளேக்ஸ்" என்பார் வெளிவருங்கால், குதிரைமீது அமர்ந்துள்ள ஐரோப்பியக் காவலர்கள் அறுவரும் அவர்களின் தலைவரும் முன் வந்து கொண்டிருக்கின்றனர்: பின்னுல், பன்னிரண்டு வேல் வீரர்கள், ஒவ்வொருவரும் உள்ளிடம் வெண்மை நிறமுடைய பொன் வண்ணக்கொடி ஏந்திவருகின்றனர்; பின்னுல் உயர்ந்த ஒப்பனைகள் செய்யப்பெற்றுள்ள பன்னிரண்டு யானைகள் தொடர்கின்றன; அவற்றிலொன்று ஒரு பெரிய பிரஞ்சுக் கொடியை மிகவும் பெருமிதத்துடன் கொண்டு விளங்குகின்றது."

இவ்விருவாசகங்களிலும் அதே சொற்றொடர்கள் காணப்பெறுகின்றன; ஐரோப்பியப் பரிவாரம் முன்செல்வதால். உள்நாட்டுப் போர்ப் படைவீரர்கள் பன்னிருவர், முற்கூறிய பொற்சூரிய வெண்கொடிகளை ஒவ்வொருவரும் ஏந்திச்செல்ல, அத்தகைய பெரிய கொடியொன்றைத் தாங்கியவாறு யானையொன்று பின்வருகின்றது.

1750ஆம் ஆண்டில் பிரஞ்சுக்கொடி பிரதானமான அங்கமாகத் திகழ்ந்துகொண்டிருந்தது; அக்டோபர் மாதம் 7ஆம் தேதியன்று, எதிர்ப்பு அடையாளத்தைச் சதியில் ஈடுபட்டவர்கள் அறிந்து கொள்வதற்கென, எதிரிகளின் படை வீட்டில் உயர்த்தவேண்டியிருந்த பிரஞ்சு – மொகலாயக் கொடியினைக் கொண்டுவருமாறு 'மையா-கான்' (Mia-Khan) என்பானைத் தூய்ப்ளேக்ஸ் அனுப்பியிருந்தனர். வெர்செயில்ஸ் ஆவணங்களில் E, 3746 ஆம் எண்ணில், "அரியேல்" (Ariel) என்பாரின் "ஆனந்தரங்கப்பிள்ளை நினைவுகள்" என்ற கையேட்டுப் பிரதியில் கண்டுபிடிக்கப்பெற்றதும், இன்றுவரை பதிப்பிக்கப் பெறாததுமான தமிழ் வாசகம் ஒன்று மேற்குறித்த சம்பவத்தை நன்கு விளக்கத்துடன். நமக்குக்குறிப்பிடுகின்றது.

1750 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் தேதி, பிரஞ்சுப் படையினர். இந்திய தீபகற்பத்தின் சக்கரவர்த்தியாக விளங்கிய "நிஜாம் நாஜிர் ஜங்" என்பாரைத் "தேசூர்" என்னும் இடத்தில் தாக்கிக்கொண்டிருந்தனர்; அப்பொழுது சதிச்செயலில் ஈடுபட்டோர், பொன்னிறக் கதிர்களை வீசிக்கொண்டிருந்த சூரியனின் முகத்தைக் கொண்டிருந்த வெண்ணிறப் பிரஞ்சுக் கொடியொன்றை ஏந்தியிருந்த யானையொன்றின் பின்னால் முன்னேறிவந்து கொண்டிருப்பதைக் கண்டனர். பக்கத்தில் ஈட்டியின் நுனியில் "நாஜிர் ஜங்" என்பாரின் வெட்டப்பட்ட தலையைச் செருகிப் பிடித்துக்கொண்டு ஒருவன் காணப்பட்டான்.

"முஜாபர்ஜங்" என்பார் இந்திய தீபகற்பத்தின் சக்கரவர்த்தியானார்; அது முதற்கொண்டு புதிய சக்கரவர்த்தியானவர், பிரஞ்சு-மொகலாயக் கொடியினைத் தமக்கு முன்னே செல்லுமாறு விடுத்துப் பின்பவனி

யில் வந்துகொண்டிருப்பார். தேசிய நூலகத்தில், பிரஞ்சு அடிப்படைகள் 12087, பக்கம் 162, இன்புறத்ததான கையேட்டில் பின்வருமாறு வாசித்தற்குக் கூடுமாயுள்ளது:

"1750ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் தேதி, தூய்ப்ளேக்ஸ் படையில் இராணுவ அதிகாரியும், தூய்ப்ளேக்ஸ் அம்மையாரின் திருக்குமாரரும் ஆகிய 'வின்சென்ட்' "Vincent" என்பார், "பேரரசர் முஜாபரிங்" அவர்கட்கு ஆறுகுத்துவாட்களை எடுத்துச்செல்ல நியமிக்கப்பெற்றார். அப்பரிவாரங்களனைத்திற்கும் முன்னதாக, யானையொன்றின்மீது சுமந்து செல்லப்பெற்ற வெள்ளைக்கொடியொன்றைத் "தூய்ப்ளேக்ஸ்" என்பார் வழங்கியிருந்தனர். மேற்படி 22ஆம் தேதியன்று, பிரதிநிதிகளும், வின்சென்ட் என்பாரும் அக்குத்துவாட்களை 'முஜாபரிங்' அவர்களிடம் ஒப்புவித்தனர் 'முஜாபரிங்' அவைகளைச் சிறிதளவே சாதாரணம் எனத்தக்க அன்புடன் ஏற்றுக்கொண்டு, தன்னுடைய அரசசின்னங்களுக்கிடையில் அக்கொடி எப்பொழுதும் கொண்டுசெல்லப்படவேண்டும் என்று கட்டளையிட்டனர். உலகிற் பெரிய மன்னர் ஒருவர் தமக்கு அளிக்க விரும்புகின்ற உறுதியான துணைக்கு அடையாளமாக அதனைத்தாம் காண்பதாகக் குறித்துள்ளனர் அப்பேரரசர்."

1752ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தூப்ளேக்ஸ் காலத்தில் நிகழ்வுற்ற பெரிதும் ஆடம்பரமான நிகழ்ச்சியொன்றினைப்பற்றிக் குறிப்பிடுமோமாக:

மொகலாயப் பேரரசர் தம் பிரதிநிதியொருவரைப் புதுவைக்கு அனுப்பி, அவர்மூலம் "பரவானு" (Paravana) ஒன்றை தூய்ளேக்ஸிடம் அளிக்குமாறு கட்டளையிட்டிருந்தனர். அந்நிருபத்தின் வாயிலாகக் கிருஷ்ணாநதிக்குத் தென்பாலுள்ள இந்தியாவின்பாதி திபகற்பத்திற்கு அரசமுறைமைப்படி உரிமையும், ஆட்சியும் தூய்ப்ளேக்ஸிற்கு வழங்கியிருந்தனர்.

அரசப் பிரதிநிதியானவர் நகரின் வாயிற்புறத்தே வந்து தங்கியிருந்தனர். தூய்ப்ளேக்ஸ் என்பார் நேரிற்சென்று அவரிடமிருந்து அப்பரவானுவைப் பெற்று வருதல்வேண்டும். அதனை வரலாற்றுச் சம்பிரதாயங்களின்படி

கோட்டைக்கு ஊர்வலமாகக் கொண்டுவரவேண்டியிருந்தது.

இந்நிகழ்ச்சியின்போது, தூய்ப்ளேக்ஸ் நவாபுக்குரிய பரிவாரங்கள் சூழ இருத்தல் வேண்டும். மொகலாய ராணுவ இசைக் குழுவினர், "நவுபா" (Nauba) அதாவது யானைகளின்மேல் வைக்கப்பெற்றுள்ள நகராக்கள், மீன் சின்னம், நாட்டியமாதர்கள், யானை யொன்றின் மேல் வைக்கப்பெற்றுள்ள தூய்ப்ளேக்ஸினுடைய மொகலாயக்கொடி, ஈட்டிகள் தாங்கிய வீரர்கள் பன்னிருவர், அவ்வாறே கொடிகளைத் தாங்கிய வீரர்கள், பிறர் என்றும் இவையே நவாபுக்குரிய பரிவாரங்களாகும். திவான் அலுவலை வகித்திருக்கும் ஆனந்தரங்கப்பிள்ளையவர்களே இவையனைத்திற்கும் ஏற்பாடு செய்தாகவேண்டும். ஐரோப்பியப் போர் வீரர்கள் இந்நாட்டில் இவையனைத்தையும் அமைத்துக்கொள்வதென்பது இயலாதன்றோ? எனவே இப்பொறுப்பினை இந்திய அமைச்சராகிய அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது.

ஆ. ர. பி. (A. R. P.) நாட்குறிப்பு, எட்டாம் தொகுதி, பக்கம் 207இல் குறித்துள்ளபடி, 1752ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி திங்கட்கிழமையன்று ஆனந்தரங்கப்பிள்ளையவர்களிடம் தூய்ப்ளேக்ஸ் கூறுகின்றார்: "நாளை நான் மொகலாயப் பேரரசின் பரவானாவை நேரில் சென்று பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. நவாபுக்குரிய பரிவாரங்களுடன் சிறு கொடிகளைத் தாங்கிவருவதற்கான ஆட்களையும் சித்தப்படுத்தி வையுங்கள். அனைத்தும் ஆயத்தமாயிருந்தால். நான் காலை ஏழரைமணிக்கே புறப்பட்டுவிடுவேன்."

அதேதேதியில் அவர் குறித்திருக்கின்றபடி "அரசாங்கம் என்னையழைத்து, நாளைய ஊர்வலத்திற்கென யாவற்றையும் நான் தயார் செய்துள்ளேனா என்று வினவ, நான், வேண்டியவற்றையெல்லாம் செய்திருக்கின்றேன். என்று விடையளித்தேன்."

1752ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ஆம் தேதி செவ்வாய்க்கிழமை: நேற்று, ஆளுநர் அவர்கள் எனக்கிட்டிருந்த கட்டளைகளின் பிரகாரம், மேற்கூறியபடி ஊர்

வலத்திற்கு வேண்டுவன அனைத்தையும் ஆயத்தம் செய்வித்தற்கென, இன்று காலை எனது கிடங்கிலிருந்தேன். பின்னர் ஆளுநரிடம் சென்றபோது அவர்கூறினார் ; "மழை பெய்துகொண்டிருக்கிறது; இன்றைய காலைக்கு ஒன்றும் செய்ய இயலாது; எனினும், இன்றைய பிற்பகல் 4 மணிக்கு யாவும் சித்தமாயிருக்கட்டும்'' – நான் விடையளித்தேன் : "அப்படியே". நான் வீட்டிலிருந்தேன் ; எனது வேலையாட்களிடம் ஊர்வலத்திற்கு வேண்டியவை யாவும் 4 மணிக்குத்தயாரா யிருக்கவேண்டுமென்று கட்டளையிட்டேன்.'' –

4 மணிக்கு ஆளுநர் அவர்கள் தம் மாளிகையிலிருந்து புறப்பட்டார்கள். தூய்ப்ளேக்ஸுடன் ஊர்வலமாக வந்தவர்களின் நீண்ட பெயர் பட்டியல் இதனையடுத்து இணைந்துள்ளது. ஐரோப்பியக் காவலர்கள், இஸ்லாமியப் படைவீரர்கள், குதிரைகள், நவுபா, மீன் இலச்சினை கொடியேந்திய வீரர்கள் அமர்ந்துள்ள யானைகள் அம்பாரிகைகளுடன், இசைமுழக்கம், பிற (ஆ. ர. பி.) நாட்குறிப்பு – பக்கம் 210).

தூய்ப்ளேக்ஸ் அவர்கள் இந்தியாவிலிருந்து சென்றபோது, அவருக்குப் பதிலாகப் புதுச்சேரி ஆளுநராக விளங்கியிருந்த "தெ லெரித்" (de Leyrit) என்பாரும், நவாபாகப் பதவிவகித்திருந்தாராதலின், தூய்ப்ளேக்ஸ் நவாபின் பரிவாரங்கள் யாவும் அன்னவர்க்கு வழங்கப்பெற்றன.

1757ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் தேதியன்று தூய்ப்ளேக்ஸ் அவர்களைப் போன்றே தெலெரித் அவர்களும் ஆடம்பரத்தோடு ஊர்வலமாகச் செல்ல விரும்பினார் ; ஆனந்தரங்கப்பிள்ளை, தமது நாட்குறிப்பு 10ஆவது தொகுதி, பக்கம் 317இல் கூறுகின்றார் ; "ஆளுநர் நாளை ஆலம்பர்வே (ஆலம்பாரை)க்குச் செல்லப்போகின்றார். வெள்ளையம்பாரியுடன் யானை, பெரிய கொடி, மயிலிறகு விசிறிகள், கொடிகள், ஈட்டிகள் முதலியவற்றையான் சித்தமாக வைத்திருக்கவேண்டுமென்று எனக்கு அறிவித்தனர். பெரிய யானை "mast" மதவொழுக்கு நிலையிலிருத்தலினால், அது வெளியே புறப்படுதற்கியலாது என்றும் என்வசம் பெரிய கொடியில்லை : அது தற்போது கோட்டையிலிருந்து வருகின்றதென்றும், என்வசம் சிறிய

கொடியும், மயிலிறகு விசிறிகளும், பிறவுமே இருக்கின்றன என்றும் பதில் கடிதமொன்று எழுதியனுப்பினேன்.''

தூய்ப்ளேக்ஸ் புறப்பட்டுச் சென்றபிறகு, அதாவது மூன்று வருடங்கள் கடந்த பின்னர் சிறிய கொடி ஆனந்தரங்கப்பிள்ளை வீட்டில் இருந்து வருவதை இவ்விதமாக நாம் அறிந்து கொள்ளுகின்றோம். பிரஞ்சு மொகலாய ஆடம்பரம் அநுசரிக்கப்படாமல் கைவிடப்பட்டு முன்னமே விழ்ச்சியடைந்து போனதையும் நாம் அறிய முடிகின்றது.

1761ஆம் ஆண்டு புதுச்சேரி கைப்பற்றப்படுவதற்குச் சிலநாட்களுக்கு முன்னதாக ஆனந்தரங்கப்பிள்ளை காலமானார். ஐரோப்பியர்கள் வாழ்ந்துகொண்டிருந்த வெள்ளை நகரமானது இடிக்கப்பெற்று வீழ்ந்தகாலே, உள்நாட்டு மக்களின் நகர்புறம் சலனமற்றிருந்துள்ளது. இதன் காரணமாகவே, சிறிய கொடியானது, ஆனந்தரங்கப்பிள்ளை சந்ததியாரால் காபந்து செய்யப்பெற்றுவந்த அவருடைய பழைய உடைமைகளுடன் இருந்துவரலாயிற்று.

" Créole et Grande Dame " என்ற நூலின் ஆசிரியையாகிய ''ராபர்ட் கெப்ளே'' (Robert Gaeblé) அம்மையார், அதில் ஆனந்தரங்கப்பிள்ளை விட்டில் காபந்து செய்துவரும் பொருட்களின் படம் ஒன்றைப் பிரசுரித்திருந்தனர். தூய்ப்ளேக்ஸ் அவர்களின் கொடியும் அதில், படம் 7ல், காணப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

1934ஆம் ஆண்டு அவ்வம்மையாரின் நூல் வெளிவந்தபோது, கடல் கடந்த பிரஞ்சு நாட்டின் பொருட்காட்சிச் சாலையொன்று நிறுவப்பெற்றதாம்.

விலைமதிப்பற்ற பழங்காலச் சின்னமாக விளங்கியிருந்த, தூய்ப்ளேக்ஸ் அவர்களின் கொடி. கௌரவமான ஓரிடத்தில் அப்பொருட்காட்சிச்சாலையில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

அப்புகழ்வாய்ந்த கொடியினை ஆனந்தரங்கப்பிள்ளையின் வமிசத்தவர்கள் ஒப்படைத்துவிட விரும்பினார்கள்:

ஆதலினால் அப்போதைய ஆளுநர் 'போன்வேன்' (Bonvin) என்பார் அதனைப்பெற்று, பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளின் அமைச்சர் அவர்கள் சமுகம் அனுப்பிவைத்தனர்.

1938ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் தேதி வெளிவந்த பாரீஸ் மாநகரச் செய்தித்தாள்களில், பின் வருமாறு வாசிக்கநேர்ந்தது: ''ழோர்ழ் மாந்தேல்'' என் பார் விலைமதிப்பற்ற பழங்கால சின்னமாகிய அக்கொடி யினைக் குடியேற்ற நாடுகளின் பொருட்காட்சிசாலையின் பொறுப்பாளர் ''அரி லெப்ளோன்'' (Ary Leblond) என் பவர் வசம் பாதுகாப்பிற்கென ஒப்புவித்தனர்.'

இந்துஸ்தானம்பற்றி – விரிவுரைகள் தொகுதி II, பக் கம் 91இல், ''லெகு தெ ப்ளேக்ஸ்'' (Legoux de Flaix) என்பார் பின்வருமாறு அக்கொடியினைப்பற்றிக் குறிப் பிட்டுள்ளார்: அக்கொடி ''ஷீத் மதாபி'' என்னும் ஒரு வகை உயர்ந்த துணியினால் தயாரிக்கப்பெற்றிருந்தது! வண்ணத்திற்குப் பதிலாக அத்துணியில் பொற்றகளையே பதித்திருந்தனர். வேறுவகைத் துணிகளைத் துவைத்துச் சுத்தம் செய்வதைப்போன்றே அதனையும் சுத்தம் செய்து வந்துள்ளனர்: மிக்க விலைபெறும் அத்துணியைப்போன்றே ஒரு பேரழகு வாய்ந்த, பெரிதும் மெல்லிய, அதிகமும் கண் களுக்கு இனியதான வேறுவகைத் துணி இல்லை. அத்தகு சிறப்புவாய்ந்த ''ஷீத் மதாபி'' துணி, சரிகைவேலைப்பாடு களுடன் கூடிய பிறவகைப் பட்டுத்துணிகளைக் காட்டி லும் வழுவழுப்பும், பளபளப்பும் கொண்டு வலியதாகவும் அமைந்துள்ளது.''

1741ஆம் ஆண்டின் இறுதியில்தான் ''தூய்ப்ளேக்ஸ்'' அவர்கள் ''நவாபு'' பட்டம் பெற்றார்கள். அவர் சந்திரநா கூர் என்ற நகரத்தைவிட்டு புறப்பட்டகாலை, துய்மா (Dumas) தம்நாட்டிற்குக் கப்பலில் புறப்பட்டுவிட்டார். அக்காலையே ''தூய்ப்ளேக்ஸ்'' அவர்கள் புதுச்சேரிக்கு அளுநராக நியமனம் பெற்றிருந்தனர்.

அன்னார்க்கு அரைநூற்றாண்டு விழா முதலியன கொண் டாடப்பெறுங்கால், பிரஞ்சு மொகலாயக் கொடியாக விளங்கியிருந்த இந்த வரலாற்றுச்சின்னம் எத்தனையோ பழங்கால நினைவுகளை நமக்குப் புலப்படுத்திக்கொண் டிருக்கும்.

''தூய்ப்ளேக்ஸ்'' அவர்கள் ஒரு பேரரசை வெற்றி கொண்டார்: அப்புகழ்வாய்ந்த காவியத்தில் எஞ்சிநிற்பது ஒரு பொற்சூரியன் பிரகாசித்துக்கொண்டிருக்கும், சேத மடைந்துள்ள அக்கொடியொன்றே.

# 1635 ஆம் ஆண்டில் குறிக்கப்பெற்ற புதுச்சேரி.

பியேர் பெர்த்லோ என்பார் 1600ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் தேதி "ஹோன் ப்ளேர்" (Honfleur) என்ற ஊரிற் பிறந்தார். அவர் 1619ஆம் ஆண்டில் பிரஞ்சு நாட்டைவிட்டுப் புறப்பட்டு, "ஒகுய்ஸ்தேன் தெ போலியேவ்" (Augustin de Beaulieu) என்பார் தலைவராக விளங்கியிருந்த சிறிய நாவாய் ஒன்றில் தம் பயணத்தை தொடங்கினார். அந்நாவாய் 1621ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் தேதியன்று "அஷாம்" (Achem) துறைமுகத்தைவிட்டுப் புறப்பட்டகாலை, மேற்படி "பியேர் பெர்த்லோ" (Pierre Berthelot) என்பார் அவ்வூரிலேயே தங்கியிருந்தனர். பின்னர், 1662ஆம் ஆண்டு, மே மாதத்தின் போது அவர் "மக்காஸ்தார்" (Maccastar) என்ற ஊரில் இருந்து வந்தார்; 1625ஆம் ஆண்டில் மலாக்காவிலும், 1629ஆம் ஆண்டில் கோவாவிலும் இருந்துள்ளார். 1630ஆம் ஆண்டில் கோவா ஆளுநராக விளங்கிய "தெலினு ரேஸ்" சிற்றரசரிடமிருந்து அரசாங்க வானிலை ஆய்வாளர் என்ற பட்டத்திற்குரிய நியமனத்தைப் பெற்றார்.

அத்தகுதியின் சார்பாகவே அவர் 1635ஆம் ஆண்டில் ஒன்பது தேசப்படங்கள் வரைந்தனர். அவை "இந்தியாவினுடைய கூட்டுறவு" என்ற பொருள்படும். (Relacion da India) என்ற தலைப்பில் மேற்சொன்ன ஆளுநரின் செயலாளராக விளங்கியிருந்த "பர்ரேத்" என்பாரினுடைய கையேட்டுப் புத்தகத்தில் இணைக்கப்பெற்றன. அக்கையேட்டுப் பிரதி, லண்டனிலுள்ள ஆங்கிலேயர்களின் பொருட்காட்சிச்சாலையில், கையேட்டுப் பிரதிகளின் சேமிப்பகத்தில், ஸ்லோன் M. S. 197 ff. 163b—164 எண்ணில் குறிக்கப்பெற்று அங்கு இருந்துவருகின்றது.

அப்படங்களில் 5ஆவதாக இருப்பது இந்தியாவின் தேசப்படம். 1635 என்று ஆண்டுகுறித்துள்ள அப்படத்தில் "பியேர் பெர்த்லோ" என்று அவனுர் கையொப்பமும் காணப்படுகின்றது.

1635ஆம் ஆண்டில் புதுச்சேரியில் டேனிஷ்காரர்களின் வாணிக நிலையம் ஒன்று இருந்தது என்றுயாம் முன்னேயே குறிப்பிட்டோம். சோழமண்டலக்கரையில் புதுச்சேரி தலையான துறைமுகங்களில் ஒன்ருக விளங்கியிருந்தது என்ரேம். டேனிஷ்காரர்களின்வசம் இருந்துவந்த காலை "பொல் செரே" (Polesere) என்ற பெயர் அந்நகரத்திற்கு வழங்கப் பெற்றிருந்தது. எனவே அதேபெயரில் மேற்சொன்ன இந்தியாவின் தேசபடத்திலும் குறிக்கப் பெற்றிருத்தல் கூடுமானதேயாகும். லண்டனில் கையேட்டுப் பிரதியாக இருந்துவரும் நூலிலுள்ள தேசப்படத்தின் புகைப்படப் பிரதியொன்றை எங்கனம் பெற இயலும்?

சரித்திர ஆராய்ச்சியில் நிரம்பவும் ஈடுபாடுடையவரும் சரித்திர அறிஞருமாக விளங்கியிருந்த சந்திரநாகூர் "அ. "லெஹுாய் ரோ" (A. Lehuraux) என்பார், தாம் ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்த அந்த சமயத்தை பயன்படுத்திக்கொண்டு, அவ்விலைமதிப்பரிய இந்திய தேசப்படத்தின் புகைப்படப் பிரதியொன்றைப் பெறக்கூடுமாயிற்று. அப்படத்தில் "பொல்செரெ" (Polesere) என்ற பெயர் உரியவிடத்தில், பிற முக்கியமான துறைமுக நகரங்களின் பெயர்களுடன் மாத்திரம் குறிக்கப்பெற்றிருந்ததைக் கண்டு பெரிதும் நிறைவடைந்தோம். 1635ஆம் ஆண்டில் புதுச்சேரி ஒரு பிரதானமான நகரமாக விளங்கியிருந்ததற்குரிய உறுதியான சான்ருென்று இப்பொழுது நமக்குக்கிடைத்துள்ளது; நமது நகரின் கடந்தகாலப் பெருமைகளைப்பற்றி ஓரளவு விளக்கம்தரவல்ல ஒருசான்றை நமக்கு விருப்புடனளித்த "அ லெஹுாய் ரோ" (A Lehuraux) என்ற அறிஞர் பெருமானுக்கு நமது மனமுவந்த நன்றியறிதல்களை இதன்வாயிலாகப் புலப்படுத்துகின்ரேம்.

# மைலாப்பூரில் செயிண்ட் தாமஸ்

சென்னை மைலாப்பூரிலுள்ள தேவாலயத்தில், செயின்ட் தாமஸ் சுவாமிகளின் கல்லறை இருப்பதாகக் கொண்டு அங்குள்ள கல்லறையொன்றை மக்கள் வெகுவாகப் பூசித்துவருகின்றனர். இச்சம்பிரதாயத்தினைப்பற்றி நாம் என்ன கருதவேண்டியுள்ளது?

சங்கைக்குரிய ஹெச் ஹிராஸ் எஸ். ஜெ. தந்தையவர்கள் பலமுறைகளில், அறவிடு வமிசம், தொகுதி. 1, பக்கம் 64, பம்பாய் வரலாற்றுச் சங்கத்தின் தொதி 2, எண் II, (1929 செப்டம்பர்) இதழ் முதலானவற்றின் வாயிலாகப் பதினாறும் நாற்றாண்டின் தொடக்கத்தில், சோழ மண்டலக்கரையில் போர்ச்சுகீசியர்கள் வந்திருந்தகாலை இத்தகைய கட்டுக்கதை யொன்றினை மக்களிடையே பரப்பிவந்தனர்'' என்று உறுதிப்படுத்தியுள்ளனர்.

முதற்கண், போர்ச்சுகீசியர்களின் வருகைக்குப் பெரிதும் முற்பட்டகாலம் முதற்கொண்டே இச்சம்பிரதாயம் அனுசரிக்கப்பெற்று வந்துள்ளதாக நிருபித்துக் காட்டுதல் முக்கியமாகும்.

1293ஆம் ஆண்டில் பிரயாணம் செய்த ''மார்க்கோ போலோ'' என்பார் முழுமையான பல விவரணங்களை இதுபற்றி நமக்குத் தருகின்றனர், பிரயாணங்களும் 'நினைவுக்குறிப்புகளும் அடங்கிய தொகுதி, (1824ஆம் ஆண்டில் பாரிஸ்மா நகரத்தின் நில நூல் சங்கத்தினரால் பதிப்பிக்கப் பெற்றது) பக்கம் 197 முதல் 211 வரையில் அவை காணப்பெறுகின்றன. அவர் பின்வருமாறு கூறுகின்றார்: "இலங்கைத் தீவின் முன்பாக அமைந்துள்ள நிலக்கண்டம் "மாபார்'' என்னும் பெயரினதாகும். அதன் அரசர் "சந்தர் பாண்டி தேவர்'' (சுந்தர பாண்டிய தேவன்) என்னும் பெயரினர்; அதன் கரைப்பகுதிகளில் முத்துச்சலாபங்களைக் குளித்தெடுக்கின்றனர்; அதன் வடபால் "மத்பிலி'' (Mutfili) (இப்பெயரில் எஸ் (s) எப் (f) எழுத்தாக மயங்கப்பெற்றிருத்தலால், ''மத்சிலி'' (Mutsili)

(அதாவது மசூலிப்பட்டினம்) அமைந்தள்ளது; இவ் விராச்சியத்தில் வைரக்கற்கள் பெருமளவில் விற்கப்படுகின்றன. கிருஷ்ணநதிக்கரையிலுள்ள பாட்டியாலா இராச்சியத்தின் வைரச் சுரங்கங்களிலிருந்து அக்கற்கள் இங்கு விற்பனைக்கு அனுப்பப்பெறுகின்றன. இந்த "மாபார்" மாகாணத்தில்தான், "செயிண்ட்-தாமஸ் என்ற அப்போஸ்தலரின் திருவுடல் காணப்பெறுகின்றது." இவற்றில் யாதொரு ஐயப்பாட்டிற்கும் இடமில்லை. "மாபார்", "மொ ஆபார்", அல்லது "மெயாபார்" (Maabar, Moabar, Meabar) என்பன சோழமண்டலக் கரையின் பழைய பெயராகும். தந்தை ஹிராஸ் சுவாமியார் தமது நூலின் 438 ஆம் பக்கத்தில் வெளியிட்டுள்ள 1516 ஆம் ஆண்டின்போது பதிப்பிக்கப்பெற்ற கடற்கரைப் பிரதேசத்தின் தேசப்படத்தைப் பார்வையிட்டால், சோழமண்டலக்கரையின் நெடுமைக்கும் "மாரே தெ மொஆபார்" (Mare de Moabar) என்ற பெயரே குறிப்பிட்டிருப்பது புலனாகும். "மாபார்" நாட்டின் பூமி செந்நிறத்தது என்றும் மார்க்கோ போலோ கூறியுள்ளார். சோழமண்டலக் கரையின் "செங்குன்றுகள்" (red hills) என்ற பிரதேசத்திற்கு இப்படிப்பட்ட மண்ணமைப்புப் பொருந்துவதாகும்; எனினும், இக்கரைப்பகுதியனைத்துமே இத்தகைய தோற்றம் பொருந்தியதாகக் காண்கின்றது.

மார்க்கோ போலோ காலத்திலேயே, 1293 ஆம் ஆண்டில் "மோந்த் கொர்விஞே" (Monto Corvino) என்பார் செயிண்ட்-தாமஸ் சுவாமிக்குரிய தேவாலயம் ஒன்றைப் பற்றி உறுதியற்ற விதமாகப் பேசியுள்ளார். 1316 ஆம் ஆண்டில் "ஒதேரி" (Oderie) என்பார் "மொபார்" பிரதேசத்திய தேவாலயம் ஒன்றில் செயிண்ட்-தாமஸ் சுவாமியின் உடல் இருப்பதாகக் கூறியுள்ளார்; 1349 ஆம் ஆண்டிலும் "மரிஞ்ஞொல்லி" (Marignolli) என்பாரும் அதேவிதமாகக் கூறியுள்ளார். கடைசியாகப் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் "நிக்கோல் தெ கோந்தி (Nicole de Conti) என்பார், செயிண்ட்-தாமஸ் சுவாமியின் உடல், வங்காளக்குடாக் கடலின் கரையிலிருக்கும் "மலேப்பூர்" (Malepur) (மைலாப்பூர்) என்ற துறைமுக நகரத்திலிருப்பதாகக் கூறியுள்ளார்.

ஐயப்பாட்டிற்கிடமின்றி "மாபார்" என்பது இங்குச் சோழமண்டலக்கரையினைக் குறிப்பதால் 13 ஆம் நூற்

ருண்டிலும் உண்மையில் அதற்கு நெடுங்காலம் முன்பாகவே, செயிண்ட்-தாமஸ் சுவாமியின் சின்னங்கள் என்று வழங்கப்பெற்றவற்றை மைலாப்பூர் தேவாலயம் தன்னகத்தே கொண்டிருந்ததென்பது உண்மையே யாகும்.

''செயிண்ட்-தாமஸ் சுவாமியின் உடல் மைலாப்பூரில் இருந்தற்கியலாது; ஏனெனில் சுவாமிகளின் கல்லறை 'எதேஸ்' (Edesse) என்ற வடமெசோபோடேமியா நகரில் இருத்தலினுலாம்'' என்று மறுப்பொன்றும் வெளியிடப் பெற்றுள்ளது.

செயிண்ட்-தாமஸ் சுவாமியின் வரலாறு. அதிலும் குறிப்பாக அவரது இறுதி நாட்களைப்பற்றியது, யார்க்கும் செவ்வையாக அறிந்துகொள்ள இயலாததாயிற்று: அவர் இந்தியாவுக்கு வந்திருத்தல் கூடும். என்பதையே சிலர் சந்தேகிக்கக்கூடும்: மத விரோதிகளால் அவர் துன்புறுத்தப் பட்டு மரித்திருக்கவுங்கூடுமெனவும் ஐயுறுகின்றனர். ''ஹெராக்ளெயோன் லெ ஞொஸ்தீக்'' (Hèracléon le Gnostique) என்ற மிகப் பெரும் பழைய ஆசிரியரொருவர், ''செயிண்ட்-தாமஸ் சுவாமி, தம் நாட்களை வெகு அமைதியாகவே முடித்துக்கொண்டனர்'' என்று உறுதிப்படுத்துகின்ருர். இது பெரும்பாலும் ''எதேஸ்'' நகரில் நிகழ்ந்திருக்கலாம்.

590ஆம் ஆண்டில் ''தெ குளோரியர் பெயாத்தோரோம் மர்த்திரோம்'' (De Gloria Béatorum Martyrum) (மிஞ் LXXI) என்ற தமது நூலில் தூர் நகரின் ''செயிண்ட்-கிரிகரி'' என்ற பெரியார், சீரியாவின் எதேஸ் நகரில் அப்போஸ்தலரின் உடல் எலும்புகள் பாதுகாக்கப்படுகின்றன என்ற உறுதிப்படுத்துகின்றனர். அதனை ஐயுறுதற்கில்லை இதனுல், மைலாப்பூரில் உள்ளவை முறையானவைகளாக இரா என்று முடிவு செய்வது சரியேயாகும்.

பிரான்சுவா மர்த்தேன் அவர்களின் நினைவுக்குறிப்புக்கள், தொகுதி I, பக்கம் 335இல், உள்ள வாக்கியம் ஒன்று, இவ்வினுவினை விநோதமாகத் தெளிவுறுத்துகின்றது. ''தங்கள் வாணிகத்தை நடாத்திப் பழகியிருந்த பல ஆர்மீனியர்கள், தாம்வாழும் நகரத்திற்குப் பெயராகவே விளங்கியிருந்து பிரசித்தரான அடியவர் ஒருவர்பால் அவர்கள் கொண்டிருந்த பக்தியின் காரணமாகவே அங்

குத் தொடக்கத்தில் நகரை உருவாக்கினர் என்று தெரிய வருகின்றது.''

உண்மையிலேயே மைலாப்பூர் மிகமிகப்பழமையான காலத்தின் நகரமாகும். பல்லவ, கம்பவர்மன் என்ற அரசனுடைய கல்வெட்டொன்றில் அந்நகர் ''மயிலாப்பில்'' என்று குறிக்கப்பெற்றுள்ளது. அங்கு ஜெயினர்கள் வாழ்ந்துகொண்டிருந்திருக்கலாம் என்றும், இஸ்லாமியப் பேரறிஞர் ஒருவரும் அங்கு வாழ்ந்திருந்தனர் எனவும் அறிகின்ரேம்.

ஆற்றின்கரையயோரமாக அமைந்திருந்த சாந்தோமில் கத்தோலிக்கர்களும், குறிப்பாக ஆர்மீனியர்களும் வசித்து வந்துள்ளனர். ஆர்மீனிய வணிகர்கள் மிகப்பலராகவும், சோழமண்டலக்கரைப் பகுதியிலேயே மிக்க செல்வமுடையவர்களாகவும் இருந்துள்ளனர். வைரக்கற்கள், முத்துக்கள் ஆகியவற்றைத் தாம் வாங்குவதும், அரபிக் குதிரைகளை விற்பதுமாக அவர்கள் அங்கு வாணிகம் செய்துவந்துள்ளனர். இவ்வாருக, ஆரும் நூற்ருண்டில், மேற்சொன்ன ''கிரிகரி'' என்பார், செயின்ட்-தாமஸ் சுவாமிகளின் திருவுடலின் எலும்புகள் ''எதேஸ்'' நகரில் வைக்கப்பெற்றுள்ளன என்று எழுதிய காலத்தில், சோழமண்டலக்கரையில் பெருஞ்செல்வர்களான கத்தோலிக்க ஆர்மீனியர்கள், செயிண்ட் தாமஸ் சுவாமிகளின்பால் மிகவும் பக்தியுடையவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்றும் மற்றுமச்சுவாமிகளிடத்தில் பக்தி கொண்டு அவரை வணங்கிவந்த (Manicheens) ''மனிஷெயேன்'' மார்களும் அக்காலை அங்கு வசித்துக்கொண்டிருந்தார்கள் என்றும் யாம் இங்குக் குறிப்பிடவேண்டியது அவசியமாகின்றது.

சிரியா, மெசோபோடேமியா, ஆர்மீனியா ஆகிய நாடுகளில் இஸ்லாம் பரவிக்கொண்டிருந்தகாலை. இஸ்லாமியர்கள் ''எதேஸ்'' நகரைக் கைப்பற்றிக் கொண்டனர். செயிண்ட் தாமஸ் சுவாமிகளின் திருவுடல் எலும்புகள் என்னவாயின ?

சுவாமிகளின் மண்டையோடு எட்ரியாடிக் கடற்கரையிலுள்ள ''ஓர்த்தோனு-அ-மார்'' (Ortona-a-mare) என்ற நகரத்திற்குக் கொண்டுசெல்லப்பெற்றுள்ளது. இதனுல்,

அவ்வெலும்புகளின் பலபகுதிகள் பல்வேறிடங்களில் பரவலாக விநியோகிக்கப்பெற்றுள்ளன எனபது நிச்சயமேயாகும். படையெடுப்புகளின்போது, கீழ்த்திசைநாட்டவர்கள், தங்கள் மதத்தைக் காத்துவந்துள்ளார்கள். மற்றும் அவர்கள் அடிக்கடி இந்தியாவில் தஞ்சம் புகுவதும் வழக்கம்; இவ்வாறுகவே. பார்சிகள் பம்பாய்க்கருகில் குடியேறினர்கள்; யூதர்கள் முசிறிஎன்று முன்புவழங்கப்பெற்ற "கிராங்கனூர்" (Crancanore) பிரதேசத்திற்கு ஓடியொளிந்தனர்: பின்னர் அங்கிருந்து பம்பாய்க்குச் சென்று குடியேறினர்; ஆர்மீனியர்களும் மைலாப்பூரிலிருந்து வந்த தங்கள் நாட்டவர்களோடு வந்து சேர்ந்துகொண்டனர்; அவ்வாறு குடியேறியவர்களும் பெருஞ் செல்வர்களாய் இருந்திருக்கலாமென்றும், அவர்கள் தம்மோடு செயிண்ட் தாமஸ் சுவாமியின் திருவுடலின் எலும்புக் கூறுகளைக் கொண்டுவந்திருக்கக் கூடுமென்றும் எண்ணுவது பொருந்தக்கூடியதேயாகும். முதல் நூற்றுண்டுகளின்போதேயே அச்சுவாமியின் திருச்சின்னங்கள் இந்தியாவிற்குக் கொணரப்பெற்றன என்று கொள்வதும் பொருந்துவதேயாகும்.

பம்பாய் வரலாற்றுச் சங்கத்தின் இதழ் தொகுதி 4, எண் 2இல், டி. கே. ஜோசப் என்பார் எழுதியுள்ள கட்டுரையின் 182ஆம் பக்கத்திலுள்ள ஒரு பாராவில் நாம் பின்வருமாறு வாசிக்கக்கூடுமாயுள்ளது: 394ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22ஆம் தேதி, எதேஸ் நகரில் "செயிண்ட் தாமஸ்" சுவாமிகளின் எலும்புகளைக் கொண்டிருந்த பெட்டகம் ஒன்று, பழைய தேவாலயத்திலிருந்து வெளியேற்றப்பெற்று, அவ்வூரில் புதிதாக நிர்மாணித்திருந்த பிரதான தேவாலயத்திற்குக் கொணரப்பெற்று அங்கு அமைக்கப்பெற்றது: 431ஆம் ஆண்டில் மரித்த "பொலேன் தெநோலா" 420ஆம் ஆண்டில் மரித்த "கோதாந்தியுஸ் தெபிரெசியா" 397ஆம் ஆண்டில் மரித்த "அம்புவாஜ் தெமிலான்" ஆகிய ஆண்டவர்கள் இத்தாலிநாட்டினவாகிய தத்தம் நகரங்களில் செயிண்ட் - தாமஸ் சுவாமிகளின் திருவுடல் எலும்புகளை வைத்து வழிபாடியற்றி வந்துள்ளனர் என்று "Modlycoth, India and the Apostle Thomas" என்ற நூலில், பக்கம் 45, 1 ஆவது அடிக்குறிப்பில் காணப்படுகின்றது. மற்றும் 402ஆம் ஆண்டில் (மேற்கூறிய நூலின் 106ஆம் பக்கப்படி) சுவாமிகளின் வருடாந்திர விழாக் கொண்டாட்டத்தின்போது, "எதேஸ்" நகரில் முன்னறி

விப்பாளரொருவர் கூறியுள்ளார்: அப்போஸ்தலரின் அஸ்திகள் இம்மண்ணுலகனைத்திலும், ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் உரிய பங்காக வகுக்கப்பெற்று வீசப்பெற்றன என்றும் இப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் சுவாமிகள் தம் முழுமையான திருவுருவத்துடன் இருந்துவருகின்றனர்." என்றும் அறியக்கூடுமாயுள்ளது.

மைலாப்பூரில் வாழ்ந்துகொண்டிருந்த பெருஞ்செல்வர்களாகிய ஆர்மீனியர்கள் தமது தேவாலயத்திலும் சுவாமிகளின் அஸ்திகளைப் போற்றி வைத்திருந்தனர் என்பதிலும் அக்காலத்திய நம்பிக்கையின்படி சுவாமிகள் தம் திருவுருவத்துடன் அங்குக் காணப்பெற்றனர் என்பதிலும் வியத்தற்குரிய அம்சம் ஒன்றுமேயில்லை.

"மைலாப்பூர் தேவாலயம் அப்போஸ்தலர் செயிண்ட் தாமஸ் சுவாமிகளின் திருவுருவத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது" என்ற நம்பிக்கைக்கு இவ்வாறுதான் பொருள்கொள்ளவேண்டும் என்று நாம் விளக்குதல் இன்றியமையாததாகும்.

# 11 ஆம் நூற்றாண்டில்

## காரைக்கால்

ஹாலண்டு நாட்டிலுள்ள லெய்ட் சர்வகலாசாலையின் பொருட்காட்சி மன்றத்தில் செப்புத்தகடுகளில் தமிழில் வரையப்பெற்றுள்ள சாசனப்பத்திரம் ஒன்று இருந்து வருகின்றது. அதனைச் 'சிறிய கொடைப்பத்திரம்' என்ற பெயரால் குறிக்கின்றனர்; அதே மன்றத்திலுள்ள வேறொரு பெரிய கொடைப்பத்திரத்தினின்றும் இதனை வேறு பிரித்தறியவே இப்பெயர் அதற்கிடப்பெற்றுள்ளது.

1934 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் ',எப்பிகிராபியா இண்டிகா'' என்னும் சஞ்சிகைத் தொகுதி XXII, பாகம் 7 இல் இப்பத்திரங்களின் தீர்ந்த ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் பிரசுரிக்கப்பெற்றுள்ளன. இங்கு நாம் கவனத்திற்குக் கொண்டுவருவது யாதெனில் ''குலேத்துங்கா (Kulotunga)I இன் லெய்டன் சின்னசெப்புப் பட்டயங்கள்'' (எண் 35, பக்கம் 267) (''The smaller Laiden plates of of Kulotunga I) என மொழிபெயர்ப்பாளர் வழங்கியுள்ள ஒன்றேயாகும்; ஏனெனில், அக்கட்டுரையின் ஆசிரியர், கோயம்புத்தூர் திருவாளர் எம். கே. வி. சுப்ரமணிய ஐயர், B. A., என்பார், ஒரு நிகழ்ச்சியினை இருட்டடிப்புச் செய்துள்ள நிலையில் விட்டுச் சென்றுள்ளனர்; பிரஞ்சிந்தியக் குடியேற்ற நாடுகளைச்சார்ந்தமட்டில், அந்நிகழ்ச்சி பற்றிய செய்தி மிகப் பெரிய முக்யத்வம் வாய்ந்ததாகும. அச்சாஸனத்தில் நம்முடைய ''காரைக்கால்'' பிரதேசத்தின் பெயர் குறிக்கப்பெற்றுக் காண்கின்றது.

முதற்குலோத்துங்க சோழனின் இருபதாவது ஆண்டு ஆட்சிக் காலமாகின்ற 1090 ஆம் ஆண்டில் நாகப்பட்டிணத்திலிருந்த புத்தப் பள்ளியொன்றுக்குச் சில சலுகைகளை வழங்கியுள்ளார் அப்பேரரசர்.

அப்புத்தப்பள்ளி அமைந்திருந்த இடத்தைப்பற்றி நாம் வேறொரு வகையாகவும் அறிந்துகொள்ளக் கூடு

மாயிற்று. அப்பள்ளி 19 ஆம் நூற்றாண்டு வரையில் நிலைபெற்றிருந்ததாகும் நாகப்பட்டிணத்திற்கு வடக்கில் அமைந்து தேசப்படங்களில் காணப்பெறுகின்றது. செப்புத்தகடுகளில், இச்சந்தர்ப்பத்தில் வரையப்பெற்றுள்ள செய்திகளில் அப்பள்ளியின் நான்கு எல்லைகளும் குறிக்கப்பெற்றுள்ளன. அவற்றைக்கொண்டு உள்நாட்டு ஸ்தாவர சொத்துக்களின் அதிகாரிகள் அதனை நன்கு வரையறுத்துக்கொள்ள இயன்றது.

அச்சாஸனத்தின் 44 ஆவது வரியில் "காரைக்கால்" என்ற சொல் இருமுறை குறிக்கப்பெற்றுள்ளது அப்பள்ளியின் கிழக்கில் கடற்கரைப்புறமும், மேற்கில் "காரைக்கால்" ராஜபாட்டையும் அமைந்துள்ளன என்று அதில் சொல்லப்பெற்றுள்ளது,

இத்தொடர்க்கு வியாக்கியானங்கள் செய்யவேண்டியது இன்றியமையாததாகின்றது. காரைக்கால் நாகப்பட்டிணத்திற்குப் பத்து ஆங்கில மைல் தொலைவிலிருக்கின்றது. பாட்டையைக் குறிப்பிடவேண்டியவிடத்து "காரைக்கால் ராஜபாட்டை" என்று கூறப்பெற்றுள்ளதெனில், நாகப்பட்டிணத்திற்கு வடக்கில், அந்நாட்டின் தலைநகராக அந்நகரம் இருந்துகொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டுதற்கேயாம். 11 ஆம் நூற்றாண்டில் நாகூரும் திருமலைராஜபுரமும், காரைக்காலைவிடச் சிறப்புற்றுவிளங்கியில்லை; அவ்விருநகரங்களும் மேற்குறிப்பிட்ட அதே ராஜபாட்டையில்தான் அமைந்துவிளங்கின; ஆனால் அவை அப்பெரும்பாட்டைக்குத் தங்கள் பெயரை இடுதற்கேற்ற தகுதியற்ற கிராமங்களாகவே அப்போது இருந்துள்ளன.

"காரைக்கால்" குறிப்பிடப்பெற்றுள்ள இரண்டாவது சாஸனம் ஒன்று இருந்து வருகின்றது. தஞ்சைப் பெரிய கோயிலின் சுவர் ஒன்றில் செதுக்கப்பெற்றுள்ள கல்வெட்டுச் சாஸனமே இங்குக் குறிக்கப்பெறுகின்றது. (S. I. I.) (தென்னிந்தியக் கல்வெட்டுகள். தொகுதி II; பக்கம் 279; 66 ஆம் எண்ணுள்ள கல்வெட்டு), அஃது இராஜராஜனின் 29 ஆம் ஆட்சி ஆண்டாகிய 1014 ஆம் ஆண்டினதாகும். எண் 361 இல், காரைக்காலின் பூர்வீகக்குடியாகிய நடனமாது ஒருவர் அதில் குறிப்பிடப்பெற்றுள்ளனர்.

தமிழிலக்கிய வரலாற்றுப்படியும், காரைக்காலின் பழமையை நிரூபித்துக்காட்டுவது பெரிதும் முக்கியமான தாகும்.

திருத்தொண்டர்களில், இரண்டு மூத்த திருப்பதி கங்கள் அருளிச் செய்துள்ள ''காரைக்கால் அம்மையார்'' என்ற தொண்டர் பிராட்டியும் ஒருவர் என்பது அனை வருக்கும் தெரியும். (சென்னை, கிறிஸ்டியன் காலேஜ், 1893 ஆம் ஆண்டு நவம்பர் மாதச் சஞ்சிகையில் வி. வேங்கையா என்பார் வரைந்த கட்டுரையைக் காண்க). இப்பக்திப் புலமை சான்ற அம்மையார் ஆகிய வர்களும், சந்தேகத்திற்கிடமில்லாதபடி காரைக்காலின் பழங்குடி மக்களில் ஒருவரேயல்லவா?

முடிவாகக் கூறுமிடத்து, இரு கல்வெட்டுக்கள், பதி ஞோராம் நூற்ருண்டில், காரைக்கால் முக்கியமான நகர மாகத் திகழ்ந்திருந்ததை மெய்ப்பிக்கின்றன அரிசில் (அரசலார்) கடலோடு சங்கமிக்கும் பிரதேசத்தில் அதற்கு நேர்ந்த அமைப்பினுல் ஒரு வளப்பத்தினைத் தன்னகத்தே கொண்டு அந்நகர் அக்காலை சிறப்புற்று விளங்கியிருந் திருத்தல் கூடுமானதே யாகும்.

அக்கல்வெட்டுக்கள், காரைக்காலின் பழமையை நமக்கு மெய்ப்பித்துக் காட்டி, மற்றும் ஒரு பெரும் பக்திப்புலவர் பிராட்டியாராக விளங்கியிருந்த காரைக் கால் அம்மையாரின் ஜன்ம பூமியாகத் திகழ்கின்ற ஒரு பெரும் புகழையும் அதற்கு நாம் வழங்க நமக்கு உதவு கின்றன.

# காரைக்காலில் ஹாலண்டுக்காரர்களின் வணிக நிறுவனம்

சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அன்புகூர்ந்து செப்புபட்டயச் சாஸனம் ஒன்றின் மீது எனது கவனத்தைச் செலுத்திவித்தனர். அப்பட்டயத்தின் சுருக்க மொழி பெயர்ப்பு ஒன்று "Copio Diplomaticum Neerlando Indicum" என்ற நூலின் III ஆவது தொகுதி, பக்கம் 34-39, எண் 378 இல் 1934 ஆம் ஆண்டு ஜெ. இ. ஹீராஸ் அவர்களால் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 1676 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தஞ்சாவூர் அரசர் ஏகோஜிக்கும் ஹாலண்டுக்காரர்களுக்குமிடையில் கையொப்பமிடப் பெற்றுள்ள ஒரு சமாதான உடன்படிக்கையாகும், அச் சாஸனம். அதில் காரைக்காலில் ஹாலண்டுக்காரர்கள் நிறுவியிருந்த வணிக நிறுவனத்தைப்பற்றிய ஆர்வமூட்டும் பல செய்திகள் காண்கின்றன. அவற்றைக்கொண்டு அவ்வணிக நிறுவனத்தின் வரலாற்றை உருவாக்க அச் சாஸனத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

ஆனந்த வருஷம் புரட்டாசி மாதம் 13 ஆம் தேதிக்குச் சரியான 1674 ஆம் ஆண்டில், மதுரையரசர் சொக்கநாத நாயகரின் அமைச்சர் காவெட்டி நாயகர் என்பார், சோழமண்டலக் கரையில் ஹாலண்டுக்காரர்களின் குடியேற்றப் பிரதேசங்களின் ஆளுநர் ரிஜ்க்ளோப் வான் கோயன்ஸ் என்பார்க்குத் திருமலைராஜபட்டினம், காரைக்கால் ஆகிய இரு துறைமுகங்களை அனுபவித்துக்கொள்ளும் உரிமையை வழங்கியிருந்தனர்.

1674 ஆம் ஆண்டின் தொடக்கத்தில்தான் நாயக்கவரசர் தஞ்சை இராச்சியத்தைத் தம் வசமாக்கிக்கொண்டனர். அதே ஆண்டில் அவர் ஹாலண்டுக்காரர்சட்குக் காரைக்காலில் வணிக நிறுவனம் அமைத்துக்கொள்ள உத்தரவளித்திருந்தனர்.

ஆனால் சொக்கநாதர் தஞ்சை இராச்சியத்தை இரண்டு வருடங்கள் வரை மட்டிலுமே தம் வசம் வைத்துக் கொண்டிருந்தனர். 1676 ஆம் ஆண்டு ஜனவரி

மாதத்தில் பிரான்சுவாமர்த்தேன், (தொகுதி II, பக்கம் 35 இல்) எழுதுகின்றார்: ''அந்தப் பிரதேசப் பகுதிகளில் புரட்சியொன்று சம்பவித்தது. போர் ஒன்றில் (தஞ்சை) நாயக்கர் இறந்துபட்டதினால் தஞ்சை இராச்சியத்தை மதுரை நாயக்கர் தம்வசமாக்கிக்கொண்டு அரசராகி இரண்டாண்டுகள் ஆகியபோது, !''எக்குய்மி'' (Ecugy) என்னும் அந்நியக்குறுநிலவரசர் ஒருவர் அயலிலிருந்த மற்றைய சிற்றரசர்களுடன் மதுரை மன்னர் போர் செய்துகொண்டிருந்த சமயத்தைப் பயன்படுத்தித் தம் படைபலங்களைத் திரட்டிக்கொண்டு தஞ்சைக்குள் புகுந்தனர். தலைநகர் தஞ்சையில் அவர் அரசராகியபோது, அந்த அரசின் ஏனைய பிரதேசங்களும் அவரையே அரசராக ஏற்கும் படியாயிற்று.''

''1676 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஷெ பிரான்சுவாமர்த்தேன். (தொகுதி II, பக்கம் 49 இல்) எழுதுகின்றார்: ''நாகப்பட்டினம் தரங்கம்பாடி ஆகிய இரு நகரங்களைச் சுற்றிலும் ''எக்குய்மி'' என்பார் படைகளை நிறுத்தி, உணவுப் பண்டங்களின் நடமாட்டத்தை அவ்விடங்களில் தடைசெய்து, அதன் வழியாக ஹாலண்டுக்காரர்களிடத்திலும், டேனிஷ்காரர்களிடத்திலும் பணம் பறிக்கத் திட்டமிட்டு, ஏற்பாடு செய்திருந்தனர்.''

''செப்டம்பர் மாதத்தின்போது ஹாலந்துக்காரர்கள் நாகப்பட்டினத்தில் உள்ளூர்வாசிகளால் ஓரளவு நெருக்குண்டிருந்தனர்'' என்று பக்கம் 53 இல், அவர் குறிப்பிடுகின்றார். பக்கம் 79 இல் 1676 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ''எக்குய்மி'' படைகளைத்தாக்கும் நோக்கத்துடன் வாலிகொண்டாபுரத்தில் ''ஷெர்க்கான் லோடி'' தம் படைகளோடு தங்கியிருந்தனர்'' என்றும் பக்கம 80 இல், நேர்ந்த ஒரு சந்திப்பில், ''எக்குய்மி'' படையினர் ''ஷெர்கான்'' படையினரால் விரட்டியடிக்கப்பட்டனர்'' என்றும் அவர் கூறுகின்றனர்.

ஒன்பது மாதங்கட்கு மேலாக நாகப்பட்டினத்தில் முற்றுகைசெய்துகொண்டிருந்த ''எக்குய்மி'' என்பார், ஷெர்க்கான் படையினரால் அச்சுறுத்தப்பெற்று, அந்நிலையில் ஹாலண்டுக்காரர்களுடன் 1676 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளத்துரிதப்பட்டு, அவ்வாறே அதில் கையொப்பமிட்டனர். அவ்வொப்பந்தத்தின் தமிழ்வாசகம் நமக்குக்கிடைத்து,

அதன் வாயிலாகக் காரைக்காலைப்பற்றிய செய்திகளை நாம் அறியலாயிற்று. முன் கூறியபடி ஹாலண்டுக்காரர்களுக்கு மதுரை சொக்கநாதர் வழங்கியிருந்த அனுபவ உரிமைத் துறைமுகங்களாகிய திருமலைராஜாவின் பட்டினமும், காரைக்காலும் "ஏகோஜி" கைகளுக்கு மாறி, 9 மாதங்கள் வரை, அதாவது பிப்ரவரி முதல் நவம்பர் வரை, 1676 ஆம் ஆண்டில் இருந்து வந்தன; அதனால் ஹாலண்டுக்காரர்களின் வாணிகத்திற்குப் பெருத்த நஷ்டம் உண்டாயிற்று. காரைக்காலிலிருந்த வணிக நிலையம் சிலமுற்று வீழ்ந்துவிட்டபடியால், 1676, டிசம்பருக்குச் சரியான நள வருஷம் மார்கழி மாதம் 30 ஆம் தேதிய இவ்வுடன்படிக்கையின்படி, ஏகோஜி வீழ்ந்துவிட்ட வணிக மன்றத்தையும் அதனைச்சார்ந்த சேமிப்புக்கிடங்குகளையும், முந்தைய வரைபட அமைப்பின்படியே, ஹாலண்டுக்காரர்களாகிற இவ்வணிக நிறுவனத்தார் கட்டாயப்படுத்தக் கூடுமான அவ்வவ்விடங்களில், புதுப்பித்துக் கொடுக்க ஏற்றுக்கொண்டனர். வணிக நிறுவனத் தலைவரும், அவருடைய ஏனைய பிரதிநிதிகளும் மீண்டும் தத்தம் அலுவலகங்களில் குடியேறவும், கடந்த காலத்தைப் போன்றே மீண்டும் அவர்கள் தங்கள் வாணிகத்தை தொடர்ந்து நடத்திவரவும் இவ்வுடன்படிக்கை அனுமதிக்கின்றது.

1676 ஆம் ஆண்டில் காரைக்காலில் ஹாலண்டுக்காரர்களின் குடியிருப்பு, வாணிகம் இவற்றிற்கான மாளிகைகளைப்பற்றிய விவரணங்களனைத்தும் பெரிதும் ஆர்வமூட்டத்தக்கனவாக விளங்குகின்றன.

பெரிதும் பொதுப்படையான ஒருநோக்கின்படிக் காணுங்கால், பிரஞ்சு நாட்டவர்கள் குடியேறியிருந்த அனைத்துத் துறைமுகங்களும், வேறுநாட்டு ஐரோப்பியர்களால், தங்கள் வசம் ஆண்டனுபவித்துக்கொண்டிருந்தவைகளாகவே இருந்துள்ளன என்பதை நாம் காண்டல் இயலும். துறைமுகங்களை உருவாக்குபவர்கள் மனிதர்களல்ல; இயற்கையே அவைகளைப் படைக்கின்றது. செஞ்சியாற்றின் கடற் சங்கமத்தில் புதுச்சேரியும், அதைப் போன்றே அரசலாற்றின் கடற்சங்கமத்தில் காரைக்காலும் இரண்டு இயற்கைத் துறைமுகங்களேயாகும்; மற்றும் இவ்விருநகரங்களும் வளப்பமான சமவெளிகளின் இடையில் அமைந்து, பெருமளவில் நீர்ப்பாசன வசதியுடன், நிலைத்த செழிப்பின் நிலைகளன்களாக முற்றிலும் விளங்குகின்றன.

# காரையில் பிரஞ்சு நாட்டவர்களின் முதற் குடியேற்றம்

இதற்கு முந்தைய தலைப்பில், எத்தகைய சந்தர்ப்பங்களில் ஹாலண்டுக்காரர்கள் ஏகோஜி அரசர் தங்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் வாயிலாக மீண்டும் காரையில் குடியேறித் தம் வாணிகத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தனர் என்பதை விளக்கினோம்.

அச்சமாதான வொப்பந்தம் மூன்றுண்டுகள் வரையிலுமே அமுலில் இருந்தது; 1679 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின்போது ஏகோஜ் ஹாலண்டுக்காரர்களை விரட்டி விட்டுக் காரையைத் தம் வசமாக்கிக்கொண்டனர்.

பிரான்சுவா மர்த்தேன் நினைவுக் குறிப்புக்கள் தொகுதி II, பக்கம் 172 இல் பின்வருமாறு குறிக்கப்பெற்றுள்ளது:

"1679 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதக் கடைசியில் ஏகோஜியின் பிரதிநிதியாக ஒருவர் வரப்பெற்றோம். அவர் ஒரு சிற்றரசர் போன்றவர்; அவருக்குப் புதுச்சேரிக்குத் தெற்கிலும் தென்மேற்கிலும் நிலபுலன்களிருந்தன. தனக்குச் சொந்தமான திரிமினிவாஸ் (திருமலைராயன் பட்டினம்) காரக் (காரைக்கால்) ஆகிய இருகரைப் புறப் பகுதிகளில் தன்னுடைய அனுமதியின்றி ஹாலண்டுக்காரர்கள் குடியேறியிருந்தமை காரணமாகவே இப்பிரதிநிதி அனுப்பப் பெற்றிருந்தார். ஹாலண்டு வணிக நிறுவனத்தார், பொருந்திய ஒன்றைச் செய்துகொள்ளுகின்ற உரிமையொன்றே போதியதாகும் என்று எப்பொழுதுமே கருதியதால், தங்கள் வணிகத்திற்குப் பொருத்தமான இடங்களை மேற்கூறிய இரு நகரங்களிலும் தாங்களாகவே தேர்ந்துகொண்டு, அவ்விடங்களில் வீடுகளையும், வணிகக் கிடங்குகளையும் கட்டிக்கொள்ளும் முகாந்திரமாகத் தங்களிடங்களைப் பலப்படுத்திக்கொள்ளும் கருத்துடன் வலிய உயர்ந்த சுவர்களையெழுப்பி அக்கட்டிடங்களை அமைத்துக்

கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் அவற்றைப் பூர்த்தி செய்யக்கூடாமற் போயிற்று. ஏகோஜீ இச்செய்திகளை யறிந்தார்; அக்கட்டிடங்களின் இயல்புகளைக் கண்டறியு மாறு தம் பிரதிநிதியை அனுப்பினர்; உண்மை புலனாயிற்று; அப் பிரதேசங்களிலிருந்த ஹாலண்டுக்காரர்களைச் சென்றுவிடுமாறு கட்டாயப் படுத்தினர்; அவர்கள் முன்பே எழுப்பியிருந்தவற்றையெல்லாம் வெகுவாக மட்டுப்படுத்திவிடுமாறு செய்தனர்; எனினும், அவர்கள் படைபலத்துடன் திரும்பவும் வருதல்கூடுமென அஞ்சிய அவர், பிரஞ்சு நாட்டவர்களாகிய நாம் கேட்ககூடு மான வசதிகளையெல்லாம் நமக்களிப்பதாகக் கூறி, ஹாலண்டுக்காரர்களுடைய அதே கட்டிடங்களில் நாம் குடியேறவும் அனுமதிப்பதாகத் தெரிவித்தனர். இந்தத் திட்டத்தை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் அக் காலை நாம் இருந்தோமில்லை.''

அதே தொகுதியில் சற்றுத்தள்ளி, 178 ஆவது பக்கத்தில், 1679 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திய செய்தியாகப் பின்வருமாறு குறிக்கப் பெற்றுள்ளது : "ஜெர்மேன்'' என்பார் தாம் சென்று பார்வையிட்ட இடங்களில் குடியிருந்த மக்கள் யாவரும், அப்பிரதேசங்களில் பிரஞ்சு நாட்டவர்கள் வந்து குடியேறப் போகின்றாகள் என்ற நம்பிக்கையில் பெரிதும் மகிழ்ச்சியுடையவர்களாய்க் காணப்பட்டார்கள். இந்த ஏற்பாட்டை முறியடிக்க ஹாலண்டுக்காரர்கள் தங்களால் கூடுமான வனைத்தையும் செய்து கொண்டிருந்தனர்: Karcangeri "கர்க்கான்ஜேரி'' என்ற திட்டுப்பகுதியில் மிகப் பெரிய தோர்த் தொகையினை அவர்கள் முற்காலத்தே அளித்திருந்தனர் என்று நமக்கு உறுதிப்படுத்தினர்கள். ஏகோஜி அரசரையும் அவர்கள் அச்சுறுத்தி வந்தனர்; இதனைச் செயலளவில் காட்டு முகத்தான் அவர்கள், சிலரைக் காரைக்காலில் புகுவித்து, அவ்வூர் மக்கள் சமுதாயத்தையே எரித்து அழித்துவிடுதற்கான திட்டமொன்றை வகுத்திருந்த காலை, அவ்வூரிலிருந்தே அவர்கள் வெளியேற்றப் பெற்றனர்; தம்மவர்களில் சிலரை இந்தச் சந்தர்ப்பத்தில் நிகழ்வுற்ற சச்சரவில் அவர்கள் இழந்தனர்.

அதே தொகுதி II பக்கம் 179 இல், "தமது பிரதிநிதியின் வாயிலாக ஏகோஜீ என்னைத் துரிதப்படுத்தி,

அவரைப் புதுவையில் சென்று காணுமாறும், தமக்கு அண்மையில் பிரஞ்சு நாட்டவர்கள் இருப்பின், தனது அயலிலுள்ள நாட்டவர்களிடமிருந்து தனக்கு இன்னும் அதிகமான நன் மதிப்புண்டாகும், என்றும் கூறியிருந் தனர். இதில் தனக்கு மிகவும் நம்பிக்கையுண்டாகி யிருப்பதாகவும் தெரியபடுத்தினர்.

மற்றும் அதே தொகுதி, பக்கம் 546 இல், 1688ஆம் ஆண்டு மேமாதத்தின்போது, " நாம் எதிர்நோக்கி யிருப் பனவும், செஞ்சிப்பிரதேசங்களில் நடைபெறவும் கூடு மான போர்கள், அங்குள்ள நமது உற்பத்தித் தொழிற் சாலைகளைச் சேதப்படுத்திவிடக் கூடுமாதலின், தஞ்சாவூர் பிரதேசங்களில் அத்தகையவற்றை நிறுவலாமென்ற தீர்மானத்துடன் நம்மில் ஒருவரை அங்கு அனுப்பி வைக்க விரும்பினேமாதலின், அத்தென்தேசத்தில், தேவையான வேலைகளைச் செய்விக்கவும், அவற்றின் மூலமாக கப்பல்களில் ஏற்றுமதி செய்வதற்கான சரக்கு கள் தற்போது நமக்குக் கிடைத்து வரும் பிரதேசங்களி லிருந்து முட்டுப்படுமானால் அவைகளை ஈடு செய்து கொள்ளவுமாக, "கொல்லாந்தே" என்பார் புறப்பட்டுச் சென்றனர். நமது வணிகக்கழகத்தின் துவிபாஷியாக விளங்கியிருந்த அன்னவர் தஞ்சை நாயகருடனும் அவரு டைய பிராம்மண ஆலோசகர்களுடனும் வணிக நிறுவனம் அமைத்தற்கான ஏற்பாடுகளை உடன்படிக்கையின் வாயி லாகச் செய்து கொள்ள நியமிக்கப் பெற்றார்"

அந்நூலின் 549 ஆம் பக்கத்தில், 1688 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின்போது நிகழ்ந்ததாக வரையப்பெற் றிருந்ததாவது: "செயிண்ட் லூய்", "பிரேவில்லி" என்ற இரு நாவாய்கள் தென் பிரதேசத்திற்குப் பயணமாகச் சென்றன; இவற்றில் முதலாவது அரிசி ஏற்றுமதியின் பொருட்டுக் காரைக்காலுக்குச் சென்றது."

554 ஆம் பக்கம். 1688 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிகழ்ச்சியாகக் குறிக்கப்பெற்றிருந்ததாவது: "புதுச்சேரிக் கென வழங்கப்பெற்றிருந்த கட்டளை அனுமதிப் பத்திரத் தைப் போன்றே செம்மையான முறையில் நாயக்கர் வழங்கியிருந்த ஒரு கட்டளை அனுமதிப் பத்திரத்துடன் நமது நிறுவன துவிபாஷி "கொல்லாந்தே" என்பார் தஞ்சைக்குத் திரும்பிச் சென்றனர். தரங்கன்பாடிக்கு வடக்கிலுள்ள காவேரிப் பட்டினத்தில், வணிக மன்றம் ஒன்றைக் கட்டிக்கொள்ள அக்கிராமத்தை நமக்கு

வழங்கியிருந்தனர். அதே கட்டளை உத்திரவின்படி நாம் "திரிமினிவாஸ்" நகரத்திலும் குடியேறுதற்கான சுதந்திரம் நமக்கு அளிக்கப்பெற்றிருந்தது".

இனிமேல் குறிப்பிடுவன "புதுச்சேரியின் உயர் ஆலோசனைக் குழுவினரின் தீரமான அறிக்கைகளின் வாசகங்களாகும். தொகுதி III, பக்கம் 158 இல் காணப்படுவது பின்வருமாறு :

"1688 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் தேதி, பிரஞ்சு நாட்டு அரச வணிகக் குழுவின் பொதுத்தலைவராகிய பிரான்சுவாமர்த்தேன் அவர்கள் மஹாராஜா ஸ்ரீ காஜி ராஜாசஹேபு அவர்கள்பால், கொல்லாந்தே என்பாரை அனுப்பிவைத்து, "காபுல்பட்டினம்" (காவேரிப்பட்டினம்) துறைமுகத்தில், வணிக மன்றச் சார்பினர்கள் சென்று குடியேறுதற்கான அனுமதி கேட்குமாறு பணித்திருந்தனர். மேற்படி மஹாராஜா அத்துறைமுகத்தை நமக்கு வழங்கினார்."

160 ஆம் பக்கத்தில் காணபபடுவதாவது பின்வருமாறு : "வணிக நிறுவனத்தார் தமக்கு ஒரு வீடுகட்டிக் கொள்ளச் சில மாதங்கள் பிடிக்குமாதலால், "காரைக்காவில்" (காரைக்கால்) அல்லது 'திருமேலிவாஸ்' (திருமுல்லைவாயில்) நகரிலாவது, வாடகைக்கு ஒரு வீட்டைஅமர்த்திக்குக்கொண்டு, தமது வாணிகத்தைச் செய்துவரலாம் என்றும் அனுமதிக்கப்பெற்றது. காபுல்பட்டினத்திற்கும் இதைப்போன்றே ஆறுமாதகால அளவிற்கு அனுமதி வழங்கப்பெற்றுள்ளதை இங்கு நினைவிற்கொள்ளலாகும்."

"வணிக நிறுவனத்தார் இங்குக் குடியேறிய பின்னர், அவர்கள் காரைக்காலிலும், திருமுல்லை வாயிலிலும் வாணிக ஒப்பந்தங்கள் சிலவற்றைச் செய்துகொள்ள வேண்டின், அவ்வலுவலர்கள் மேற்கூறிய அதே நிபந்தனைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்."

பிரான்சுவாமர்த்தேன் நினைவுக்குறிப்புக்களினின்று இறுதியாக இரு செய்திகள், தொகுதி II, பக்கம் 570 இன்படி இங்குக் குறிக்கின்றேம். "1688 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் "கொர்தியே" என்பார் காவேரிப்பட்டினப் பிரதேசங்களைத் தாம் சென்று பார்வையிட்ட செய்திகளை நமக்கறிவித்தனர்."

பக்கம் 573. 1688 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், காவேரிப்பட்டினப் பிரதேசங்களில் இரண்டு அறைகளும்

ஒரு கிடங்கும் கட்டச் செய்யுமாறு நாம் "கொர்தியே" என்பாரிடம் கட்டளை பிறப்பித்தோம். ஹாலண்டுக்காரர்கள் முன் கூட்டித் திட்டமிட்டிருந்த அந்த வாணிகம் அப்பிரதேசங்களில் அவர்கள் நம்மை மிறிச் செல்லுமாறு தூண்டிய பிரதான காரணமாகவும் இருந்திருக்கக்கூடும்; எனவே அவர்கள் நாயக்கர் அவர்களிடமும் அவருடைய பிராம்மண ஆலோசகர்களுடனும் மீண்டும் குற்றச்சாட்டுகளைக்கொண்டு சென்றனர். சிறிது திடமென்று, செருக்குடனும் அவர்கள் செயல்படுகின்ற முறை அங்கு ஏற்றுக்கொள்ளப்பெறவில்லை. வணிக மன்றம் கட்டிக்கொள்ளுதற்கென அவர்கட்குத் திருமுல்லைவாயிலில் (திரிமினிவாஸ்) அனுமதிக்கப்பெற்றிருந்த நிலத்தையும் பறித்துக்கொண்டு அங்கிருந்தும் அவர்களை வெளியேற்றிவிட்டனர்; காரைக்காலில் நமக்குள்ளதைப் போன்றே. அதே பகிரங்கமான வாணிகத்தைத் திருமுல்லைவாயிலிலும் நடத்திவர நமக்கு அனுமதியளிக்கப்பெற்றது. தரங்கன்பாடிக்கும் நாக்ப்பட்டிணத்திற்கு மிடையில், தஞ்சைப்பிரதேசத்தில் அமைந்திருந்த மக்கட் பெருக்கமுள்ள ஒரு பெரிய நகரமாகும் அத்திருமுல்லைவாயில்; தென் பகுதிக்கு வண்ணச்சீலைகளை உற்பத்திசெய்யும் மிகப் பெரிய தொழிற்சாலையாகவும் அந்நகர் விளங்கியிருந்தநது; மிகப் பெருமளவில் அரிசியும் அங்கிருந்து கிடைத்துவந்தது"

பிரஞ்சு நாட்டவர்கள் காரையில்குடியேறி வந்திருந்தது ஆறு மாத காலமேயாகும். பிரான்சுவா மர்த்தேன் தொகுதி II, பக்கம் 44 இல் கூறுகின்றார்: 1689 ஆம் ஆண்டு ஜூன் மாதம் "செய்திகள் கரைப்பிரதேசத்தின் நெடுகிலும் பரவத்தொடங்கின. அம்மாதத் தொடக்கத்தின்போதேயே ஐரோப்பாவில் யுத்தம் தொடங்கி விட்டதென்று." ஹாலண்டுக்காரர்களின் வணிக நிறுவனங்கட்கு அப்போது தலைநகராக விளங்கியிருந்த நாகப்பட்டினம் காரைக்குப் பெரிதும் அண்மை யினதாகும். அபாயகரமான அந்தப் பகுதிகளில் யாதொருவிதமான தகராறுகளிலும் "கொர்தியே" என்பார் சம்பந்தபடத் துணியவில்லை.

1688 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து 1689 ஆம் ஆண்டு ஜூன்மாதம் வரையில் காரைக்கால் பிரஞ்சு நாட்டு மக்களின் வசம் இருந்துள்ளது என்பது உறுதியாகும்.

# புஸ்ஸி அவர்களின் கல்லறை

1879 ஆம் ஆண்டுக்கு முன்னர், புதுச்சேரியில் அனைவரும் புய்ஸி அவர்களின் கல்லறை, தன்னிலைமாறி ஆரம்பப்பள்ளியாக மாற்றப்பெற்ற "கப்புய்சேன்மார்களின் தேவாலயத்தில்" இருந்துவருவதாக நம்பிக்கொண்டிருந்தனர்.

1879 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் தேதியில் "தெலாபோன்" (Delaffon) என்பார் பிரஞ்சு நாட்டமைச்சர் அவர்கட்குத்தாம் வரைந்த ஒரு விகிதத்தில் "பிழைபட்ட வழக்காறு ஒன்றின் தொடர்பால் "புய்ஸி" அவர்களின் கல்லறை கப்புய்சேன்மார்களின் பழைய தேவாலயத்தில் இருந்து வருவதாக நம்பிக்கொண்டிருந்தனர் "என்று குறித்துள்ளார்.

இங்குப் பெரிதும் நெருங்கிய பொருளினதாக நாம் ஆராயவேண்டி நிற்பது "பிழைபட்ட வழக்காறு" என்ற தொடர்மொழியே யாகும்; ஏனெனில், அதைக்குறித்துச் சிந்தித்தால், எவ்வாறு வழக்காறு ஒன்று பிழைபட வியலும் என்பதை விளக்க வியலாதர்கும்.

சிங்காரவேலு என்பார், 1793 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் தேதியன்று புய்சி அவர்களின் திருவுடற் கூடு கல்லறையிலிருந்து மீட்கப்பெற்றதென்பதை உருசுப் படுத்தும் வாசகப் பத்திரமொன்றைக் கண்டுபிடித்தனர். ஆனால் சவப்பெட்டியினை இடம் பெயர்த்தமைத்திருப்பராயின், இத்தகைய இடப் பெயர்ச்சிகளைப் புதுச்சேரி மக்கள் தங்களது கண்களுக்குப் புறம்பாக அதனை அறியாது தவற விட்டதேயில்லை. பிரஞ்சு நாட்டுப் புரட்சிக்குப் பின்னர், புய்ஸி அவர்களின் சடலம் எங்கிருந்து கொண்டிருந்தது என்பதை அறிந்திருந்தனர், அது மறைந்து போயிற்றென்று ஒருவரேனும் கூறினாரில்லை. புய்சியவர்களின் எல்லாச் சமகாலத்தவர்களும், அதாவது 1794 ஆம் ஆண்டில் வாழ்ந்துகொண்டிருந்தவர்கள், ஆங்கிலேயர்கள் புதுவையைக் கைப்பற்றிக்கொண்டு

அங்கு வதித்திருந்தகாலேயும், எதிர்ப்புரட்சியின்போதும், அத்திருவுடற்கூட்டைப்பற்றிப் பெரிதும் அக்கரைகொண்டிருந்தனர்; ஏனெனில் அப்பெருமகனுர் 1785 ஆம் ஆண்டில் இறந்து போனுர்; அதாவது ஒன்பதாண்டுகட்கு முன்னர் மட்டுமேயாகும்; 1794, 1815, 1830 ஆகிய ஆண்டுகளில், புய்ஸி என்பார் எங்கு அடக்கம் செய்யப் பெற்றிருந்தனர் என்பதை நன்கு பெரிதும் அறிந்தேயிருந்தனர்.

இவ்வாருக 1879 ஆம் ஆண்டு வரையில் அன்னுருடைய கல்லறை கப்புய்சேன்மார்களின் தேவாலயத்தில் இருந்து வருகின்ற பொதுக்கருத்து நிலவிற்று; இவ்வழக்காறு எவ்வாறு பிழைபட்டிருக்கக்கூடும் என்பதற்கு யாதொரு விளக்கமும் கூறப்பட்டிலது.

ஆனல், வழக்காறு ஒன்றுமட்டுமே நிலவிக்கொண்டிருந்ததில்லே; உறுதியான சான்ருென்றும் இருந்துளது; "புர்குவேன்" (Bourgoin) என்பார் அப்பழமையான தேவாலயத்தில், அஃது ஆரம்பப்பள்ளியாக மாற்றப் பெறுதற்கு முன்னர், 1787 ஆம் ஆண்டின்போது இருந்திருக்க வேண்டிய அழகிய கல்லறைக்கட்டிடம் அமைந்திருந்தவிடத்தில், பூசனைகள் நடைபெறும் இடத்தை அடுத்து, புய்ஸி அவர்களின் கல்லறைக் குறிப்புக்களைக் கொண்டிருந்த கல்வெட்டொன்றினைக் கண்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.

1: அதுவரையில் விவாதத்திற்குள்ளாகாதிருந்த வழக்காறு ஒன்றையும், 2: ஆட்சேபனையற்ற சான்று ஒன்றையும் 1879 ஆம் ஆண்டில் படிப்படியாகத் திரித்துப் பேசுகின்ற நிலே எழுந்தது விநோதமாகத்தான் காணப்படுகின்றது.

"புய்ஸியும் பிரஞ்சிந்தியாவும்" என்ற நூலில், பக்கம் 435 இல் "மர்த்திஞே" என்பார் கூறுவதாவது ; "அச்சமயத்தில் செய்யப்பெற்ற யாவும் பெரிதும் அலட்சிய நோக்குடனேயே நிறைவேற்றப்பெற்றனவாகக் காண்கின்றன". 1879 ஆம் ஆண்டில் இடுகாட்டிலிருந்த கல்லறையைத் திறந்து, காணக்கூடுமானவைகளேப் பற்றிச் சோதனை செய்திருக்கவேண்டும். அவ்வாறு

சோதனை செய்யாமலேயே, தேவாலயத்திற்குப் பக்கத்திலிருந்த இடுகாட்டில் அமைந்திருந்த அநாமதேயக் கல்லறையொன்றை அதன்கண் சவப்பெட்டி உளதா, இலதா என்றும் அறிந்துகொள்ளாமல், எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

1918 ஆம் ஆண்டு மே மாதத்தின்போது 'மர்த்திஞே'' என்பார் இடுகாட்டிலிருந்த அக்கல்லறையினைத் திறக்கச்செய்து காணுங்கால் அது வெற்றாகக் காணப்பட்டது.

இவ்விவாதம் இத்துடன் முடிவுறுகின்றது. 1879 ஆம் ஆண்டில் உத்தேசமாகக் கூறப்பெற்று வந்த ''புய்ஸி'' என்பாரின் இடுகாட்டிலிருந்த கல்லறையைப்பற்றிய வதந்தி முற்றிலும் கற்பனையேயாகும்.

இவ்வாருகப் ''புஸ்ஸி'' என்பாரின் அஸ்திகள் கப்புய்ஸேன்மார்களின் பழமையான தேவாலயத்தில் இருக்கலாம் என்ற வழக்காறு தவருனதல்ல என்று ஏற்படுகின்றது. அவ்வழக்காறு சரித்திர ஆதார ஏடுகள் பலவற்றினுல் உறுதியாகின்றது.

1787 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29 ஆம் தேதியன்று புய்ஸி என்பாரின் தகுதிக்கேற்ற இடம் கப்புய்சேன்மார்களின் தேவாலயமே என்பதை முறையானதென்று வகுத்துக்கொண்டனர்; அன்றைய தினம் அங்குத்தான் அவர் உடல் நல்லடக்கம் செய்யப்பெற்றது என்று தீர்மானமாகக் கருதினர். குறைந்தபக்ஷம் இக்கருத்து அக்காலத்தில் நிலவியிருந்தது. 1793 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் தேதி புரட்சிக்காரர்கள் அத்தேவாலயத்தினின்று அச்சவப்பெட்டியை வெளியேற்றிவிட்டனர். ஆகஸ்ட் மாதம் 23 ஆம் தேதியன்று ஆங்கிலேயர்கள் புதுச்சேரிக்குள் நுழைந்தனர்; எதிர்ப்புரட்சி தொடங்கிக் கொண்டிருந்தது; எப்பொழுதெனில் புய்ஸி அவர்களின் சவப்பெட்டி தேவாலயத்தினின்றும் வெளியேற்றப்பட்டு நான்கு மாதங்கள் கடந்த பின்னரேயாம்.

''மர்த்திஞே'' என்பார் அழைப்பதாகின்ற பிராயச்சித்தச் சடங்கு'' ஒன்று நிச்சயமாக நிகழ்த்தப் பெற்றுள்ளது; அது அத்தேவாலயத்தின் சவநிலவறையில் புய்ஸியவர்களின் சவப் பெட்டகத்தை மீண்டும் பழமை

போல் வைத்துவிடுவதேயாகவன்றி மற்றென்றுக இருந்தற்கில்லை; சவ அடக்கத்தின் பின் எழுப்பியிருந்த மாளிகை அழிக்கப்பட்டுவிட்டதாகலின். கல்வெட்டொன்றை, முன்னர் "புர்குவேன்" (Bourgoin) என்பார் தாம் பார்த்திருப்பதாகக் கூறியிருப்பதை, அதற்குப் பதிலாக அங்கு அமைத்துவிடுவது என்பதாகவும் அச்சடங்கு நிகழ்ந்துளது; எனவே முறைமைப்படிக்கும், உண்மையாகவும் புய்ஸி அவர்களின் சவப்பெட்டி வழக்காறு குறிப்பிடுகின்றதும், 'புர்குவேன்' என்பார் அதன் கல்வெட்டைக் கண்டிருப்பதுமாகிய அவ்விடத்தேயே தான் இருக்கவேண்டும். அப்பெருமகனுரின் இடம், மற்றும் இயல்பான இடம் அத்தேவாலயமேயாகும்; இடுகாடாகாது.

மிகப்பெரும்பாலும் இன்றுகூட அவர் அங்கேயேதான் இருந்து வருகின்றுர்; எனெனில் அதைப்பற்றி நாம் ஐயுறுதற்கு யாதொரு காரணமும் உண்மையில் இல்லை.

பழைய ஆவணங்களைப் பொருத்தமட்டில், 1793 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் தேதி முதற்கொண்டு, வரலாறு புய்சி அவர்களின் சவப் பெட்டகத்தின் சுவட்டினை இழந்துவிட்டதாகவே காண்கின்றது. சவப்பெட்டகத்தின் உண்மை நிலையினைப் பொருத்தமட்டில் அதனேடு எழுத்துவடிவம் பெற்றுள்ள ஆதாரங்களைப் பொருத்திக் குழப்பிக்கொண்டிருத்தலாகாது. புரட்சியின்போதோ அல்லது அதற்குப் பின்னரோ அப்பெட்டகம் தவறிப்போகவில்லை. அஃது எங்கே இருந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிந்துகொண்டுதானுள்ளனர். அதனை எவரும் மறந்தாரில்லை. புய்சி அவர்களின் சமகாலத்தவர்கள், குறிப்பாக மர்த்தினே என்பார் தமது நூலின் 441 ஆம் பக்கத்தில் கூறுகின்ற "லக்ரெனி" (Lagrenee) குடும்பத்தினர் மற்றும் "ஷேர்மோன்", "ப்ளேன் தெ க்ரென்கூர்" "பொஸ்ஸே" "க்ளாபெர்னேன்" ஆகியோரின் குடும்பத்தினர்களும் சவப்பெட்டகத்தின் ஸ்தூலச் சுவட்டினையும் அப்பெருமகனுரின் நினைவுகளையும், வந்தித்தற்குரிய அவருடைய அஸ்திகளையும் ஒரு பொழுதும் தவறவிட்டார்களில்லை. 1800 ஆம் ஆண்டில் "புய்சி" எங்கு இளைப்பாறிக்கொண்டிருக்கின்றுர், என்பதை அவர்கள் வெகு நன்கறிந்திருந்தனர். பின்னர் 1815, 1830, 1850 ஆகிய ஆண்டுகளிலும் மக்கள் செம்மையாக அவ்விடத்தை அறிந்தே

யிருந்தனர். 1879 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்த புதுவை வாழ்மக்கள் அனைவரும் அவருடைய திருவுடல் கப்புய்சேன்மார்களின் தேவாலயத்தில் இருந்து வருவதை ஏற்றுக்கொண்டுள்ளனர். அதனை ஐயுறுதற்கான யாதாகிலும் முகாந்திரங்கள் சில தம்மிடமிருந்தால் மட்டுமே அல்லாது நாமும் ஐயுறக்கூடவில்லை; அத்தகைய முகாந்திரம் ஒன்றுகூட நம்மிடமில்லை; அனைத்தும் பெரிதும் தெளிவாகவும் மிகச்சாதாரணமாகவும் உள்ளன. தற்போது ''சுய்ர்க்கூப்'' (Surcouf) வீதி ஆரம்பப் பாடசாலையாக விளங்குகின்ற பழைய கப்புய்சேன்மார்களின் தேவாலயத்தில், பூசனை நிகழும் இடத்திற்கு அண்மையில், (epitre) பக்கமாக, அதாவது பலிபீடத்தை நோக்கியவாறு வலப்புறத்தில் பெரும்பாலும் மேற்குப் பக்கத்திலுள்ள இரு பலகணிகளுக்கிடையில் என்று போதிய அளவு நாம் எல்லையினை மிகச்சுலபமாக வகுத்துக் கொள்ளக்கூடிய அவ்விடத்தில் ''புய்சி'' அவர்கள் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கின்றார்கள் என்று நிச்சயமாகக் கூறுகின்றோம். ஒரு பெருந்தலைவற்குரிய தகுதியும் கண்ணியமும் வாய்ந்தவிடம் அதுவேயாகும்.

அங்கு நிச்சயமாக இருக்கின்ற பாதாளச் சவக்கிடங்கினைக் கண்டுபிடித்தற்குச் சிறிது ஆழமாகவே அவ்விடத்தில் அகழ்ந்து ஆராய்தல் போதியதாகும். அப்பாதாள அறையில் மிகப்பெரும்பாலும் இருக்கின்ற ''புய்ஸி'' அவர்களின் சவப் பெட்டகத்தினைக் காணலாம். எவ்வாறெனில் அவருடைய இயல்பான அவ்விடம் வழக்காற்றினால் உறுதிசெய்யப் பெற்றுள்ளதல்லவா?

அதனைக் கண்டுபிடித்தல் முக்கியமானதாகும்; தக்காணக் காவியத்தின் கதாநாயகற்கு, குடிமக்கள் பெருங்கூட்டம் வந்து வேண்டிக்கொள்ளுகின்ற உரிமை, அவரது சவப் பெட்டகத்திற்கும் அளிக்கப்படல்வேண்டும்.

# புதுச்சேரி கடற்பிரதேசத்தில் நிகழ்ந்த புதுமை

செயிண்ட்-பிரான்சுவா சேவியர் நாகப்பட்டினத்திலிருந்து 1545 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி கடிதம் ஒன்றை எழுதியிருந்தனர். "மேலேப்பூர்" (மைலாப்பூர்) சாந்தோமிலிருந்து மே மாதம் 8 ஆம் தேதி மற்றொரு கடிதம் எழுதியிருந்தனர். புதுச்சேரி அவ்விரு நகரங்களின் கடற்பாட்டைக்கும் இடையில் காணப்படுவதால் அப்பெரிய அர்ச்சிய சிஷ்டரவர்கள் நமது புதுச்சேரி நகரத்தைத் தமது மதக்கொள்கை (சேசுபிரானின் பெயரை யோதி மந்திரித்தல்)ப்படி வாழ்த்தியுள்ளனரா என்று நம்மை நாமே வினவிக்கொள்ளுகின்ற கடமை நமக்கிருக்கின்றது.

இக்காரணத்தாலேயே நாம் இப்பொழுது மேற்கொள்ளப்புகும் ஆராய்ச்சி முக்கியமானதாகும். இதுவரை, செயிண்ட்-பிரான்சுவா சேவியர் அவர்களின், 1545 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதியிலிருந்து மே மாதம் 7 ஆம் தேதி வரையின் மாத்திரம் அறிந்துகொள்ள வேண்டிய வரலாறு மன நிறைவுண்டாகும்வண்ணம் பேசப்பெற்றிலது.

"ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதிக்கு முன்பாக நாகப்பட்டினத்தைவிட்டுப் புறப்படவேண்டுமென்ற எண்ணம் முற்றும் அர்ச்-பிரான்சுவா-சேவியரடிகட்கு இல்லை" என நாம் முதற்கண் உறுதியாகக் கூறலாம். ஏப்ரல் 7 ஆம் தேதிய கடிதம் முற்றிலும் தெளிவாய்க்காணப்படுகின்றது. அதில் பின்வருமாறு வாசிக்க இயல்கின்றது: "யாழ்ப்பாணப்பட்டின வியவகாரம் எங்குச் சென்று முடியுமென என்னால் அறியக்கூடவில்லை; அதன் காரணமாகவே, நான் மலாக்காவுக்குச் செல்வதா அல்லது இங்கேயே தங்கிவிடுவதா என்பதைப்பற்றி இன்னும் தீர்

மானிக்கவில்லை. மே மாதத்தின்போது இதைப்பற்றி ஒரு முடிவு செய்ய இயலுமென யான் நம்புகின்றேன்.''

தந்தை ப்ரு எஸ். ஜெ. என்பாரின் அபிப்பிராயத்தை மேற்கூறியவதனால் நாம் பகிர்ந்துகொள்வதற்கில்லை. அன்னவர் தமது நூலின் தொகுதி I, பக்கம் 324 இல், மார்ச் மாதத்தில் முதற் புறப்பாடு ஒன்று இருந்ததாக அநுமானிக்கின்றார். யாழ்ப்பாண வியவகாரம் பற்றிய முடிவுக்காக அர்ச். பிரான்சுவா அடிகள் நாகப்பட்டினத்திலேயே காத்திருந்தனர் என்பது நிச்சயம்; ஏப்ரல் 7 ஆம் தேதிக்குப் பின்னரேயே அவ்வியவகாரம் தோல்வியுற்றதென்பதை அவர் அறியக்கூடுமாயிற்று. அத்தோல்வியே அவர் நாகையினின்று புறப்பட அவரைக் கட்டாயப்படுத்திற்று; ஏன் எனில் அங்கு அவர் இருந்து செய்ய வேண்டியது ஒன்றுமில்லையாதலினால் எனலாம்.

தமது மே 8 ஆம் தேதிய கடிதத்தில் அவர் எழுதியிருப்பதாவது: ''நான் சில நாட்கள் நாகையிலிருந்தேன்; பருவகாலம் காரணமாகக் கன்னியாகுமரிமுனைக்குத் திரும்பிச் செல்ல என்னால்கூடவில்லை; நான் திரும்பவும் சாந்தோமுக்கு வரவேண்டியதாயிற்று.''

தமது ஏப்ரல் 7 ஆம் தேதிய கடிதத்திலேயே ஆண்டவரவர்கள் குறிப்பிட்டிருந்த ''மலாக்கா'' பிரயாணத்திற்கு வேண்டியவற்றைச் சித்தப்படுத்திக்கொள்ளும் நிமித்தமாகவே சாந்தோமுக்கு வரவேண்டிய முகாந்திரம் நேரிட்டிருக்கலாம் அன்னாருக்கு என நாம் பெரும்பாலும் கொள்ளலாம். இந்தியாவிலிருந்து மலாக்காவுக்கு ஏப்ரல் மாதம் தொடங்கி ஆகஸ்டு மாதம் வரை நாவாய்களில் பிரயாணம் செய்ய இயலாது; காரணம் காற்று அம் மாதங்களில் மாறுபட்டு வீசிக்கொண்டிருக்கும். மே 8 ஆம் தேதிய கடிதத்தில் ஆண்டவர் எழுதியிருப்பதாவது: ''ஆகஸ்டு மாதக் கடைசியில் மலாக்காவிற்குப் புறப்படலாம் என்று நம்பிக்கொண்டிருக்கிறேன். அங்குச் சேர வேண்டிய நாவாய்கள் பருவக்காற்றை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருக்கின்றன''. ஆகஸ்டு மாதக் கடைசி நாட்களை எதிர்நோக்கியே அர்ச். பிரான்சுவா-சேவியர் சாந்தோமிற்கு வந்து சேர்ந்தனர் எனலாம். ஏப்ரல் மாதத்தில் பருவக்காற்று தெற்கிலிருந்து மேற்கு நோக்கி

வீசிக்கொண்டிருக்குமாதலின், நாவாய்கள் நாகையிலிருந்து குமரிமுனைக்குச் செல்ல இயலாதாகலின், அவை நாகையிலிருந்து சாந்தோமை வந்து அடைகின்றன; ஆனால் ஆகஸ்ட் கடைசியில் வடக்குப் பருவக்காற்றின் காரணமாக, அப்பருவத் தொடக்கத்தில், அதன் முதன் நாட்களிலேயே நாவாய்கள் சாந்தோமிலிருந்து மலாக்காவிற்குப் புறப்பட்டுச் செல்கின்றன.

இவ்வாறாக, நாகையிலிருக்கவேண்டிய அவசியம் இன்மையினாலேயே, அர்ச்-பிரான்சுவா ஆண்டவர், சாந்தோமிற்கே செல்லக்கூடுமாயிற்று; மலாக்காவிற்குச் செல்லவேண்டிய தமது திட்டத்திற்குப் பெரிதும் ஏற்ற துறைமுகம் அக்காலத்தில் அஃதொன்றேயாகும்.

தாம் தங்கியிருக்கவேண்டிய இடத்தை அக்காலை வீசிய காற்றின் திசை நோக்கமே அறுதியிட்டதனால் நாவாயின் மூலமாகவே ஆண்டவரவர்கள் நாகையிலிருந்து சாந்தோமை வந்தடைந்தனர் எனக்கருதுவது இயல்பேயாகும்.

பம்பாய் வரலாற்றுக் கழகத்தின் இதழ், தொகுதி III, எண் 1, பக்கம் 84 இல், 1930 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், பெயர் குறிப்பிடப்பெறாத கட்டுரையாளர் ஒருவர் (அவர் பெரும்பாலும் வந்தித்தற்குரிய தந்தை "ஹீராஜ்" எஸ். ஜெ. ஆகலாம்) பின்வருமாறு எழுதியுள்ளனர்: "வரலாற்று மாலிகைகள்" என்ற நூல், பக்கம் 392 இல் 1545 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் தேதியில் அர்ச்-பிரான்சுவா-சேவியர் அவர்கள் எழுதிய கடிதம்" என்று குறிப்பிட்டுப் பின்வரும் லாட்டீன் வாக்கியத்தை வரைந்துள்ளனர்.— "Ex itinere ad oppidum S. Thomae appuli ce consilie et inde Malacam pergerem" இவ்வாக்கியத்திலுள்ள "appuli" என்ற வினை, கடல் மார்க்கமாக ஆண்டவரவர்கள் மைலாப்பூருக்குச் சென்றனர் என்பதை உண்மையிலேயே குறிப்பிடுகின்றது. "appelle, appuli, appulsum" எனுமிச்சொற்கள் "ஒரு நாட்டின் யாதாவதொரு கரைப்பகுதிக்கு ஒரு நாவாயைக்கொண்டு அல்லது ஓட்டிச் செல்லுதல்" என்னும் பொருள் பயப்பனவாகும். (ஆண்ட்ருஸ், லாட்டீன், இங்கிலீஷ் அகராதி காண்க).

ஆண்டவரவர்கள் மே மாதம் 8 ஆம் தேதிக்கு முன்பாகவே நர்கையைவிட்டு, மயிலே சாந்தோமுக்குச் சென்றுள்ளார் என்பது நிச்சயமாகத் தெரிகின்றது.

அரிய சோதரர் "பொஷ்ஏவ்" என்பார், அப்பிரயாணம் பற்றிய விவரணங்களைத் தரும் பகுதியொன்றை அன்புகூர்ந்து எனக்குச் சுட்டினார்கள், (A. Brow. St. F. X. Vol. I. Page 324) 1556 ஆம் ஆண்டு வழக்கின் போது அதாவது இந்நிகழ்ச்சிக்குப் பத்தாண்டுகட்குப் பின்னர் Diege Madeira (Process 1556, கோவா. எண் 27, M. Xav II பக்கம் 858) வெளியிட்டிருப்பதாவது :

"ஞாயிறு (Passion) நாளன்று மதிய உணவிற்குப்பின்னர், நாகையிலிருந்து மிஷேல் பெரெரா என்ற நாவாயில் சாந்தோமிற்குப் புறப்பட்டேன். மறுநாளிரவின் போது காற்று திசைமாறி வீசியதால், நாவாய் நிறுத்தப் படவேண்டியதாயிற்று. அப்போது நாங்கள் நாகைக்கு 66.660 கிலோ மீட்டர் தொலைவில் இருந்தோம். அடுத்த சனிக்கிழமை வரையில், பாய்கள் உயர்த்தியிருந்த அந்நாவாயிலேயே இருக்கவேண்டியவர்களானோம். புறப்பட்ட ஞாயிறுமுதற் மீண்டும் கப்பற் பாய்களை விரித்துக்கட்டிக் கொண்டு புறப்பட்ட சனிக்கிழமை இரவு வரையில் புனித தந்தை பிரான்சுவா அவர்கள் கண்டிப்பாக யாதொன்றையுமே உண்ணவில்லை. இதனை நான் நன்கறிவேன். எவ்வாறெனில், யானிருந்த கப்பலறையிலேயே புனிதத் தந்தையாரும் உடன் இருந்துவந்தனர். பன்முறை அவரிடம் "ஏதாகிலும் சாப்பிட விரும்புகின்றனரா" என்று கேட்டுக்கொண்டேயிருந்தேன். கஞ்சியாவது குறைந்த பட்சம் அவருக்களிக்கலாமென்று, ஒருகோழியை அறுத்து அதைக்கொண்டு யானே அத்தகைய உணவை தயாரிப்பதாகவும் அவரிடம் கூறினேன். அப்பணியில் யான் ஈடுபடுவதை அவர் மறுத்துவிட்டார். யான் தயாரித்துக் கொடுத்த வெந்நீருடன், ஒரு வெங்காயம் மட்டிலும் உண்ண அவர் ஏற்றுக்கொண்டார். பிறிதொன்றையும் அவர் உண்ணவேயில்லை. இஃது எனக்குப்பெரு வியப்பினை விளைவித்தது; ஏனெனில் பன்னாட்களாக அவர் பட்டினியாக இருந்து வந்தார் என்பதை யான் நேரிற் கண்டுள்ளேன். எம்முடன் படுத்துறங்கும் எனது வேலைக்காரனிடமும், அங்கிருந்துவந்த எட்டு வயதிருக்கக் கூடுமான ஒரு சிறுமியிடமும் யான் விசாரிக்கலுற்றேன்.

புனிதத் தந்தையார் கண்டிப்பாகவொன்றும் புசித்திலர், என அறிந்தேன்.

இந்நிலையில் மீண்டும் நாவாய் பிரயாணம் தொடங்கிற்று; நாவாய் நடுக்கடலைச் சென்று சேர்ந்தது. புனிதத் தந்தையார் பிரான்சுவா அவர்கள், "நாவாய் வலுவுடையதாக உள்ளது" என்பதையறிந்துகொள்ள விரும்பிக் கேட்டனர். அது மிகவும் தேய்ந்து பழமையுற்றிருப்பதாக யான் அவருக்குக் கூறினேன்; அப்படியானால் நாம் பின்னிட்டுப் புறப்பட்டவிடத்திற்கே சென்று விடுவோமே" என்றனர். அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து, கப்பல் அதிகாரிகள் முன்னேக்கிச் செல்ல முடிவு செய்தனர். ஆனால் திடீரென்று ஒரு கடும் புயற்காற்று எழுந்ததால், வெகு விரைவில் நாங்கள் மீண்டும் துறைமுகத்தைச் சென்றடைய வேண்டியவர்களானோம். இச் சம்பவம் பெரிதும் வியக்கத்தக்கவொன்றென யான் குறிப்பிட்டேன்; புயல் விசத்தொடங்கும் முன்னதாகவே வந்த வழியே திரும்பிச் செல்வது அவசியம் என்று புனிதத் தந்தையார் அப்போது அறிவுறுத்தியது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்."

இப்புதுமை எங்கு நிகழ்ந்தது? நாவாய் எந்தத் துறைமுகத்தில் சென்று ஒதுங்க வேண்டியதாயிற்று?

நாகைக்கு 66.660 கிலோ மீட்டர் தொலைவில் அக்காலை நாங்கள் புதுச்சேரி கடற்புறத்தில் நாவாயில் இருந்தோமாதலின், கடற் சூருவளி வீசுங்கால் நாவாய்களுக்குப் பாதுகாப்பிடமாக அக்காலை அமைந்திருந்தது புதுச்சேரியாறு, ஆதலினாலும், மேலும் அக்கரைப் பிரதேசத்தில் இத்தகைய வசதியளித்து வந்தவிடம் அஃதொன்றேயாதலின், மேலும் அவ்வாற்றின் நீர் பெருக்கு, மழைகளினாலன்றி, ஊற்றுக்களினாலேயே பெருகுவதாதலினாலும், இங்கு யாம் குறிப்பிட்டு விளக்குவது, பெரும்பாலும் புதுச்சேரித் துறைமுகமேயாகலாம். துறைமுகத்தின் பெயர் அங்குக் குறிப்பிடப்பெற்றில்லையாதலின் அதனை நிச்சயப்படுத்தவும் எம்மாற்கூடவில்லை. ஆயினும் நாட்டு வழக்காற்றின்படி, "சவேரியார்ச்சேரி" என்ற கிராமத்தைப் புனித பிரான்சுவா-சேவியர் அவர்கள் தமது சேசு மதக்கொள்கைப்படி வாழ்த்தி ஆசிர்வதித்துள்ளனர் என்று அறியக்கிடக்கின்றது,

1699 ஆம் ஆண்டளவில் "என். தெ. தெபேர்" என்பார் தம் தேசப்படத்தில், குறிப்பிட்ட அவ்விடத்தில் பாட்டையொன்று காணப்படுகின்றது; அதற்கு மேற்புறத்தில் "கூடலூர் பாட்டை" என்னும் சொற்கள் வரையப்பெற்றுக் காண்கின்றன. மற்றும் மாளிகை வடிவிலுள்ளதான படம் ஒன்று "கோயில்" என்றும் குறிக்கப்பெற்றுக் காணப்படுகின்றது. முற்காலத்தில் அங்கு ஒரு கிராமம் இருந்திருக்கலாம் என்பது உறுதியாகின்றது. "அக்கோயில்" ஒரு மாதாக்கோயில் ஆகவும் இருந்திருக்கக்கூடும்; ஏனைய தேச படங்களில் அஃதொரு தேவாலயமாகவே காண்கின்றது. சவேரியார்ச்சேரி வாசிகள் இவ்வழக்காற்றின் மீது நம்பிக்கை கொள்வதற்குக் காரணங்களோ அல்லது முகாந்திரங்களோ இல்லாமல் இல்லை.

[illegible] நமக்குப் புனித பிரான்சுவா சேவியர் அவர்களின் வாழ்க்கையினைச் சார்ந்த அக்காலத்தைப்பற்றிய சில தவருன கருத்துக்களைக்களைந்து செம்மைப்படுத்துதலே பிரதானமாகும். புதுவைக்கண்மையிலுள்ள கடலின் கண்ணேயே " புயற்காற்றின் முன்னறிவு " என்ற புதுமை நிகழ்ந்துள்ளது என்பதை அறிந்துகொள்ளுதலே நமக்குப் பெரிதும் முக்கியமானவொன்ருகும்.

# புதுச்சேரியின் புதுமையான உடன்படிக்கை

1710 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், கூடலூரை வசப்படுத்திக்கொண்டிருந்த ஆங்கிலேயர்கள், சாருப்சிங் என்னும் பெயரியரும், செஞ்சி அரசரும், மேற்கூறிய கூடலூர் நாட்டின் மன்னருமாக விளங்கியவருடன் ஒருமைப்பாடுகொள்ளாதிருந்தனர். அதிக முக்கியத்துவ மற்றதாகத் தோன்றிய ஒரு பிரச்சினையிற்ருன் அவர்கள் அவ்வாறு நடந்துகொண்டனர். 1730 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தின்போது, வரையறுக்கப் பெற்ற எல்லைகளைக் கடந்து பிரவேசித்த Hugenin என்னும் பெயருடைய கேப்டன் ஒருவரும், Reay என்னும் பெயருடைய கொடியேந்தி ஒருவரும், பிடிக்கப் பெற்றுக் கைதிகளாகச் செஞ்சிக்குக் கொண்டுசெல்லப் பெற்றனர்.

ஒரு வருடத்திற்குப் பிறகும், சமாதானமாக இச்சம் பவத்தினை முடித்துக்கொள்ளவேண்டிச் செய்த ஏற் பாடுகள் பயன்படாமற்போனமையால், அவ்வதிகாரிகள் கைதிகளாகவே இருந்துவந்தனர். மேலும், வழுதாவூா அரசரும் மிகப் பெரிய துணிவுள்ளவருமான "மாஹுத் கான்" என்பார் (பின்னல் தேசிங்கு ராஜாவின் நண்பராக விளங்கியிருந்து, அவருடன் வீரமரணம் எய்த நேர்ந்தவர் இவரேயாகும்). ஆங்கிலேயர்கள், மனக்கவலை கொள்ளும் படிக்குக் கூடலூர்க்குப் பெரிதும் அண்மையில் பாடி விடமைத்துக்கொண்டு தங்கியிருந்தனர்.

மற்றும், 1711 ஆம் ஆண்டு ஜுலை மாதத் தொடக்கத் தில், பழமையான காலக் குறிப்பின்படி, மிகச் சரியாக ஜுன் மாதம் 25 ஆம் தேதியன்று ("Diary Consultation book") என்ற 1711 ஆம் ஆண்டின் நாள்காட்டிப் புத்தகம்,

பக்கம் 143 இன்படி, செயிண்ட் - டேவிட் கோட்டையின் ஆளுநர், அந்தப்போரில் ஆங்கிலப் படைகட்குத் தலைமை தாங்கி, அவற்றை நடாத்திக்கொண்டிருந்த "கேப்டன்" தளகர்த்தன் ரீச் (Reach) என்பாரிடம், மாஹறூத் கானுக்குச் சொந்தமானதும், செஞ்சித் தாலுக்காவினைச் சேர்ந்ததுமான ஏம்பலத்தின்மீது படையெடுத்துச் செல்லுமாறு கட்டளையிட்டனர். ஏம்பலத்தை பாதுகாத்தற்கு மாஹறூத்கான் வழுதாவூரைவிட்டுச் சென்றனர்; எனினும் ஆங்கிலேயர்கள் அவ்வூரை நெருப்பிட்டுக் கொளுத்தியதை அவரால் தடுக்கக்கூடாமற் போயிற்று. (1711ஆம் ஆண்டில் செயிண்ட் - ஜார்ஜ் கோட்டைக்கு எழுதிய கடிதம் பக்கம் 123) அப்போதுதான், இராணுவத்தின் பிரதம சேனாதிபதியாகிய "சாமந்த் ராவ்" என்பார், செஞ்சியிலிருந்து புறப்பட்டுச்சென்று, வழுதாவூரையடைந்தனர்; அங்கிருந்து, 1711ஆம் ஆண்டு ஜூன் மாதக்கடைசியில், புதுச்சேரி ஆளுநராக விளங்கியிருந்த ("Hebert")ஹெபேர் என்பாருக்கு, ஆங்கிலேயர்களோடு போரிடத் தம்முடன் இணைந்துகொள்ளவாவது, அல்லது நடுநிலையாளராக அமைந்து செயற்படவாவது வேண்டுமென்று கோரிக் கடிதம் ஒன்று வரைந்திருந்தனர். (அதே புத்தகம்)

1711ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தொடக்கத்தில், செயிண்ட் - டேவிட் கோட்டையின் ஆளுநராகிய ஆங்கிலேயர், புதுச்சேரியின் ஆளுநரிடமிருந்து லிகிதமொன்று வரப்பெற்றுர். (அதே புத்தகம் பக்கம் 68).

எனினும் பகைமை வளர்ந்துகொண்டேயிருந்தது; 1711ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதக்கடைசியில் மாஹறூத்கான், செஞ்சியின் அனைத்துப் படைபலங்களைக்கொண்டு அவர்களுடைய எல்லைகளுக்கருகில் ஆங்கிலேயர்களைத் தாக்கிக்கொண்டிருந்தார். சோமேர் வீல் (Somerville) கொடி தாங்கிக்கொண்டிருந்த படைவீரன், ஓடியொளிந்தனன்; அவனுடைய கோழைத்தனம் பெருந்துன்பங்களை வருவித்துச்சேதமுண்டாக்கிற்று. அவனும் அவனுடன் ஒரு பெரும் எண்ணிக்கையில் ஆங்கிலேயர்களும், அவர்களுடைய படைத்தலைவனாகிய மிக்க துணிவுடைய "காவெண்ட்ரி" (Coventry) என்பானும் அப்போரில் கொல்லப்பட்டனர். (1711ஆம் ஆண்டின் "Diary Consultation Book" என்ற புத்தகத்தில், பக்கம் 105).

1711ஆம் ஆண்டு ஆகஸ்டுமாதத்திய, புதுச்சேரி ஆளுநரின் ஏற்பாட்டிற்கு உடனடியாகத் தொடர்பு ஒன்றும்

நேரிட்டிலது. ஆனால், எட்டு மாதங்களுக்குப்பிறகு, 1712ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின்போது, செஞ்சியரசர் "சாருப் சிங்" அவர்களும் புதுச்சேரி ஆளுநரும் அவரது நண்பருமாகிய "ஹெபேர்" (Hebert) என்பாரும், இரண்டு வருடங்களாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் இப்போரினால் போதிய அளவு சோர்வுற்றிருக்கும் ஆங்கிலேயர்கள் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ள ஏற்றுக்கொள்வார்கள் என்று தீர்மானித்தனர். "ஹெபேர்" (Hebert) என்பாரின் கடிதமொன்றுக்குத் தங்களுடைய தூதுவர் ஒருவரைப் புதுச்சேரிக்கு அனுப்பிவைப்பதாக ஆங்கிலேயர்கள் பதிலளித்தனர். (1712ஆம் ஆண்டின் (Diary Consultation Book என்ற புத்தகத்தில் பக்கம் 42உம் 43உம்). "பெர்னுட் பினியான்" (Bernard Benyon) என்பாருக்கு அதுகுறித்து ஆலோசனைகள் தரப்பெற்றன. (1712 மார்ச்-22 பழையமுறை-புத்தகத்தில் 1711; பக்கம் 51,] ஓர் ஒப்பந்தம் ஏற்படுவதற்குமுன் உடன்படிக்கையேற்பாடுகள் மிகவும் கடினமாய்க் காணப்பட்டன. [ஷி பக்கம் 76உம் 77உம்.]

செயிண்ட்-டேவிட் கோட்டையின் 1712ஆம் ஆண்டின் ஆலோசனைகள் என்று வழங்கும் நூல், பக்கம் 30இல் "ஹெர்பேர்" [Herbert] அவர்களால் 1712ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் தேதியிட்டெழுதப்பெற்றுள்ள சமாதான உடன்படிக்கையின் வாசகம் "பிரஞ்சு" [French] மொழியில் காணப்பெறுகிறது.

முதல் அமைப்பு [எண். 1] ஒன்றின்படி, ஆங்கிலேயர்கள் யாதொரு பகுதித்தொகையும் செலுத்தாமல் கூடலூரில் தங்கியிருக்கலாம் என்று செஞ்சி அரசர் அனுமதித்துள்ளார்; இவ்வுடன்படிக்கை தலையான முக்கியத்துவம் பொருந்திய வொன்ருகும்; எவ்வாறெனில், அப்பிரதேச அரசர் சம்பந்தப்பட்டமட்டில் கூடலூர் பிரதேசத்தின் நிலையினை முடிவாக நிலைப்பிக்கின்றதல்லவா.?

ஆங்கிலேயர்கள் அரசர்க்குப் பதினோராயிரம் பகோடாக்களும், இத்தொகையல்லாமல், செஞ்சிப் படைத்தலைவரவர்கட்கு ஆயிரம் பகோடாக்களும், மாஹமத்கான் அவர்கட்கும் ஏனைய தளகர்த்தர்களுக்குமாக ஆயிரம் பகோடாக்களும் கொடுக்கக் கடமைப்பட்டிருந்தனர்.

எழுத்து ஆதாரப்படி இக்கடப்பாடு குறிக்கப்பெறவில்லை யெனினும் புதுச்சேரி துபாஷ் (துவிபாஷி) ஆக விளங்கியிருந்த நானியப்பா [நைனியப்பா] அவர்கள்,

தாம் நடுவராகவமைந்து இந்நன்கொடைத் தொகைகளை வழங்குவதில் உதவினர் என்பதில் அன்னார் தம்பெயர் மறவாமல் குறிக்கப்பெற்றுள்ளது என்ற செய்தியை நாம் இங்குக் குறிப்பிடுகின்றோம்.

பழமை முறைக்கியைந்த மேமாதம் 23ஆம் தேதிக்குச் சரியான 1711ஆம் ஆண்டு ஜூன்மாதம் 2ஆம் தேதியன்று இரண்டாண்டுக்காலம் சிறையில் கழித்தவர்களான ஆங்கிலேயக் கைதிகள் செஞ்சியிலிருந்து புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தனர்.

1712ஆம் ஆண்டு ஜூன்மாதம் 6ஆம் தேதியன்று இவ்வொப்பந்த ஏற்பாட்டினை முன்னின்று அமைத்துக் கொடுத்த புதுச்சேரி ஆளுநர் ஹெபேர் [Hebert] எழுதிய கடிதமொன்று "1712ஆம்ஆண்டிற்கான செயிண்ட்-ஜார்ஜ் கோட்டைக் கடிதங்கள்" என்னும் நூலின் 95ஆம் பக்கத்தில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. அக்கடிதத்தில் செஞ்சிப் படைத் தலைவரும், அன்னாருடன் மதிப்புமிக்க அரசர் மாஹமூத்கானும், புதுச்சேரிக்குவந்து, முடிவாகத்தாங்கள் கையொப்பமிடவும், மற்றும் இரகசியமாகத் தங்களுடைய நன்கொடைத் தொகைகளைப் பெற்றுக்கொள்ளவும் ஆக வருகைதந்ததைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

பழையமுறைக்கியைந்த சூன்மாதன் 13ஆம் தேதியன்று, மேற்குறித்த "செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் 1712ஆம் ஆண்டிற்கான கடிதங்கள்" என்ற அதேநூலில் 107ஆம் பக்கத்தில் குறித்துள்ளபடி, புதுச்சேரியில் தாம் தங்கியிருந்தகாலை, பிரஞ்சுக்காரர்களின் அன்பராக விளங்கியிருந்த 'மாஹமூத்கான்' செஞ்சியரசரிடமிருந்து பரிசு ஒன்றினைப்பெற்று, நடுவராக அமைந்து உதவிய பிரஞ்சு நாட்டிற்கு அளித்துள்ளார். அந்நூலின் 114ஆம் பக்கத்தில் குறித்துள்ளபடி, புதுச்சேரிக்கு வடக்கில் அமைந்திருப்பனவும், வருடத்திற்கு 300 சக்கரங்கள் [Chakras] வருவாய் தரக்கூடியனவுமாகிய "கோட்டைகுப்பம்", 'செஞ்சிக்குப்பம்' [Kottecoupom] [Singicoupom] என்னும் இருகிராமங்கள் நன்கொடையாக அளிக்கப்பெற்றுள்ளன. தேசிங்கு ராஜா அவர்களின் பிரதாபமிக்க நண்பரும், வீரமுடையவருமான மாஹமூத்கான், தமக்கு நண்பர்களாக விளங்கியிருந்த பிரஞ்சுக்காரர்களுக்குக் கோட்டைகுப்பம் முதலான கிராமங்களை வழங்கச்செய்திருப்பதை, அவர்கள் மறத்தல்கூடுமோ?.

இவ்வகையாய்ப் புதுச்சேரி உடன்படிக்கையானது கூடலூரில் ஆங்கிலேயர்களின் நிலையைச் செப்பஞ்செய்து வைத்ததுமன்னியில், பிரஞ்சுக்காரர்களுக்கும் இரண்டு கிராமங்களை வழங்குவித்துள்ளது. எனினும் இவ்வுடன் படிக்கையின் மிகப்பெரிய முக்கியத்துவமானது, பொது அரசியல் நோக்கத்தையே சார்ந்ததாகும். இந்திய வரலாற்றில் இந்த நிகழ்ச்சியைப்பற்றிய குறிப்பு மிகப் பெரிதும் அறிந்துகொள்ளத்தக்கதாகவே அமைந்துள்ளது. இங்கு முக்கியமாக நாம் கருத்திற்கொள்ளவேண்டியது யாதெனில், 1712ஆம் ஆண்டாகிய அக்காலத்தே பிரஞ்சு நாடும், இங்கிலாந்து தேசமும் போரிட்டுக் கொண்டிருந்தன என்பதேயாகும்.

சாதாரணமாகப் புதுச்சேரி அரசாங்கம், செஞ்சியரசரோடு ஆங்கிலேயர்கள் நடத்திக்கொண்டிருக்கும் போர் நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, அவ்வரசரோடு கூட்டுச்சேர்ந்து ஆங்கிலேயர்கட்குப் போர்ச்சுமையை அதிகரிக்கச்செய்திருக்கலாம். (கோட்டை - நாட்குறிப்பேடு பக்கம் 43 1712ஆம் ஆண்டு) இதற்குமாருக, ஹெபேர் [Hebert] என்பார் அவர்கட்குச் சமாதானத்தை வழங்கியுள்ளார். தூய்ப்ளேக்ஸ் [Dupleix] அவர்களின் அரசியல் இதற்கு நேர் எதிரிடையானது என்பதை நாம் இங்குக் கருதவேண்டும். 1752ஆம் ஆண்டின்போது பிரஞ்சு தேசமும், இங்கிலாந்தும் சமாதானமாக இருந்தகாலை, துய்ப்ளேக்ஸ் அவர்களின் படைவீரர்கள், ஆங்கிலேயர்களைத் தாக்குதற்கு ஷந்தா சாஹிப்பிற்கு உதவிபுரிந்துள்ளனர். 1712ஆம் ஆண்டில் ஹெபேர் அவர்கள் கடைபிடித்த அரசியல் கடப்பாடும் 1752ஆம் ஆண்டில் டுப்ளே அவர்கள் அனுசரித்த அரசியல் கடப்பாடும். அதாவது நாற்பதாண்டுகளுக்குப் பின்னர், முற்றிலும் நேர்மாருனவை. பிரஞ்சு நாட்டிற்கும், இங்கிலாந்து நாட்டிற்குமிடையில் சுட்டிக் காட்டியிருக்கவேண்டிய தொடர்புகளைச் சார்ந்தமட்டில் அவ்விரு அரசியல் கடப்பாடுகளுமே மாறுபட்ட நிலையில் ஒன்றுக்கொன்று சமமாகும். முற்றிலும் சமாதான காலத்தில் ஆங்கிலநாட்டிற்கு எதிராக இந்திய உள்நாட்டரசர்க்கு டுய்ப்ளே உதவிசெய்கின்ருர்; முற்றிலும் யுத்தம் நிகழும்காலத்தில் ஆங்கிலேயர்களோடு ஒத்துப்போகுமாறு இந்திய உள்நாட்டரசர்க்கு ஹெபேர் உதவுகின்ருர். எதிரிடையான நிலைமைகள் எனினும் அவை சமநிலையில் பொதுவானவைகள் எனலாம்.

# டூப்ளேயினுடைய ஒரு கல்வெட்டு

—※※—

புதுவை அரசாங்கத்திடலை அலங்கரித்துக்கொண்டிருக்கும் தண்ணீர்க்குழாய் மாளிகை லாட்டீன் மொழியிலான நான்கு கல்வெட்டுக்களைக்கொண்டு திகழ்கின்றது. நாடோறும் அவற்றின் எதிராகச் சென்றுகொண்டிருப்பவர்கள், அவற்றை அருகில்சென்று பார்ப்பதேயில்லை. அவற்றில் இரு பெரிய கல்வெட்டுக்கள் ஒன்று லாட்டீன் மொழியிலும், மற்ருென்று தமிழ் மொழியிலுமாக இருப்பவை. முத்திரைபாளையம் தண்ணீரினைப்பற்றிய வரலாற்றைக் கூறுகின்றன.

தென்னண்டைப்பக்கமாக இருகல்வெட்டுக்கள் லாட்டீன் மொழியிலுள்ளன, அவை, முதற்கண் நோக்கும்போதே, தம்மில் ஒத்துக்காணப்படுகின்றன. இடப்பக்கத்தது, தண்ணீர்க்குழாய் மாளிகை நெப்போலியன் III என்ற பேரரசர் ஆட்சிக்காலத்தில் எழுப்பப்பெற்றதென்று நமக்கு அறிவிக்கின்றது; வலப்பக்கத்தது புதுச்சேரியைப்பற்றியும், டூப்ளே அவர்களைப்பற்றியும் பேசுகின்றது. முப்பதாண்டுக் காலமாகப் புதுச்சேரியில் வசித்துவருகின்ற நான், மேற்குறித்த நான்கு கல்வெட்டுக்களுமே IIIஆம் நெப்போலியன் ஆட்சிக்காலத்தில் வெட்டப்பெற்றிருக்கலாம் என்றே எப்போதும் எண்ணியிருந்தேன். அதாவது அம்மாளிகை எழுப்பப்பெற்ற அதே காலத்தியன என்றும் மற்றும் அவை நான்குமே சமநிலையின்படி சிறிதே ஆர்வமூட்டத்தக்கனவாகலாம் என்றும் கருதியதுண்டு.

1948 ஆம் ஆண்டிறுதியில்தான், தெற்கில் வலப்பக்கத்ததான அக்கல்வெட்டை அதிகமும் கூர்ந்து கவனிக்கலுற்றேன். நான்காவது கல்வெட்டாகிய இது ஏனைய மூன்றுடன் சமகாலத்தியதாகலாம் என்று கருதிக்கொண்டிருந்த என்னுடையதவறு எனக்கு உடனே புலப்படலாயிற்று. உள்ளத்தைத் தொடவல்ல வந்கனைக்குரிய சின்னம் ஒன்று என்னெதிரில் இருப்பதையுணர்ந்தேன். டூப்ளே அவர்களின் கட்டளையின்பேரில், அன்னுருடைய தொண்டுகளில் ஒன்றினை நினைவுகூர்தற்பொருட்டு அப்பெருமகனூர்தம் முயற்ச்சியினுல் அக்கல்வெட்டு வெட்டப்பெற்றதாகும். இதோ அக்கல்வெட்டின் வரலாறு:

1741ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் தேதிய தமது கடிதத்தில், வணிகக்கழகத்திற்கு டூப்ளே கீழ்வருமாறு தெரிவித்துள்ளனர்; செப்டம்பர் மாத இறுதியில் இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்கள் தம்மிடம் போர்பிரகடனத்தை அறிவித்தனர் என்றும் மலையாளக்கடற்கரைப் பிரதேசத்தில் யாதொருவிதமான போர்ச்செயல்களிலும் ஈடுபடக்கூடாதென்னும் தமது விருப்பினை அதில் தெரிவித்திருந்தனர்என்றும். இவ்வுடன்பாட்டைச் சோழமண்டலக்கரைக்கும் அமுலாக்கவேண்டுமென்ற ஓர் ஏற்பாட்டினை அவர்கட்குச் சமர்ப்பித்திருப்பதாகவும் அதில் குறிப்பிட்டிருந்தனர். நமது ஏற்பாடுகளுக்கு அவர்கள் சம்மதியார்கள் என்று ஒருசிறிதும் நாம் ஐயுறவில்லை என்றும் அதில் கூறியுள்ளனர் (வணிகக்கழகத்தோடு புதுச்சேரி உயர்ஆலோசனைக் குழுவினர் நடத்திய கடிதப்போக்குவரவு – தொகுதி IV (1744 - 1749, பக்கம் - 84).

இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்கள் போரை விரும்பினார்களில்லை என்று கருதுவதற்கு டூப்ளே அவர்கட்குப் பல மிக நல்லமுகாந்திரங்களிருந்தன.

உண்மையிலேயே சென்னைக்கு அப்போது போதிய பாதுகாப்புச்சுவர்களில்லை; இருந்தவைகளும் பழமையானவை; ஒருமுற்றுகைக்கு நிலைத்துநிற்க அவற்றால் இயலாது; ஆங்கிலேயர்களும் இதனை அறிந்தவர்கள்தாம். ஆளுநர் "மோர்ஸ்" (Morse) என்பார் போரை விரும்பியது ஏன்? என்பதனைப் புரிந்துகொள்ளச் சிறிதும் இயலவில்லை.

1745ஆம் ஆண்டின் தொடக்க நாட்களில்தாம் இந்தியாவில் போர் ஏற்படலாம் என்று "டூப்ளே" புரிந்துகொண்டனர். கடற்கரைப்பகுதியை நோக்கியவாறு பாதுகாப்புச்சுவர்களின்றி அதுவரை புதுச்சேரி இருந்துள்ளது. மற்றும் சேமிப்புப்பண்டங்களின் இருப்பும் போதிய அளவில்லை. தாமே தேவையான பொருளையீந்து வேலைகளைத் தொடங்கச்செய்ய வேண்டுமென்று "டூப்ளே" முடிவு செய்தனர்.

1745ஆம் ஆண்டு, பிப்ரவரித்திங்கள் 11அம் தேதி (ஷை தொகுப்பு – பக்கம்-89) வணிகக்கழகத்தினர்க்குக்கீழ் வருமாறு எழுதியுள்ளார்: கழகத்தினர்க்கு ஜனவரிமாதம்

21ஆம் தேதிய நமது முடிவுகளின் காரணங்களைக்குறித்து அறிக்கைசெய்தோம். ஆகையால் கடற்கரைப் பகுதி மூடுதற்கான வேலைகளைச்செய்யுமாறு ஏற்பாடு செய்கின்றோம். அப்பக்கமாக நகரினைப்பாதுகாப்பு நிலையில் இருத்துகின்றோம்.''

1745ஆம் ஆண்டிறுதியில், கடற்கரைப்பிரதேசத்தின் முன்பாகவும், "போர்த் மரீன்" கடற்புற வாயிற்கதவும் பாதுகாப்புச்சுவர்களும் அமைக்கும்பணி முடிவுற்றது. அது குறித்து 1746ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் தேதியில் (ஷி பக்கம் 136) டுப்ளே பின்வருமாறு எழுதியுள்ளார்: "தற்போது கடற்கரைப் பகுதி முற்றிலும் மூடப்பெற்றுவிட்டது".

சின்னுட்களுக்குப்பின்னர், 1746ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் தேதியன்று, நாம் பெயர் அறிந்திராத ஒருவர் புதுச்சேரிக்கு வந்தனர், அன்னுர் கதையொன்று வரைந்தனர். அதனை அன்னுரிடமிருந்து பெற்று, சுமார் ஐம்பதாண்டுகட்குமுன் புதுச்சேரியில் கல்வித்துறைத் தலைவராய் விளங்கியிருந்த "வால்மரி" (Valmary) என்பார் பதிப்பித்துள்ளார். "1746ஆம் ஆண்டில் புதுச்சேரி" பிரஞ்சிந்திய வரலாற்றுப் பதிப்பாளர் [Societe de l'Histoire de l'Inde Francaise வெளியீடு] அந்நூலின் பக்கம் 5இல் "கடற்புறத்தில், தற்போதைய போர்த் தொடக்க முதற்கொண்டு அங்கு எழுப்பியுள்ள மிகப் பெரிய கோட்டைப்புறச்சுவர்கள், அப்புறத்தின் மூலமாய் நகரைக்கைப்பற்ற இயலாததாகச் செய்துள்ளன" என்று வாசிக்கின்றோம்.

அந்நூல் "டுப்ளே" அவர்கட்கு நிறை நீதிவழங்குகின்றது. அதன் 44ஆம் பக்கம் கூறுவதாவது; "அரசருடையவும், வணிககழகத்தினுடையவும் நல்ல அந்த பணியாளர், தாம் கைவிடப்பெற்ற நிலையிலிருப்பதைக் கண்டு, பிரஞ்சு நாட்டினின்று யாதொரு உதவியுமின்றி ஆங்கிலேயர்களின் அனைத்துவிதமான திட்டச்செயல்கட்கெல்லாம் தாம் ஈடுசெய்பவராய் நின்று நகரைத் துரிதமாகப்பாதுகாத்தற்கான செயலில் முனைந்துள்ளார். எங்கு யாதொருவிதமான பாதுகாப்புமிலதோ அங்கும், விசேடமாகக் கடற்கரைப்புறத்தில் எதிரி சுலபமாக இறங்க முயற்சிசெய்யக்கூடுமான அவ்விடத்திலும் நகரை வலுப்படுத்தியுள்ளார். பாதுகாப்புச் செய்துக்கொண்டிருந்த

களும் ஒழுங்காகச் சம்பளம் இதர படிவகையராக்கள் ஆகியவற்றை அளித்துவரச்செய்துள்ளார் இவற்றிற்குத் தேவைப்படும் தொகைகளைத்தாமே முன்பணமாக வணிகக்கழகத்தவர்க்கு வழங்கி அவர்களுடைய பொக்கிஷம் இங்கு நிறையவிருப்பதாக ஏனையோர் கருதுமாறு செய்துள்ளார். வணிகக்கழகத்தினரின் கஜானு சுமார் ஓராண்டுக்காலமாக வெற்ருக இருந்துவந்தும், டுப்ளே அவர்களின் பணப்பையே இவையனைத்திற்கும் உதவி புரிந்துவந்துள்ளது''

கடற்புறவாயிற்கதவு "போர்த் மரின்", கடற்கரையின் எதிர்ப்புறநடுவில் வலுப்படுத்தியிருந்த நுழைவுப் பகுதி, 1745ஆம் ஆண்டினிறுதியில்தான் முற்றுப்பெற்றது. டுப்ளேயின் ஆணையின் பேரில் ஞாபகார்த்தக் கல்வெட்டொன்று செதுக்கப்பெற்று அவ்வாயிலின் பக்கத்தில் பொறுத்தப்பெற்றது. நற்காலவசமாக அக்கருங்கற் பலகை பாதுகாக்கப்பெற்று, இவ்வாராய்ச்சிக்குப் பெரிதும் துணைசெய்யும் பொருளாக அமைந்து விளங்குகின்றது.

அக்கல்வெட்டு உயர்ந்த, செம்மையான லாட்டின் மொழியில் அமைந்துள்ளது. அதன் வாசகமொழிபெயர்ப்பினைச்செய்து எனக்குத்தருமாறு "கலோனியல் காலேஜ்" என்னும் அப்போதைய கல்லூரியில் இலக்கியப் பேராசிரியராக விளங்கியிருந்த "வெர்மோ கொஷி" (Vermot Gauchy) அவர்களை வேண்டினேன்.

அக்கல்வெட்டின்மேல் இறைக்குறியாக முக்கோணம் காணப்படுகின்றது. அம்முக்கோணத்தினின்று ஐந்து ஒளிவட்டங்கள் வெளிப்பட்டு, நாடா ஒன்றை வெளிச்சப்படுத்துகின்றன. அந்நாடா குறிக்கோள்மொழியாக "இறைவனின் துணையின் சார்பில்" எனப்பொருள்படும் லாட்டின் வாசகம் "Omnipotentis Sub tutela" என்று பொறிக்கப்பெற்றுள்ளது. நாடாவின் அடியில் "மதிற்சுவர்களைத் தாக்குவோர்தம் பெருமுயற்சிகள் வீணுகும்" என்று பொருள்படும் லாட்டின் வாசகம் "Frustra laborabunt qui oppugnabunt ca edificia" என்று பொறிக்கப்பெற்றுள்ளது.

பின்னர்க்கல்வெட்டின் முழுத்தவாசகம் லாட்டின் மொழியில் பின்வருமாறு தொடங்குகின்றது:

Pondicheraeos Supplices Colonos
Benigne Exaudiens
Millesimi Septigentisimi Quadragesimi Quinti
Anni Securitatem Nee Non Ad Decorem
Martimas Hasoe Arces Meeniaque
Fundavit Curavit Perfecit
Prof Francorum Rege Ludevice XV
Et Ejusdem Regni Pre Indiarum Societate
Gubernator Vigilantissimus
Josephus Franciseus Dupleix.

புதுச்சேரிக் குடிமக்களின் வேண்டுகோளின்பேரில், 1754ஆம் கருணையாண்டின்போது, நகரின் பாதுகாப்பிற்காகவும், அதேபோது அதனை அழகுசெய்தற்காகவும், இக்கடற்புறக்கதவும், கடற்புற மதிற்புறச்சுவர்களும், பதினைந்தாவது லூய் என்ற பிரஞ்சு நாட்டரசரின் பெயரால் அவர் ஆட்சியின்கீழ், மற்றும் "இந்தியா நாட்டில் வணிக நிறுவனம்" என்றதன் பெயராலும் மிக்க விழிப்புடைய ஆளுனராகத் திகழ்ந்த "ழொசேப் பீரான்சுவா துய்ப்ளேக்ஸ் என்பாரால் உருவாக்கி, கட்டி, முடிக்கப் பெற்றன." இவ்வாசகம் அதன் மொழிபெயர்ப்பாகும்.

இந்தப்படிக்கு நமக்கென்று சிலாசாஸனம் ஒன்றும் இருந்து வருகின்றது. துய்ப்ளேக்ஸ் அவர்களின் நேரடியான தொடர்புடைய ஞாபகார்த்தம் ஒன்று இஃதாகும். இவ்வாறு நாம் கூறுதற்கு மூன்று காரணங்கள் உண்டு;

1) டுப்ளே அவர்களின் கட்டளையின் பேரில் இக்கல்வெட்டு பொறிக்கப் பெற்றுள்ளது.

2) டுப்ளே அவர்களின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்ருகத்திகழும் கோட்டை மதிற்புறச்சுவர்களின் நினைவுச்சான்ருக இக்கல்வெட்டு விளங்குகின்றது.

3) தற்போது இக்கல்வெட்டு பதிக்கப்பெற்றுள்ள மாளிகை டுப்ளே அவர்களின் கடைசிச்சிப்பந்திகளால் கட்டப்பெற்றதாம்.

இதுவரை புதுச்சேரியில் டுப்ளே நினைவைக்குறிக்கும் கல்வெட்டொன்றுகூடக் காணப்பெற்றிலது. அதனால், அந்த நமது தேசிய வீரரின் பெருந்தொண்டுகளில் ஒன்றுகூட மிச்சப்படுத்தப்பெறவில்லை என்று எண்ணக்கூடுமாயிருந்தது. தற்போது அவருடையதென்று ஒன்று நம்மிடம் உள்ளது. எத்துணையோ அளவில் அவர் நேசித்துவந்த இவ்வூர் புதுச்சேரியிலிருந்து அன்னார்தம் பெயர் மறைந்து போகும் என்று சொல்லுதற்கியலாது. இக்கல்வெட்டு மிகவும் விலைமதிப்பரிய பவித்ரமான பொருளாக நமக்குத் தோன்றுகின்றது. நமது நகரின் பாதுகாப்பிற்கும், அழகிற்குமாக மேற்கொண்ட ஒரு பணியினை நமக்கு அது நினைவுறுத்திக்கொண்டிருக்கின்றது. தமது ஆணையின் பேரினல், அவர்தம் பெயராகிய "ஜொசேப் ப்ரான்சுவா தூய்ப்ளேக்ஸ்" என்பதை அக்கல்வெட்டுத் தன்பால்கொண்டு திகழ்கின்றது.

—※※—

# பிரஞ்சிந்திய ஸ்தலங்கள்

# 1935ஆம் ஆண்டில் புதுச்சேரி

பேரழகுவாய்ந்த குடாக்கடலின் முகப்பில் அமைந்திருக்கும் பம்பாய் நகரைப்போன்றும், ஒரு பெரிய நதியின் கடற்சங்கமத்தில் அமைந்திருக்கும் கல்கத்தா நகரைப் போன்றும், இந்தியாவின் பெருவழிப்பாட்டையில் அமைந்திருக்கும் டெல்ஹி நகரைப்போன்றும் புதுச்சேரி அமைந்தில்லை. கப்பலிலிருந்து அதன் கடற்கரைப்புறத்தில் இறங்குவது பிரயாணிகளுக்குப் பெரிதும் கஷ்டமாகவே இருந்துவந்துள்ளது. அதன் சுற்றுப்புறங்களும் செல்வ வளமுள்ளவைகள் அல்ல. எனவே, இயல்பாக ஒரு பெரிய துறைமுக நகராகவோ, ஆக்கத்தொழில் வளமுள்ளவொரு நகராகவோ, உலக வணிகச்சந்தை நகரங்களில் ஒன்றாகவோ பரிணமிக்கவியலாத நிலையில் அமைந்துவிட்டது. எனினும், இயற்கை வசதிகள் மிகப் பெருமளவில் புதுச்சேரிக்கு உண்டு; நீர் அங்கு அபரிமிதமாகவும் தூயதாகவும் அமைந்துள்ளது. விசாலமான நிலையில் பெரிய இல்லங்களை அங்கு அமைத்துக்கொள்ளவியலும்; இருக்குமிடத்தில் இருந்தே சுண்ணும்பு வேண்டுமளவிற்குப்பெறலாம்; அங்குக்கிடைக்கும களிமண் செங்கற்களைத்தயாரித்தற்குப் பெரிதும் உதவுகின்றது; மேலும் அப்பிரதேசம் பெரிதும் தூய்மையானது. வாழ்க்கைத்தரமும் கிராக்கி நிலையில் அங்கு அமைந்தில்லை; குடிமக்களும் மிக்க இனிய இயல்பினர்; இவையனைத்தும் இணைந்து புதுச்சேரியை அமைதியான, இன்பமான வாழ்க்கையைத் தரவல்லதாக அமைத்துத் துணைபுரிகின்றன.

வெகு அண்மைக்காலத்ததான கண்டுபிடிப்பு ஒன்று புதுச்சேரியின் வரலாற்றில் ஒரு விநோதமான தெளிவை உண்டாக்கியுள்ளது. வேதபுரீஸ்வரர் ஆலயத்தினின்றும் எழுத்துக்கள் பொறித்த சிலகற்கள் பலகைகளாகக் கிடைத்தன. அவை இந்நகரத்தைப் பெரிதும் பழமையானதென்றும், 10ஆம் நூற்றாண்டின்போதேயே இது

விளங்கியிருந்ததாகவும் புலப்படுத்தின. இதன்வாயிலாகத் தொன்மையான பழங்காலந்தொடங்கியே, புதுச்சேரி கலாசாரம் மிக்கதாகத் திகழ்ந்திருந்ததென்றும், பல்கலைக் கழகம் ஒன்றின் தலைமைத்தானமாக விளங்கியிருந்த தென்றும், அது "வேதபுரி" என்றபெயரால், அதாவது வேதமோதிய அறிஞர்கள் வாழும் ஊர்'' என்னும் பொருள்பட வழங்கப்பெற்றிருந்ததென்றும் அறிய நேர்ந்தது.

1673ஆம் ஆண்டில் புதுச்சேரியில் குடியேறியவராகக் கொள்ளக்கூடிய முதல் பிரஞ்சு நாட்டவரான "பெல்லான்ழே தெ லெஸ்பினே" (Bellanger de Lespinay") என்பார் தாம் குடி புகுந்த இல்லத்தைப் பொருத்த வளவில் மன நிறைவு கொண்டிருந்தார் என்பது "எனக் களிக்கப் பெற்ற வீடு போதுமான அளவு அழகியதாக அமைந்திருந்தது" என்று அவர் கூறியுள்ளதைக்கொண்டே அறியக் கிடக்கின்றது. "பிரான்சுவா மர்த்தேன்" என்பார் தாமும், இந்நகரை வெகுவிரைவில் விரும்பத் தொடங்கினர் என்றும் அறிகின்றோம். இப்பிரதேசத்தின் வெப்பநிலையினையும் சகித்துக்கொண்டு இந்நகரின் மீது அன்பு கொண்டிருந்தனாலேயே, பிரஞ்சு நாட்டு மக்களும் இங்குக் குடியிருந்துவர இயன்றது, இச்சூழலின் ஆற்ற லால், பிரஞ்சு நாட்டவர்கள் புதுச்சேரியிலிருந்த தமது இல்லங்களை ஆராய்ச்சி செய்யும் நிறுவனங்களாக அமைத் துக் கொண்டிருந்தனர் எனலாம். இந்நகரிலிருந்தே இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கும், அவற்றின் கலைகள், பழக்கவழுக்கங்கள், மொழி, தத்துவங்கள் ஆகிய வற்றில் ஐரோப்பியர்கள் அனைவருக்கும் ஆராய்ச்சி நாட்டம் உண்டாதலின், இவை காரணமாக அப்பிரஞ்சு நாட்டவர்கள் சென்று வருவார்கள் என்றும் அறிய இயல்கின்றது.

அரசியலைச்சார்ந்த அளவில் டுப்ளேயவர்களும் புஸ்ஸி யவர்களும் தத்தம் பிரசித்தமான முறைகளைப் புதுச்சேரி யிலிருந்து கொண்டுதான் வகுத்துச் செயல்படுத்திக் கொண்டிருந்தனர் என்பதையும், அம்முறைகள் இந்திய சாம்ராஜ்யம் முழுவதையுமே பிரஞ்சு நாட்டின் ஆதிக் கத்திற்கு அளித்திருக்கக்கூடுமென்பதையும் அனைவரும் அறிந்திருந்தனர். ஆனால், புதுச்சேரி அறிவாராய்ச்சி, தத்துவ ஆராய்ச்சிப் பணிகளுக்குத் தேர்ந்த தகுதியான

இடமாக அமைந்திருத்தலைக்கண்டு எண்ணற்ற அறிவாளிகளும், எழுத்தாளர்களும், சித்தாந்திகளும் ஆங்கு அமைதியாகத் தங்கி வாழ்ந்துகொண்டிருந்ததை மட்டிலும் அவ்வளவருமே அறிந்ததில்லை போலும்.

இக்கட்டுரை வரைகின்ற இக்காலத்தில் பிரஞ்சு நாட்டிற்கு ஓய்வெடுத்துக்கொள்ளும் இவ்வொருவாசஸ்தலம் மட்டிலுமே இன்றும் சிறப்பாக இருந்துவருகிறது. எனினும் இங்கிருந்து கொண்டே பிரஞ்சுநாடு தன் இந்திய ஆராய்ச்சியை மேற்கொண்டு செல்லலாம். இந் நோக்கின்படி புதுச்சேரியின் பயன் அளப்பரியதாகும். இங்கு ஆராய்ச்சி நிறுவனங்களைத் தோற்றுவித்து, 'கிழக்கோடி நாடுகளின் பிரஞ்சுக்கல்வி மன்றத்துடன்'' (Ecole francaise d' Exreme Orient) அவற்றை இணைத்து பணியாற்றுதல் பெரிதும் நன்மை விளைவிக்கும். தொன்மைக் காலத்தில் ''வேதபுரி'' வேத அறிஞர்களின் நகரமாகத்திகழ்ந்தது போன்றே, 18ஆம் 19 ஆம் நுற்ருண்டுகளின் போதும் உண்மையாகவே விளங்கியிருந்திருக்குமானல், அந்நிலையிலேயே தற்போதும் அது இருந்து கொண்டிருக்கின்றது எனலாம். இதனை உறுதிப்படுத்திக் கொள்ள ''1935 ஆம் ஆண்டில் புதுச்சேரி'' என்பதை விளக்கி வரைவது போதியதாகும்.

புதுச்சேரி வாணிப முன்னனி நகரமன்ற; அதன் வெளித்துறைமுகத்தில் சிலபடகுகளே காணப்பெறும்; மற்றும் அது ஓர் ஆக்கத்தொழில் நகரமுமன்று; பருத்தி துணிநெய்யும் சில ஆலைகளே அங்குண்டு. ஆனல், புதுச்சேரி நகரச்சீரமைப்பில் ஓர் அதிசயமாகத் திகழ்கின்றது; இந்தியாவின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் இந் நகரைக் காணவருபவர்கள் பலராவர். இங்கு வீதிகள் யாவும் பெரும்பாலும் நேர்க்கோட்டமைப்பில் வகுக்கப் பெற்றுள்ளன. அவற்றிலுள்ள வீடுகள் மாளிகைகளையொப்பச் சமைக்கப்பெற்றுள்ளன. அவற்றின் கலையை 19ஆம் நூற்ருண்டினதாகக் கொள்வர் கட்டிட வல்லுநர்கள். ஆளுநர்தம் மாளிகையின் முகப்பு பேரழகு வாய்ந்ததாகும்; இங்குள்ள நீதிமன்றம் அக்காலத்திய அழகு பொருந்திய இல்லம் போன்று திகழ்ந்ததாகும்.

நகரச்சீரமைப்பின் ஆர்வம் இக்காலத்திலும் பெரிதும் விறுவிறுப்பாக இங்குப்பெருகியுள்ளது. இப்பொழுது

அரசினர் மைதானத்தைத் திருத்தியமைத்துக்கொண்டு வருகின்றனர். இந்த அமைக்கப்பெறும் புற்றரைகளும், நிழல்பரவிய சாலைகளும், நீர் ஊற்றும் இதனை ஒரு கவர்ச்சிகரமான பொதும்பராக இனித் திகழச்செய்யும். உழைப்புமிக்கும், அமைதி நிறைந்தும் உள்ள இந்நகரில் உலாச்செல்வோம. சுத்தமான கலையமைப்பைக் கொண்டுள்ள இந்து கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் நுட்பங்கள் நிறைந்த கருங்கற்றூண்களின் சூழலில் பார்ப்போரின் கண்களுக்குக் கடற்புறத்தெதிரில் சிலையொன்று தோன்றும். இச்சிலை வடிவிலுள்ள டுப்ளே ஒரு போர் வீரனுடைய பாவனையில் தோன்றுகின்றாரில்லை. அன்னாருடைய நோக்கு ஒரு பெரிய அமைப்பாளருடையதைப் போன்று காண்கினறது. (இன்றைா் அச்சிலையை அங்குக் காண்டற்கியலாது. காணவிரும்புவோர் புதுச்சேரியிலுள்ள பிரஞ்சு நாட்டுப் பிரதிநிதியவர்களின் மாளிகையிலுள்ள தோட்டத்தில் அச்சிலையைக் காணலாம் என்று தெரிகின்றது) பின் தென்திசை நோக்கிச் சென்றால் அரசினர் நூலகத்தைக் காணலாம். (இதுவும் இப்போது இடம் மாறிவிட்டது. அங்கு வரலாறு, இலக்கியத தொடர்புடைய பழமைபான ஏட்டுப் பிரதிகள், அன்பு நெறி சார்ந்த கரங்களின் பாதுகாப்பில் இருந்து வருகின்றன புதுவை வரலாற்றுச் சங்கத்தின் தலைமையகமும் அந்நூலகத்தேயே அமைந்துள்ளது. இக்கட்டுரை வரைகின்ற காலத்திய அதன் தலைவர் "எத்மோந் கோதோர்" (Edmond Gaudart) ஒவ்வோராண்டிலும் அறிவுக்களஞ்சியமான வரலாற்று நூல்களை வெளியிட்டு வந்துள்ளார். சற்றுத் தொலைவில் "சம்மனசுகளின் மாதா தேவாலயம்" அமைந்திருப்பதைக் காணலாம். அத்தேவாலயத்தின் தோற்றம் ஆன்மாவை உயர்த்தும் பான்மையதாய்ப் பொலிகின்றது. அதன் பங்கு சுவாமியார் வந்தித்தற்குரியதந்தை "ப்ளேஜ்" (Blaise) என்பார் "விதைப்பவன்" என்று பொருள்படும். "லெ செம்ஏர்" (Le Semeur) என்னும் திங்களிதழை வெளியிட்டு வந்துள்ளார். அத்தேவாலயத்திற் கண்மையில் பிரஞ்சு கல்லூரி (Le College), மாணவ மாணவியர் தங்கிப் பயிலும் பிரஞ்சு உயர்நிலைப்பள்ளி (Pensionnat), உயர்நீதி மன்றம் (Cour d'Appel) அமைந்திருந்தன. உயர்நீதி மன்றத்தில் சட்டக் கல்லூரியும் நடைபெற்று வந்துள்ளது. பொது மருத்துவமனை வைத்தியக் கல்லூரியின் தலைமை ஸ்தானமாகவும் விளங்கி வந்துள்ளது;

அரசினர் மருந்தகம் தொழு நோயினைக் குணப்படுத்து கின்ற (chaulmougra) விதைகளைக்கொண்டு உள்நாட்டுச் செக்குகளின் உதவிகொண்டு சுகாதார முறைப்படி ஆட்டியெடுக்கப்பெற்ற எண்ணெயினைப் பிரஞ்சுக் குடியேற்ற நாடுகள் அனைவற்றுக்கும் வழங்கி வந்துள்ளது. சற்றுத் தொலைவில், இந்துக்கள் வாழ்கின்ற நகர்ப்பகுதியில் கிறித்துவ குருமார்கள் நடத்திக்கொண்டிருக்கும் "செமினர்" (Seminaire) என்னும் உயர்நிலைப்பள்ளியும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இவ்வாருக இந் நகரின் தென்பால் முழுதுமே கல்விக்கெனப் பெரிதும் ஈடுபாடுகொண்டுள்ளது

புதுச்சேரி தன்பால் வெளிநாட்டவர்களை யீர்க்கும் இயல்பினதாகும்; வடபாரிசத்திலுள்ள பல வீடுகள் அவர்களால் வாழ்ந்து வரப்பெற்றவையாகும். தமக்கு விருப்பந்தரவல்லதான ஒரு குடியிருப்பைத்தேர்ந்து கொள்ளும் எண்ணத்துடன் அவ்வரசர்களானோர் அவ்வில்லங்களை அமைத்துக்கொள்ளப் புதுச்சேரி நகரையே தேர்ந்தெடுத்துக்கொண்டிருந்தனர். ஸ்ரீ அரவிந்தரும் அங்கு ஓர் ஆஸ்ரமத்தை நிறுவிக்கொண்டனர். அவ்வாஸ்ரமத்தில் கணக்கற்ற இந்தியர்களும் சில ஐரோப்பியர்களும்கூட, யோகசாதனங்களைச் செய்து பழகுவாராய் ஒன்றி வாழ்ந்து வருகின்றனர்.

பரிச்சேதமில்லை! புதுச்சேரி மீளா உறக்கத்திலிருக்கும் ஒரு நகரம் அன்று, அஃது அமைதி ததும்பும் ஒரு நகரம். ஆயிரமாண்டுகளுக்கு மேலாகத் தொடங்கியே அறிவுத்துறைக்கான பணிகளில் அது தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளது. புதுச்சேரியைக்காண வருகின்ற பிரயாணிகளே! ஆடம்பரம், உல்லாசம் ஆகியவற்றுக்கான ஓர் இடத்தைக்கூட நீங்கள் அங்கு காண்டற்கியலாது; வாணிபம், ஆக்கத்தொழில் ஆகியவை மிக்கு நடைபெறும் நகரங்களிலுள்ள விறுவிறுப்பான ஆரவாரமும் அந்நகரில் காண்டற்கியலாது. "புதுச்சேரி", அதுதான் "வேதபுரி", மெய்ப்பொருளின் ஆய்வுக்கும், தியானத்திற்கும் அமைந்த நகரம்.

சமீபத்திய

வரலாற்றுச் சங்க வெளியீடுகள்.

| | | |
|---|---|---|
| கல்வெட்டுகளில் புதுவைப் பகுதிகள் | | ரூ. 12/- |
| Bibliography of the French in India | | Rs. 55/- |
| Revue Historique | Vol. X | Rs. 20/- |
| " " | Vol. XI | Rs. 20/- |

மேற்கண்ட நூல்களுக்கு

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

செயலர்
புதுவை வரலாற்றுச் சங்கம்
புதுவை.

Secretary
Historical Society of Pondicherry.
Pondicherry.